"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவஎக்காளம்

''உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை'' (சங்கீதம் 119 : 165)

''உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்'' (சங்கீதம் 119 : 92)

''அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு'' (சங்கீதம் 19 : 11)

Vol. No. 38 ஆகஸ்ட் - அக்டோபர் 2005 No. 8 to 10

ஒரு கர்த்தருடைய பிள்ளை தனது உள்ளத்தில் ஏவப்பட்டு ஒரு அருமையான ஆங்கில கிறிஸ்தவப் புத்தகத்தை எனக்கு அனுப்பியிருந்தார்கள். ''கிறிஸ்தவ நற்பணி இயக்கம்'' (Operation Mobilization) என்ற கிறிஸ்தவ புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அந்த புத்தகத்தின் பெயர் ''தேவனுடைய வார்த்தையானது ஈடு இணையற்றது, வசீகரமானது, நித்தியமானது'' என்பதாகும். அந்தப் புத்தகம் எனக்கு மிகவும் ஆசீர்வாதமாகவிருந்தது. எனக்கு ஆசீர்வாதமாக இருந்த அந்தப் புத்தகத்தின் ஒரு சில பகுதிகளை உங்களுடைய ஆத்துமத்தின் ஆசீர்வாதத்துக்காக மொழி பெயர்த்து கீழே தருகின்றேன். கர்த்தர் அதை உங்களுக்கு ஆசீர்வதித்து தந்தருள்வாராக. அந்தப் புத்தகத்தின் ஆக்கியோன் தனது புத்தகத்தைக் குறித்து இவ்விதமாகக் கூறுகின்றார்:-

''இந்தப் புத்தகம் உங்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றை வழங்குகின்றது. அந்த அழியா பொக்கிஷம் இந்தப் புத்தகத்தில் அல்ல மற்றொரு புத்தகத்தில் உள்ளது. அந்தப் புத்தகத்துக்காகத்தான் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்த எளிய புத்தகம் உங்களைப் போன்ற மக்கள் தேவனுடைய வேத புத்தகத்தை எவ்வாறு கண்டு கொண்டார்கள் அல்லது வேத புத்தகம் அவர்களை எவ்வாறு கண்டு பிடித்தது என்பதைக் குறித்துக் கூறுகின்றது. இதில் காணப்படும் செய்திகளை ஜெபத்தோடு வாசித்து உங்கள் வாழ்வின் முடிவை ஆசீர்வாதமாக்கிக் கொள்ளுங்கள்.

மரண வேதனை

இந்த உலகத்தின் ஒவ்வொரு காரியமும் தங்கள் இணைப்பிலிருந்து நழுவிக் காணப்படுகின்றது. மக்கள் மக்களைக் கொல்லுகின்றனர். எங்கும் இனக் கலவரங்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், குடும்பங்கள் இனக்கலவரங்கள் காரணமாக பூண்டோடு படுகொலை செய்யப்படுகின்றனர். குடிமக்கள் அவர்களுடைய வீடுகளிலிருந்து துரத்தியடிக்கப்படுகின்றனர். இந்த பேரழிவுகளைத் தடுத்து நிறுத்த அரசியல் தலைவர்களால் முடிவதில்லை. காரணம், அவர்களும் நம்பகத்தன்மையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். 50 சதவீதத்துக்கும் கூடுதலான திருமணங்கள் விவாக ரத்தில் முடிவடைகின்றது. கணவன் மனைவிக்குள் உண்மை கிடையாது. தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளைப் பகைக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள பெரிய கம்பெனிகளில் ஏற்படும் ஒரு வேலை நிறுத்தம் 2 ஆயிரம் கோடி டாலர்கள் வரை நஷ்டப்படுத்திவிடுகின்றது. எத்தனை பேரிழப்புகள் பாருங்கள்!

இந்த உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் கடந்து மறைந்து கொண்டிருக்கின்றது. நாம் நமக்குச் சொந்தமான உடமைகள், செல்வங்கள், ஆஸ்தி ஐசுவரியங்கள் என்று வீராப்பு பேசிக் கொள்ளுபவைகள் எல்லாம் சொற்ப காலத்துக்கு நாம் கடனாகப் பெற்றவைகளேயன்றி பிறிதொன்றுமில்லை. நாம் நமக்குரியதென்று எண்ணி மிகவும் போற்றிப் பாதுகாப்பவைகள் எல்லாம் மற்றவர்களுக்கு நாம் விட்டுவிட்டுச் செல்லுபவைகள் என்பதை நாம் முழுமையாக மறந்து விடுகின்றோம். என்னுடைய வீடு என்று நான் ஒரு தடவை சொன்ன இடம் இப்பொழுது வெறும் சமதரையாக உள்ளது. அந்த வீடு புள்டோசர் வைத்து தகர்க்கப்பட்டு மட்டப்படுத்துவிட்டது. எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது.

ஆம், உண்மைதான், உலகில் காணப்படுபவைகள் அனைத்தும் நிலையானவையல்ல. அவைகள் அனைத்தும் கடந்து செல்லக் கூடியவைகள். அவைகளை நாம் பிடித்து வைத்திருக்க முடியாது. ''நட்சத்திரங்களுக்கு கீழாக அத்தனை தாழ்வாக மாந்தர் தங்கள் வீட்டைக் கட்டியதே தவறாகிப் போய்விட்டது'' என்று ஒரு புலவன் பாடினான். இந்த உலகத்தில் வாழ்ந்த மன்னர்களுக்கெல்லாம் மன்னாதி மன்னனாக வாழ்ந்த புகழ்பெற்றவனும் வலிமை மிக்கவனுமான சாலொமோன் மாமன்னர் ''மாயை, மாயை எல்லாம் மாயை'' (பிரசங்கி 1:1) என்று கூறிவைத்துச் சென்றுவிட்டார்.

ஆசீர்வாதம்

தாம் சிருஷ்டித்த ஜனங்கள்தான் தேவனுக்கு முக்கியமானவர்கள். ஆகையால்தான் அவர் தமது ஒரே பேரான குமாரனை தந்தருளி இவ்வளவாய் நம்மேல் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16) அத்துடன் ஒருவராகிலும் கெட்டுப் போவதும் அவருடைய விருப்பமல்ல (2 பேதுரு 3:9)

ஆபிரகாம் தன்னளவில் அதை அறிந்து கொண்டவராக அந்நிய தேசத்திலே பரதேசியாக சஞ்சரித்தார். அவரது கண்கள், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை நோக்கியிருந்தன. ''பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கின்றோம்'' என்றார் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் (2 கொரி 5:1).

''பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை'' (மத் 6 : 19, 20) என்று அருமை இரட்சகர் சொன்னார்.

ஆண்டவர் இயேசுவின் பேரிலுள்ள நம்பிக்கயானது நிரந்தரமானது. தேவனைவிட்டுத் தூரமாக உங்களுக்கு ஆஸ்தி, ஐசுவரியம், வெற்றி, புகழ்ச்சி மற்றும் சிறப்பான சமுதாய அந்தஸ்துகள் போன்றவை திரள் திரளாக இருக்கலாம். ஆனால் உங்களுக்கு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கை மாத்திரம் இல்லாதிருக்கும் பட்சத்தில் மேற்கண்ட உலக மேன்மைகளால் யாதொரு பயனும் கிடையாது. தேவன் தமது கிருபையால் தமக்குச் சொந்தமாகத் தெரிந்து கொண்டிருக்கும் தமது விசுவாச மக்களை அதிகமாக நேசித்து அவர்களுக்கு நித்திய இரட்சிப்பைக் கொடுத்திருக்கின்றார். அதின் காரணமாகவே அவர்கள் அந்த மகிமையின் நம்பிக்கையைக் கொண்டிருக் கின்றார்கள்.

''சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைக் குறித்து'' (கெலோ 1 : 22) பவுல் சொல்லுகின்றார். சுவிசேஷத்தினாலேயன்றி வேறொன்றினாலும் நமக்கு நம்பிக்கை தரவியலாது. இந்த நம்பிக்கையை ''நல் நம்பிக்கை'' (2 தெச 2 : 16) என்றும் ''ஜீவனுள்ள நம்பிக்கை'' (1 பேதுரு 1 : 3) என்றும் ''ஆனந்த நம்பிக்கை'' (தீத்து 2 : 13) என்றும் வேதம் விவரித்துக் கூறுகின்றது. நம்பிக்கையானது சுவிசேஷத்தின் அலங்கார மகுடம் ஆகும்.

பரிசுத்தவான் டாக்டர் சாமுவேல் ஜாண்சன் முழுமையாக குருடராகிப் போன நிலையில் வியாதிகளால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொண்டிருந்தார். ''மானிட வாழ்க்கையானது ஒரு மா பெரும் போராட்டமாகும். அந்த துயரம் நிறைந்த போராட்டத்தில் நாம் ஒரு ஆனந்தத்திலிருந்து மற்றொரு ஆனந்தத்திற்கல்ல. ஒரு மகிமையின் நம்பிக்கையிலிருந்து மற்றொரு மாமகிமையின் நம்பிக்கைக்குச் சென்று கொண்டிருக்கின்றோம்'' என்று அவர் எழுதினார். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும், நல் நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்தினாலும், நற்கிரியையிலும்

உங்களை ஸ்திரப்படுத்துவாராக'' (2 தெச 2 : 16 - 17) என்று பவுல் மறுபடியும் கூறுகின்றார்.

மண்ணின் மாந்தர் தங்கள் வாழ்நாட் காலம் நீண்ட நெடுங்காலம் இந்த உலகத்தில் நீடித்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். கிறிஸ்து இரட்சகர் மேல் கொள்ளும் நம்பிக்கையானது மரணத்தின் மேல் வெற்றி கொள்ளுகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் நிருபத்தில் எழுதியுள்ள ஒரு வசனம் தனி மனிதனால் எழுதப்பட்டுள்ள மாபெரும் தேவ தூது என்று கருதப்படுகின்றது. ''தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது'' (ரோமர் 15 : 4) என்பதே அந்த வசனமாகும்.

முடிவாக

''பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோசத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக'' (ரோமர் 15 : 13)

''ஆட்டுக்குட்டியானவரின் பரிசுத்த இரத்தத்தின் சுத்திகரிப்பின் மூலமாக கிடைக்கக்கூடிய கல்லறைக்கு அப்பால் உள்ள இந்த ''மகிமையின் நம்பிக்கையை'' முழுமையாக நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? உங்கள் காரியம் என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், எனது சரீரத்தின் ஒவ்வொரு தசை நாரும், அங்கமும் இந்த மகிமையின் நம்பிக்யையில்தான் ஆனந்தமாக குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றது'' என்றார் ஜேம்ஸ் டாப்ஸன் என்ற தேவ பக்தன்.

ஏசாயா தீர்க்கன் நமக்காக இதை இந்த தெளிவான வார்த்தைகளிலே கொடுத்துள்ளார். ''மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள், மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே விழித்துக் கெம்பீரியுங்கள், உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனி போல இருக்கும், மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்'' (ஏசாயா 26 : 19)

எனது மனைவியின் சகோதரன் பால் ஒரு தேவனுடைய பிள்ளை. பால் தனது ஆப்த நண்பர்களான இருவருடைய கோர மரணங்கள் தன்னை எப்படியாக பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்பதை 1992 ஆம் ஆண்டு

எங்களிடம் கூறியிருக்கின்றான். பாலும், அவனது நண்பர்கள் இருவரும் டெல்காட்டோ தொழிற் கல்விப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் ஆவார்கள். பால் அந்தப் பள்ளியில் 34 ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தான். வாழ்க்கையில் வெறுப்புற்று அவனது நண்பர்கள் இருவரும் தற்கொலை செய்து கொண்டுவிட்டனர். வாழ்க்கையில் என்று ஆண்டவர் இயேசுவின் மேல் நம்பிக்கை இல்லையோ அன்றே அது இருள் சூழ்ந்து முற்றும் நிலை குலைந்து விடுகின்றது.

இந்த எனது சிறிய புத்தகம் உன்னை பரிசுத்த வேதாகமத்துக்கு நேராக உந்தி தள்ளுவதாக. அந்த வேத புத்தகம் இந்த முழு உலகத்துக்குமான ஒரே ஒரு நிச்சயமான நம்பிக்கையை உனக்கு முற்றும் இலவசமாக அளிக்கின்றது. உனது கிறிஸ்தவ வாழ்வின் விடிவெள்ளி நட்சத்திரம், உனது கடைசி வார்த்தைகள் ''எனது நம்பிக்கை, இரட்சகர் இயேசுவின் கல்வாரி இரத்தத்திலும் அவருடைய நீதியிலுமேயன்றி வேறொன்றிலும் கட்டப்படவில்லை'' என்பதாக இருப்பதாக.

பால்டாடோனா - ஒரு சாட்சி

1947 ஆம் வருடம் நான் அர்ஜெண்டினா நாட்டில் பால்டாடோனா என்ற ஒரு மனிதரை சந்தித்தேன். பொலிவியா நாட்டிலிருந்து அவர் அங்கு வந்திருந்தார். தேவனுடைய வார்த்தை தன்னை எப்படி மாற்றியது என்பதைக் குறித்து அவர் என்னிடம் சொன்னார். அவர் இளைஞனாக இருந்தபோது அவருடைய பொலிவியன் கிராமத்துக்கு 1905 ஆம் ஆண்டு வேதாகமங்களையும், புதிய ஏற்பாடுகளையும் ஒரு மனிதர் விற்பனை செய்யக் கொண்டு வந்திருக்கின்றார். அதில் புதிய ஏற்பாட்டுடன் சங்கீதங்களும் சேர்ந்த ஒரு கையடக்கமான பாக்கெட் அளவு புதிய ஏற்பாட்டை பால்டாடோனா விலை கொடுத்து வாங்கினார். அதை அவர் வாசிக்காதபடி ஒரு உயரமான துணிமணிகள் வைக்கும் மர அலமாரியில் வைத்துவிட்டார். சில ஆண்டுகளாக அது அங்கேயே இருந்தது. இதற்கிடையில் பால்டாடோனா புகைப் பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையானார்.

ஒரு நாள் அவர் வீட்டிற்கு வந்தபோது சிகரெட் பேப்பர் அவர் வசம் இல்லாது போயிற்று. என்ன செய்வதென்றே அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. எப்படியும் சிகரெட் பிடித்தாக வேண்டுமென்ற வெறி அவருக்கு தலைக்கு மேல் ஏறி நின்றது. திடீரென சில ஆண்டுகளுக்கு முன்பாக அலமாரியில் வைத்த சிறிய புதிய ஏற்பாட்டின் ஞாபகம் அவருக்கு வந்தது.

உடனே அவர் அதை எடுத்து தூசி தட்டி அதின் ஒரு பேப்பரைக் கிழித்து அதற்குள் புகையிலையை வைத்துச் சுருட்டி ஒரு சிகரெட்டை உருவாக்கிவிட்டார். அந்தத் தாளானது சிகரெட் சுற்ற மிகவும் பொருத்தமாக இருந்தது அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. பின் வந்த நாட்களில் அந்த புதிய ஏற்பாட்டின் தாட்களே அவருக்கு சிகரெட் சுற்ற பயன்பட்டு வந்தது. ஒவ்வொரு நாளும் அதைக் கிழித்து பயன்படுத்தி வந்தார்.

ஒரு நாள் வழக்கம்போல சிகரெட் சுற்ற ஒரு தாளை அவர் கிழித்தார். கிழித்த தாளை தனக்கு முன்பாக வைத்திருந்த போது அந்த தாளில் எழுதப்பட்டிருந்த ''மனுஷ குமாரன் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார்'' என்ற வார்த்தை அவருடைய கண்களில் பட்டது. பால்டாடோனா தனது கரத்திலிருந்த புகையிலையை ஒரு பக்கம் வைத்துவிட்டு அந்த தாள் முழுவதையும் வாசிக்க ஆரம்பித்தார். அதை வாசித்து முடித்தவுடன் அலமாரியிலிருந்த கிழிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டை எடுத்து மீதமுள்ள தாட்களை எல்லாம் வாசிக்கத் தொடங்கினார். மாலைப் பொழுதாகி இரவு வந்துவிட்டதால் 2 மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி தனது வாசிப்பைத் தொடர்ந்தார். அந்த மெழுகுவர்த்திகள் எரிந்து முடிந்து வேறு மெழுகுவர்த்திகள் மாற்றப்பட வேண்டியதானது. இரவு முழுவதும் அவர் அந்தப் புதிய ஏற்பாட்டை வாசித்துக் கொண்டே இருந்தார். கடைசியாக கீழ்த்திசையில் காலைச் சூரியன் தனது பொற் கிரணங்களை மேகக்கூட்டங்களின் ஊடாக வீசி வெளி வரும் காலையில் தனது நாற்காலியிலிருந்து பால்டாடோனா எழும்பி தனது முழங்கால்களில் வீழ்ந்து தனது இரு கரங்களுக்குள்ளும் தனது முகத்தைப் புதைத்து அன்பின் ஆண்டவர் இயேசுவை தனது இருதயத்திற்குள்ளாக வரும்படியாகவும், தனது பாவங்களை எல்லாம் மன்னிக்கும்படியாகவும் கெஞ்சி கதறினார். கர்த்தர் அவருடைய பாவங்களை மன்னித்து உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தையும், சந்தோசத்தையும் அவருக்கு கிருபையாக அளித்தார்.

அந்த நாளின் காலை வேளையில் தனது காலை ஆகாரத்திற்குப் பின்னர் புதிய ஏற்பாட்டின் மீதமுள்ள பகுதிகளை எல்லாம் படித்து முடித்த பின்னர் தனது கைவசமிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு பக்கத்திலுள்ள ஒரு பெரிய கிராமத்திற்கு கால் நடையாக நடந்து சென்று தான் புகையிலை வைத்துப் புகைத்துத் தள்ளிய புதிய ஏற்பாட்டின் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷத்தில் 18 அதிகாரங்களையும் படித்து முடிப்பதற்காக ஒரு புதிய ஏற்பாட்டை விலை கொடுத்து வாங்கி வாசித்தார். ஆண்டவருடைய

ஜீவனுள்ள வார்த்தைகளின் மேல் பால்டாடோனாவுக்கு கட்டுக்கடங்கா ஆவல் ஏற்பட்டது. பின்னர் அவர் முழு வேதாகமத்தையும் வாங்கி வாசித்தார். அதற்கப்பால் அவர் மக்களுக்குத் தனது அனுபவ சாட்சியைக் கூறி தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்கு உபதேசித்தார். பால்டாடோனாவின் சாட்சி ஒரு ஆச்சரியமான ஜீவனுள்ள சாட்சியாகும்.

தேவனுடைய வார்த்தையானது நித்தியமானது

மிலான் பட்டணத்தில் உள்ள புகழ்பெற்ற அழகான தேவாலயத்தின் முகப்பில் மூன்று அழகான நுழை வாயில்கள் உள்ளன. அதின் முதல் நுழை வாயிலில் ஒரு அழகான ரோஜா மலர் வளையம் சித்திரமாகச் செதுக்கப்பட்டு அதின் கீழாக ''மனதிற்கு இன்பமாகத் தோன்றுவதெல்லாம் ஒரு கண நேரம் மாத்திரமேதான்'' என்று எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது நுழை வாயிலில் ஒரு சிலுவைச் சின்னம் செதுக்கப்பட்டு அதின் கீழாக ''நம்மை வேதனைப்படுத்தும் காரியங்கள் எல்லாம் சொற்ப காலத்துக்கு மட்டுமேதான்'' என்று எழுதப்பட்டுள்ளது. தேவாலயத்துக்குள் நுழையும் பிரதான நுழை வாயிலின் மேலே ''என்றுமாய் நிலைத்திருக்கக் கூடிய நித்தியமே மிகவும் முக்கியமானது'' என்று செதுக்கப்பட்டுள்ளது.

''ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவர்களுக்கே பயப்படுங்கள்'' (மத் 10 : 28) என்று இரட்சகர் இயேசு தமது சீடர்களுக்குப் போதித்தார். மரணமானது ஒரு விசுவாசிக்கு நேரிடக்கூடிய ஒரு சம்பவம் மாத்திரமேதான்.

''நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளி 2 : 10) என்று இயேசு தமது அடியார்களுக்குச் சொன்னார்

எந்த ஒரு காரியத்தையும் உடனே வாழ்க்கையில் அனுபவித்துவிட வேண்டும் என்ற ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ''எனக்கு இப்பொழுதே வேண்டும்'' என்ற பிடிவாதத்தை ஆண்டவர் இயேசு ஒத்துக் கொள்ளுகிறவர் அல்ல, குறிப்பாக நாம் தெரிந்து கொள்ளும் நல்ல தெரிந்து கொள்ளுதலுக்கான வெகுமதிகளுக்காக நாம் பொறுமையோடு காத்துத்தான் இருக்க வேண்டும்.

''அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல் விருந்தாவது இரா விருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம்: அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்.. நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும், சப்பாணிகளையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய், அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்'' (லூக்கா 14 : 12 - 14)

நமது வெகுமதிகளுக்காக நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்று இயேசு இரட்சகர் நமக்குப் போதிக்கின்றார். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலும் அதை அங்கீகரிக்கின்றார். தன்னைக் குற்றம் காண்கின்றவர்களுக்கு ''ஆயினும் நான் உங்களிலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது, நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன், ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை, என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே'' (1 கொரி 4 : 3-4) என்று கூறுகின்றார்.

சீனாவுக்கு மிஷனரியாகச் சென்ற ஒரு தேவ மனிதர் ஒரு சமயம் ஒரு தனிமையான இடத்தில் கொள்ளைக்காரரால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவர்கள் அவரை சுட்டுக் கொல்லப் போவதாக பயமுறுத்தினார்கள். அந்த மிஷனரி உடனே அந்தக் கொள்ளைக்காரத் தலைவனின் கண்களை துணிச்சலுடன் பார்த்தவராக எந்த ஒரு பயமுமில்லாமல் ''நீ என்னை சுட்டுக் கொல்லுவாயானால் நான் நேராக மோட்சத்துக்குச் செல்லுவேன்'' என்று கூறினார். தனது மரணத்தைக் குறித்து கவலைப்படாத ஒரு மனிதனை எதிர் கொண்ட அந்தக் கொள்ளைக் கூட்ட தலைவன் அதிர்ச்சியடைந்தான்.

ஜாண் மக் ஆர்தர் என்ற சுவிசேஷகர் தனது சாட்சியை இவ்விதமாகக் கூறுகின்றார்:-

தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் நமக்குக் கொடுக்கக் கூடியதைக் காட்டிலும் மேலானதொன்றை இந்த உலகம் நமக்குக் கொடுக்கவியலாது. எனக்கு ஒரு நண்பன் உண்டு. வெகு அபூர்வமான வேதாகமங்களை சேர்ப்பதில் அவன் அலாதி பிரியம் கொண்டிருந்தான். ஒரு ஆச்சரியமான வேதாகம

குவியல் அவனிடமிருந்தது. நான்காம் நுற்றாண்டைச் சேர்ந்த ஒரு வேதாகமமும் கூட அவனுடைய வசத்திலிருந்தது.

ஆனால், என்னைக் கவர்ந்ததெல்லாம் அவன் வைத்திருந்த 16 ஆம் நுற்றாண்டைச் சேர்ந்த இங்கிலாந்து தேசத்தில் அச்சிடப்பட்ட மிகவும் பழமையான ஒரு பதிப்பான வேத புத்தகம்தான். அதைச் சொந்தமாக வைத்திருந்தவருடைய இரத்தத்தால் அந்த வேதாகமத்தின் மேற் பகுதி முழுவதும் மூடப்பட்டிருந்தது. அந்த வேதாகமத்தை எனது நண்பன் எனது கரங்களில் கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ள என்னை அனுமதித்தான். நான் அந்த வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டினபோது கண்ணீர் துளிகள் எனது கண்களிலிருந்து வடிந்த வண்ணமாக இருந்தது.

அந்த வேதாகமத்தின் பக்கங்கள் எப்படி இரத்தத்தால் மூடப்பட்டிருந்தது? இங்கிலாந்து தேசத்தை இரத்த மேரி என்ற கொடிய ராணி அரசாட்சி செய்த நாட்களில் அந்த வேதாகமத்தை வைத்து வாசித்த பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவ மக்களை அவள் கொன்று குவித்தாள். அப்படி ஒரு போர் வீரன் கொன்ற ஒரு கிறிஸ்தவனின் இரத்தமே அவனுடைய வேதாகமத்தில் பட்டிருந்தது. பின்னர் அந்தப் போர் வீரன் அந்த வேதாகமத்தை எடுத்து முழுவதுமாக அந்த மனிதனுடைய இரத்தத்தில் தோய்த்தெடுத்தான்.

அந்த இரத்த மேரியின் காலத்திலுள்ள வேதாகமங்களில் சில இன்று வரை பத்திரமாகப் பதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகள் இரத்த சாட்சிகளின் வேதாகமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அந்த வேதாகமங்கள் விஞ்ஞானிகளால் பரிசோதனையிடப்பட்டு அந்த வேதாகமத் தாட்களில் படிந்திருப்பவைகள் எல்லாம் மனித இரத்தம் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தேவ மக்கள் தங்கள் சொந்த இரத்தத்தையே சிந்தி தங்கள் வேதாகமத்தை வைத்திருக்கின்றார்கள் என்ற உண்மையை கிறிஸ்தவர்களாகிய நாம் மறந்து அதற்கு நேர் எதிரிடையாக நாம் நமது வேதாகமங்களை வைத்திருக்கின்றோம்.

மேலை நாடுகளில் வாழ்கின்ற கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம் நமது கலாச்சாரங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம். கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தை உலகப்பிரகாரமான மற்ற வியாபாரப் பொருளைப் போலப் பயன்படுத்துகின்றோம். ஒரு நல்ல புத்தகம் என்று நாம் அதைச்

சொல்லுகின்றோம். நல்ல மலிவாகக் கிடைப்பதால் மற்ற உலகப் புத்தகங்களை நாம் வாங்கி நம்மிடம் வைத்துக் கொள்ளுவது போல அதையும் வாங்கி வைத்துக் கொள்ளுகின்றோம். கர்த்தருடைய வேதாகமம் ஈடு இணையற்றது, ஒப்பற்றது என்பதை நாம் மறந்து விடுகின்றோம். அந்த ஒப்பற்ற வேதாகமம் இல்லாதபட்சத்தில் நமது வாழ்வு பாழும், பயனற்றதாகிவிடுமே! நமக்கு நம்பிக்கையைக் கொண்டு வருவது அந்த வேதப் புத்தகம் ஒன்று மட்டுமே!

அன்பின் ஆண்டவர் இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள் ''வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'' (மத் 24 : 35)

(2)

அது ஒரு அழகான வசந்த காலத்தின் நாளான மே மாதம் 21 ஆம் தேதியாகும். சில ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த சம்பவம். நான் எனது நண்பனான பாப் ரெயின்மில்லர் என்பவரை நாப்ரஸ்கா விமான நிலயத்தில் சந்தித்தேன். பாப் ரெயின்மில்லர் கான்ஸாஸ் பட்டணத்திலுள்ள சுவிசேஷ மிஷனரி யூனியனின் தலைமையகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நானும் அதே ஸ்தாபனத்தில் அவரைப் போலவே இயக்குனராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அவர் அந்த ஸ்தாபனத்திலிருந்து விலகி சொந்த இடத்திற்குச் செல்லுகின்ற நாளில் நான் அவரை விமான நிலயத்தில் வழி அனுப்பிவிட்டு வந்தேன்.

அவரை வழி அனுப்பி வைத்துவிட்டு வந்த 5 ஆம் நாளில் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் நான் ''வரும் நாட்களில் நாம் இருவரும் ஒன்றாக மிகுந்த மனமகிழ்ச்சியோடு நேரம் செலவிட நிறைய காலம் இருக்கும் என்று நான் நம்புகின்றேன். நாம் இருவரும் ஒன்றாக மீன் பிடிக்கச் செல்லலாம், அத்துடன் இதைப் போன்று இன்னும் அநேக காரியங்களில் நாம் நமது நாட்களை மகிழ்ச்சியோடு செலவிடலாம் என்று நினைக்கின்றேன்'' என்று நான் எனது கடிதத்தில் எழுதினேன்.

அந்த எனது கடிதத்தை நான் அவருக்கு எழுதி அனுப்பியபோது அவர் முடிவில்லாத நித்தியத்திற்குள் பிரவேசித்து ஏற்கெனவே 2 நாட்கள் முடிந்துவிட்டன என்பதை அப்பொழுது நான் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கவில்லை. பாப் ரெயின்மில்லர் அவர்களோடு நான் இந்த உலகத்தில் திரும்பவும் நேரம் செலவிட எனக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அவருடன் சேர்ந்து மீன்பிடிக்கவோ அல்லது மற்ற எந்த ஒரு மகிழ்ச்சியான காரியங்களில் ஈடுபட என்னால் கூடாது போயிற்று.

நாம் அனைவரும் மிகவும் ஸ்திரமாகவும், உறுதியாகவும் அந்த முடிவில்லாத நித்தியத்தை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் அதே நேரத்தில் அந்த நித்தியத்தை மகிழ்ச்சியோடு தைரியமாகச் சந்திப்பதைக் குறித்து நாம் கவலையற்றிருப்பது ஏன் என்று தெரியவில்லை? நித்தியத்தை நாம் தைரியமாகச் சந்திக்க தேவனுடைய பரிசுத்த வேதாகமம் நமக்கு வல்லமையைக் கொடுப்பதாக இருக்கின்றது.

''வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'' (மத் 24 : 35) என்று இயேசுஇரட்சகர் கூறினார். எத்தனை உரிமை பாத்தியதை! உலக சரித்திரத்தில் இடம்பெற்றுள்ள சரித்திர நாயகர்களில் எவராவது இப்படி உரிமை பாத்தியதைக் கொண்டாட முடிந்ததா?

''அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார், உலகத்தையும் (நித்தியத்தையும்) அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்'' (பிரசங்கி 3 : 11) ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?'' (மாற் 8 : 36)

செய்தி தாள் வாசிப்பும் வேத வசன தியானமும் ஒன்றாக பயணம் செய்யவியலாது.

பண்டிதர் டோனால்ட் கிரே பார்ன்ஹவுஸ், தேவனுடைய ராட்சத பரிசுத்த மனிதராவார். இந்த நூற்றாண்டின் மாபெரும் வேதாகம வல்லுனர்களில் அவரும் ஒருவராவார். 1913 ஆம் ஆண்டு முதல் 1915 ஆம் ஆண்டு வரை அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்திலுள்ள ஒரு வேதாகம கல்லூரியில் வேதசாஸ்திரம் கற்றார். வேதாகமத்தைக் குறித்து அவர் கொண்டிருந்த மிகவும் அசம்பந்தமான மனோபாவத்திற்கு எதிரிடையான ஒரு பெரிய திருப்பம் இந்த கல்லூரி ஆண்டுகளிலேயேதான் அவருக்கு ஏற்பட்டது. அப்படிப்பட்ட திருப்பத்திற்கான நிகழ்ச்சியைக் குறித்து நான் கேள்விப்பட்டதை உங்களுக்கு கீழே தருகின்றேன்

பார்ன்ஹவுஸ் தனது வயதுக்கு இரட்டிப்பான வயது மூத்தவரான டாம் ஹானி என்பவரைச் சந்தித்தார். டாம் ஹானி, அப்பொழுது கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கத்தின் காரியதரிசியாக இருந்தார். பார்ன் ஹவுஸ் தனது வழிகாட்டும் நட்சத்திரத்தை டாம் ஹானியில்தான் கண்டு பிடித்தார்

அவர்கள் இருவரும் ஒரு கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு ஒன்றாக ரயிலில் சென்று கொண்டிருந்தனர். ஹானி தனது வேதாகமத்தை ஆழ்ந்த தியானத்தோடு வாசித்துக் கொண்டிருந்தார். ஆனால், அதே சமயம் பார்ன் ஹவுஸ் அன்றைய நாளின் செய்தி தாளை மிகவும் கருத்தோடு படித்துக் கொண்டிருந்தார். கடைசியாக, பார்ன் ஹவுஸ் தனது செய்தி தாளை கீழே போட்டுவிட்டு டாம் ஹானியைப் பார்த்து ''ஹானி, நீங்கள் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை ஆழமாக அறிந்திருக்கின்ற வண்ணமாக நானும் அதைஅறிந்து கொள்ள அதிகமாக வாஞ்சிக்கின்றேன்'' என்று கூறினார்.

பார்ன் ஹவுஸ் அதைக் குறித்து பின்னர் கூறும்போது ''டாம் ஹானி எனது விருப்பத்தின் கேள்விக்கு என்னுடைய முகத்தை நோக்கிப் பார்த்து பதில் சொல்லாமல் ''நீங்கள் செய்தித் தாளை வாசித்துக் கொண்டு அதே சமயம் தேவனுடைய வேதாகமத்தையும் வாசித்து அதின் பரலோக ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுவது என்பது முற்றும் கூடாத காரியம்'' என்று கூறிவிட்டு மீண்டும் தன் இருக்கையில் பின்னால் சாய்ந்து தனது வேதாகமத்தை வாசித்து தியானிப்பதில் மூழ்கிவிட்டார். டாம் ஹானியின் அந்த வார்த்தைகளை நான் எனது வாழ்வில் என்றுமே மறக்கவே மாட்டேன்.

''அந்த நிமிஷமே நான் எனது கரத்திலிருந்த செய்தி தாளை கீழே போட்டுவிட்டு எனது பெட்டியைத் திறந்து எனது வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அந்த நாளில் நான் ஒரு மிகவும் முக்கியமான தீர்மானம் எடுத்தேன். அதாவது, நான் எனது தேவனுடைய வார்த்தைகளை வாசித்து தியானிப்பதிலிருந்து எனது கவனத்தைப் பிரிக்கக்கூடிய எந்த ஒரு காரியத்திற்கும் நான் இடம் கொடுக்கவே மாட்டேன் என்று பொருத்தனை பண்ணினேன். அன்று நான் தேவனுக்கு முன்பாக செய்த பொருத்தனையே முதலும் முடிவுமாக எனக்கு அமைந்தது. செய்தி தாட்கள் வாசிப்பும் அன்றுடன் முற்றுப் பெற்றுவிட்டது'' என்கின்றார் பண்டிதர் டோனால்ட் கிரே பார்ன்ஹவுஸ்.

அன்று பார்ன் ஹவுஸ் செய்த முக்கியமான பொருத்தனை அவருடைய கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையை ஒரு அற்புதமான வாழ்க்கையாக மாற்றி அமைத்தது. விசேஷமாக அவர் தனது காலங்களை தேவனுடைய மகிமைக்கு மட்டுமே செலவிட்டார். அதின் காரணமாக அவர் தனது நேரத்தின் பெரும் பகுதியை தேவனுடைய வார்த்தைகளை வாசித்து தியானிப்பதற்குச் செலவு

செய்தார். அதின் பலனாக அவர் ஒரு மாபெரும் வேதாகம பண்டிதராக பின் நாட்களில் விளங்கினார்.

தேவனுடைய வேத புத்தகம் மனுஷரின் வாழ்க்கைகளை மாற்றியமைக்கும் அற்புத வல்லமையை எப்படி வர்ணிக்க முடியும்! அந்த பரலோக வார்த்தைகளின் வல்லமையை என்னவென்று சொல்லுவது? உலகத்திலுள்ள அனைத்து புத்தகங்களிலிருந்தும் தேவனுடைய பரிசுத்த வேதபுத்தகம் மாத்திரம் ஏன் இத்தனை ஆச்சரிய அற்புத ஜீவனுள்ள மாற்றத்துடன் காணப்படுகின்றது?

தேவனுடைய பரிசுத்த வேதாகமத்துக்கு ஒப்பான ஒரு புத்தகம் இதுகாறும் இந்த உலகத்தில் எழுதப்படவில்லை. இயேசு இரட்சகரைப் போல பரலோகக் காரியங்களை அத்தனை அற்புதமாகக் கையாண்டவர் எவருமில்லர். அவருடைய பாவமற்ற பரிபூரண பரிசுத்த வாழ்க்கையைப் போல பிறிதொரு ஜீவிய சரித்திரம் மனுக்குலத்தின் சரித்திரத்திலேயே எழுதப்படவில்லை. தேவனால் மீட்கப்பட்ட அவருடைய மக்களின் சரித்திரங்களைக் குறித்து எழுதப்படும் புத்தகங்களை இந்த உலகத்தின் எந்த ஒரு புஸ்தகசாலையும் தங்கள் வசம் கொள்ள இயலாது. ஆம், அவைகள் அத்தனை திரள் திரளானவைகள்!

வாசிப்போனே, பார்ன் ஹவுஸ் அவர்களைப் போல தேவனுடைய வார்த்தைகளை நேசித்து வாசிப்பதற்கு நீ எப்பொழுதாவது தீர்மானம் எடுத்திருக்கின்றாயா? தேவனுடைய வார்த்தைகளை ஒவ்வொரு நாளும் பேராவலுடன் வாசிப்பதற்கு இப்பொழுதே தீர்மானம் எடு. காலங்கள் விரைந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. உனது சரீரத்தைப் போஷிக்க நீ எத்தனை அக்கறையும், கவலையும் எடுக்கின்றாயோ அதைப் போல உனது ஆத்துமாவை தேவனுடைய வார்த்தைகளால் போஷிக்கக் கருத்தாயிரு. தேவன் உன்னை மறுரூபமாக்குவார்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு தேவனுடைய வார்த்தைகளை மனப்பாடம் செய்யுங்கள்.

ஆண்டவருடைய வார்த்தைகளை திரள் திரளாக தங்கள் இருதயத்தில் மனப்பாடம் செய்து வைக்க வகை செய்யும் ஏவுகரணங்களை கொடுக்கும் கிறிஸ்தவ ஸ்தாபனமான (The Navigators) என்ற புகழ்பெற்ற கிறிஸ்தவ ஸ்தாபனத்தை தோற்றுவித்த டாவ்சன் டிராட்மான் என்ற தேவ மனிதர் ஒரு

சமயம் ஒரு ராணுவ வீரனைப் பார்த்து எத்தனை தேவ வசனங்களை அவன் மனப்பாடமாகப் படித்திருக்கின்றான் என்று கேட்டார். அதற்கு அந்த ராணுவ வீரன் 1500 தேவ வச்னங்கள் தனக்கு மனப்பாடமாகத் தெரியும் என்று கூறினான். ''அந்த 1500 வசனங்களையும் இப்பொழுதே உங்களுக்கு மனப்பாடமாக ஒப்புவிக்க முடியுமா?'' என்று டிராட்மான் கேட்டார். ''ஆம், இப்பொழுதே நான் அவைகளை மனப்பாடமாகச் சொல்ல முடியும்'' என்று அந்த ராணுவ வீரன் பெருமையோடு கூறினான்.

அதைக் கேட்ட அந்த தேவ மனிதர் ''நீங்கள் அந்த 1500 வசனங்களை என்னிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று நான் விரும்பாமல் அவைகளில் 5 வசனங்களின்படி நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் வாழ்ந்தால் போதுமென்றே நான் விரும்புகின்றேன்'' என்று சொன்னாராம். அந்த ராணுவ வீரன் தலை அறிவு மாத்திரம் கொண்டிருந்தானேயல்லாமல் இருதயத்தில் தேவ அறிவைப் பெற்றவனல்ல. அதினால் அவன் துக்கத்தோடு சென்றுவிட்டான்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பாக ரஷ்யா தேசத்திலுள்ள கலோனாவாக்கா என்ற கிராமத்தின் குருவானவர், தட்டையான மூக்கைக் கொண்ட ஒரு வாலிபன் தான் மனப்பாடமாகப்படித்த வேத வசனங்களை மிகவும் பக்தி வினயமாக ஆலயத்தில் ஒப்புவிப்பதை ஆச்சரியத்துடன் கவனித்தார். அந்தக் குருவானவர் அந்த வாலிபனுக்கு நல்ல சன்மானங்களையும், இதரப் பொருட்களையும் கொடுத்து அவனை வேதாகமத்திலுள்ள நான்கு சுவிசேஷங்களையும் மனப்பாடமாகப் படிக்க வைத்துவிட்டார். அந்த வாலிபன் மனப்பாடமாகப் படித்த அந்த நான்கு சுவிசேஷங்களையும் ஒரு நாள் அந்த குருவானவருடைய தேவாலயத்தில் சபை நடுவில் ஒப்புவிக்க வைத்து அந்த குருவானவர் மிகவும் மனம் மகிழ்ந்தார்.

60 ஆண்டுகளுக்குப் பின்னரும் மேற்கண்ட அதே வாலிபன் தான் ஒப்புவித்த அதே நான்கு சுவிசேஷங்களை திரும்பவும் ஒப்புவிக்க விரும்பினான். அவன் யாரென்று கவனித்தால் அவர்தான் ''கடவுள் இல்லை'' என்ற தீவிரமான கொள்கையையுடைய ரஷ்ய தேசத்தின் கம்மியூனிச பிரதம மந்திரியான நிக்கிடவ் குருஷேவ் என்பவராவார்.

ஜாண் அலெக்ஸாண்டர் என்ற அமெரிக்க சர்வ கலாசாலை கிறிஸ்தவ ஐக்கியத்தின் முன்னாள் தலைவர் தேவனுடைய வார்த்தைகளை மனப்பாடம் செய்வதைக் குறித்து ஒரு எச்சரிப்பை நமக்கு முன்பாக வைக்கின்றார்.

வெறுமெனே ஆண்டவருடைய வார்த்தைகளை மனப்பாடம் செய்வதால் எந்த ஒரு ஆவிக்குரிய பயனும் நமக்குக் கிட்டாது. தேவன் இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு நாஸ்தீகன் தேவனுடைய வேத புத்தகத்திலிருந்து ஏராளமான வேத வசனங்களை மனப்பாடமாகப் படித்து வைத்திருக்கலாம். சாத்தானாம் பிசாசானவனும் கர்த்தருடைய வார்த்தைகளை திரள் திரளாகப் படித்து வைத்திருக்கின்றான். அன்பின் ஆண்டவர் இயேசுவை சோதிப்பதற்காக அவன் அப்படி வசனங்களை மனப்பாடமாக படித்திருந்ததை வேதாகமத்தில் நாம் காண்கின்றோம்.

''எனினும் தேவனுடைய வசனங்களை மனப்பாடம் செய்து இருதயத்தில் பொக்கிஷ வைப்பாக வைத்து அவைகளை தியானம் செய்து வாழ்க்கையில் அப்பியாசிப்பது ஒரு பெரிய ஆசீர்வாதமாகும்'' என்று மேற்கண்ட ஜாண் அலெக்ஸாண்டர் தொடர்ந்து கூறுகின்றார்.

படித்த வேத வசனங்களை திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்து கொண்டிரு.

(வேத வசனங்களை மனப்பாடம் செய்யும் இரகசியம் இது ஒன்றேதான்)

எனது ஆரம்ப கால கிறிஸ்தவ வாழ்வில் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த எனது அறிவு மிகவும் குறைவானதாகும். இரண்டாம் உலகப் போரின் போது நானும் என்னைப் போன்ற மற்றொரு டாக்டரும் ஒன்றாக ஒரு கப்பல் யாத்திரையில் இருந்தோம். அந்த டாக்டர் என்னைப் பார்த்து வேதாகமத்தைக் குறித்து தனக்கு ஏதாவது சொல்லும்படியாகக் கேட்டார்.

வேதாகமத்தைக் குறித்த அறிவு அப்பொழுது எனக்கு ஒன்றுமில்லை யாதலால் நான் அவருக்கு எதையும் சொல்லக் கூடாதவனானேன். அது எனக்கு மிகவும் வேதனையான ஒரு அனுபவமாகவே அப்பொழுது இருந்தது. நான் எனது பள்ளிப் படிப்பு மற்றும் கல்லூரிப் படிப்பு இன்னும் கடினமான மருத்துவப் படிப்பை கூட படித்து முடித்திருந்தேன். அந்த படிப்புகளின் போது நான் ஆயிரக்கணக்கான தத்துவ விளக்கங்களையும், விதிகளையும், சமன்பாடுகளையும் தண்ணீர்பட்ட பாடமாக மனப்பாடமாக படித்திருந்தேன். ஆனால், தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளைக் குறித்த அறிவு எனக்கு பூஜ்யமாகவிருந்தது. சொல்லப் போனால் தேவனுடைய வார்த்தையோடு நான் விளையாடிக் கொண்டிருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவர் என்னைப் பார்த்து தேவ

வசனங்களை மனப்பாடம் செய்யும்படியாகக் கூறினார். எனக்கும் (டாக்டர் ராஸ்ப் பைரன்) ஆண்டவருக்கும் இடையிலான சம்பாஷணை இவ்விதமாக அமைந்தது :-

பைரன் :- ''ஐயா, உம்முடைய வேத வசனங்களை என்னால் மனப்பாடம் செய்ய இயலாது''

ஆண்டவர் :- ''உன்னால் கூடும்''

பைரன் :- ''தகப்பனே, உம்முடைய வார்த்தைகளை மனப்பாடம் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் என்னில் இல்லை''

ஆண்டவர் :- ''உனக்கு அந்த ஆற்றல் நிச்சயமாக உண்டு''

பைரன் :- ''அப்பா, நான் விரைவில் மறந்து போகக் கூடியவன்''

ஆண்டவர் :- ''நீ படித்தவற்றை திரும்பத் திரும்ப உன் நினைவுக்கு கொண்டு வந்து கொண்டிரு. அப்பொழுது நீ சிறப்பாக தேவனுடைய வார்த்தைகளை மனப்பாடம் செய்து கொள்ளுவாய்''

எங்கள் இருவருடைய வாக்குவாதத்தின் இறுதியில் ஆண்டவரே வெற்றி பெற்றார்.. அவருடைய ஆலோசனையின்படி தேவ வசனங்களை ஒழுங்கும் கிரமமுமாகப் படித்து படித்த பகுதிகளை அடிக்கடி திரும்பத் திரும்ப எனது நினைவுக்குக் கொண்டு வந்து எனது நிலையை நான் நன்கு உறுதிப்படுத்திக் கொண்டேன். இப்பொழுது நான் தேவனுடைய அநேக வசனங்களை எனது இருதயத்தில் பொக்கிஷ வைப்பாக வைத்துக் கொள்ள முடிந்தது. கர்த்தருக்கே மகிமை.

(Taken from the Book::- (God's Word Unique, Magnetic, Eternal)

''ஓ ஐயாமாரே, உங்களது தனிப்பட்ட வாழ்வின் பரிசுத்தம் உங்களது மரணத்தை ஒரு நல்ல விருந்தாளியாகவும், ஒரு நல்ல நண்பனாகவும், நற்செய்தி கொண்டு வரும் ஒரு தூதுவனாகவும் உங்களைக் காணச் செய்யும். அந்த அற்புத பரிசுத்தமானது மரணத்தை அள்ளி அணைத்து முத்தமிட உங்களுக்கு உதவி செய்யும். இத்தாலி நாட்டு தேவ பக்தன் ஃபாலினஸ் தனது கொலையாளியை அரவணைத்து முத்தமிட்டது போல உங்களது பரிசுத்தமான வாழ்க்கை உங்களது மரணத்தை வாரி அணைத்து முத்தமாரி பொழிய உங்களுக்கு கைகொடுத்து உதவும்''

(தாமஸ் புரூக்ஸ்)

''தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கின்றது''
(2 நாளாகமம் 16 : 9)

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருக உண்டாவதாக. தமக்கு முன்பாக நாம் அன்பிலே பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்.

இந்த தேவ எக்காள இதழின் மூலமாக ஆண்டவருடைய அருமைப் பிள்ளைகளாகிய உங்களைத் திரும்பவும் சந்திக்கும் சிலாக்கியம் தந்த கர்த்தருக்குத் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன். கடந்த தேவ எக்காள இதழ் உங்களில் அநேகருக்கு ஆசீர்வாதமும், பாக்கியமும், சவால் நிறைந்த ஒரு எழுப்புதலின் பத்திரிக்கையாக இருந்தது அறிந்து கர்த்தரில் மிகவும் சந்தோசம் அடைகின்றேன். எல்லா துதி, கனம், மகிமை நம் தேவனுக்கே உண்டாவதாக.

தேவ பக்தனாகிய சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜனின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு உங்களில் பலருக்கும் மிகுந்த பரவசமாக இருந்ததாக எழுதியிருந்தீர்கள். கர்த்தருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன். சுமார் 1400 பக்கங்களைக் கொண்ட 3 பெரிய புத்தகங்களிலிருந்து நான் அந்த ஜீவிய சரித்திரத்தை தமிழில் மொழி பெயர்த்தேன். தேவப் பிள்ளைகளாகிய உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு அந்த பரிசுத்த பக்தனுடைய வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கும்படியாக நம் அன்பின் ஆண்டவரே மொழிபெயர்ப்பு வேலையை பார்த்துக் கொள்ளும்படியாக புத்தகங்கள் மூன்றையும் ஆண்டவருக்கு முன்பாக விரித்து வைத்து அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ளும்படியாக அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடினேன். 1400 பக்கங்களையும் வரி வரியாகப் படிப்பது எனக்கு முற்றும் முடியாத காரியமாக இருந்ததால் பரிசுத்தவானின் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகளை கர்த்தர் எனக்குக் காண்பித்துத் தரும்படியாக அவரை வேண்டினேன். எனது உருக்கமான விருப்பத்துக்கு செவி சாய்த்த தேவன் உங்களுடைய ஆசீர்வாதத்திற்கு ஏற்ற பகுதிகளை நான் கண்டு கொள்ளவும், அவற்றை நான்

உங்களுடைய ஆவிக்குரிய வாழ்விற்கு ஏற்ற வகையில் மொழி பெயர்க்கவும் கிருபை செய்தார். தேவகிருபை மாத்திரமே அந்தக் காரியத்தைச் செய்தது என்பதை நான் பூரணமாக விசுவாசிக்கின்றேன். அன்பின் ஆண்டவரே அந்த மொழிபெயர்ப்பு வேலையைச் செய்ததால் அது உங்களுக்கு மிகுந்த தேவ ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

உங்களில் சிலர் அந்த தேவ எக்காளம் வந்ததும் ஒரே மூச்சில் பத்திரிக்கை முழுவதையும் வாசித்து முடித்துவிட்டு, இரண்டாம் வாசிப்புக்கு ஆயத்தமாவதாக எழுதியிருந்த வரிகள் என் உள்ளத்தை நெகிழ்விப்பதாக இருந்தது. ஸ்பர்ஜன் ஜீவிய சரித்திரம் அடங்கிய தேவ எக்காளத்தை ஒரு தடவை முழுவதையும் வாசித்து முடித்துவிட்டு அதை விரும்பிக் கேட்ட ஒரு வாலிப கிறிஸ்தவ மகளிடம் அந்த தேவ எக்காளத்தைக் கொடுத்து ''நான் உன்னிடம் எனது தங்கத்தைக் கொடுத்தால் கூட நான் அதைத் திரும்பக் கேட்கமாட்டேன். ஆனால், எனது தேவ எக்காளத்தை நீயே வைத்துக் கொள்ள நான் உன்னை அனுமதிக்கமாட்டேன். அதைப் படித்துவிட்டு நீ ஒழுங்காக அதை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்'' என்று நான் சொன்னேன் என்ற ஒரு ஐயாவின் வார்த்தைகள் என் இருதயத்தை கர்த்தருக்கு நேராக ஏறெடுத்து அவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க வகை செய்வதாக இருந்தது.

பல ஆண்டு காலங்களுக்கு முன்னர் ஒரு பரிசுத்த தாயாரைக் காண அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அந்த தாயார் தனது வீட்டின் முன் அறையிலுள்ள தங்களது மேஜையில் கிடந்த பல்வேறு கிறிஸ்தவ பத்திரிக்கைகளையும் எனக்குச் சுட்டிக் காண்பித்து ''அவைகள் எல்லாம் தனக்கு அந்த மாதத்தில் வந்த கிறிஸ்தவப் பத்திரிக்கைகள் என்றும், எனது வீட்டிற்கு வருபவர்கள் அவைகளை எடுத்துச் செல்லமாட்டார்கள் என்றும், உங்கள் தேவ எக்காளம் பத்திரிக்கையை மட்டும் அவர்கள் தேடிப்பிடித்துத் தூக்கிச் சென்றுவிடுவார்கள்'' என்று கூறிய வார்த்தைகள் என் உள்ளத்தைக் கர்த்தருக்குள் களிகூரச் செய்வதாக இருந்தது.

சில காலத்திற்கு முன்னர் ஒரு தேவப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். தேவ எக்காளத்தை ஆரம்ப காலம் முதல் வாங்கி வாசித்து வரும் அவர்கள் என்னிடம் சொன்ன வார்த்தைகள் ''எங்களுக்கு வரும் தேவ எக்காளம் பத்திரிக்கைகளை எல்லாம் நாங்கள் வாங்கி வாசித்து ஆவிக்குள் பயன் அடைந்த பின்னர் கர்த்தர் எங்களுக்கு ஈவாகக் கொடுத்த எங்கள் ஒரே சின்ன மகள் தனது நாட்களில் படித்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக்

கொள்ளுவதற்காக அவைகளை புத்தகங்களாக பைண்ட் செய்து பத்திரப்படுத்தி வருகின்றோம்'' என்று சொன்னார்கள். கர்த்தருக்கே மகிமை.

இந்த தலையங்கச் செய்தியை நான் எழுதிக்கொண்டிருக்கும் இந்த நாட்களில் எனக்கு வந்த ஒரு கடிதத்தின் வரிகள் இவ்வாறு உள்ளன. ''நீங்கள் எனக்கு அனுப்பி வைத்த தேவ எக்காள பத்திரிக்கைகள் எல்லாம் பத்திரமாகக் கிடைத்தன. கடைசியாக அனுப்பி வைத்த ஒரு தேவ எக்காளமும் வந்து சேர்ந்தது. அவைகள் அனைத்தையும் நான் மிகுந்த பொறுமையோடு வாசித்தேன். நான் வசிக்கும் பட்டணத்திலிருந்து 4 மணி நேர பிரயாண தூரத்திலுள்ள மற்றொரு பட்டணத்துக்கு சில தடவைகள் நான் பிரயாணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த எனது பயணங்களில் எல்லாம் நான் தேவ எக்காள பிரதிகளை என்னுடன் எடுத்துச் சென்று முக்கியமான வரிகளையும், தேவனுடைய வசனங்களையும் எனது கலர் பேனாவால் அடிக்கோடிட்டு வாசித்தேன். நான் தனியாகத் தங்கியிருந்த விடுதிகளில் தேவ எக்காள பிரதிகளை என் கண்களில் கண்ணீர் வடிய வடிய வாசித்து கர்த்தருக்குள் மிகுதியான ஆசீர்வாதத்தைக் கண்டடைந்தேன்'' என்று எழுதுகின்றார்கள். அன்பின் ஆண்டவரை துதிக்கின்றேன், ஸ்தோத்திரிக்கின்றேன்.

தேவ எக்காளத்தின் சந்தாதாரராகிய ஒரு அருமையான பரிசுத்த மகள் நான் அவர்களுக்கு தேவ ஒத்தாசையால் கொடுத்த ஆலோசனையின்படி உபவாசம் இருந்து மிகுந்த தேவ ஆசீர்வாதம் பெற்றதாக சமீபத்தில் எனக்கு எழுதியிருந்தார்கள். இப்படி, பாவியாகிய என்னையும், தேவ எக்காளம் பத்திரிக்கையையும் கடந்த 38 ஆண்டு காலமாக தேவன் தம்முடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையாகவும், அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் எடுத்துப் பயன்படுத்தி வந்த காரணத்தை தேவ மக்களாகிய உங்களுடன் நான் கர்த்தருக்குள் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

நான் நமது தேவ எக்காள பத்திரிக்கையில் தேவ பெலத்தால் நான் மேற்கொள்ளும் எனது நீண்ட உபவாச ஜெபம் போன்ற காரியங்களைக் குறித்து எழுதக் கூடாது என்றும், அது நம்மைப் பெருமைப்படுத்துவதாக இருக்கும் என்றும் ஆண்டவருக்கு மகிமையைக் கொண்டு வராது என்றும் எனது மூத்த மகன் சுந்தர்சிங் அவர்கள் ஒரு தடவை என்னிடம் சொன்னார்கள். நான் மகனுக்குப் பிரதியுத்தரமாக ''வேதாகம புருஷர்கள் மேற்கொண்ட உபவாச ஜெபங்கள் எல்லாம் கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில் திட்டமும், தெளிவுமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பரிசுத்த

தேவதாசர்களைப் போல நாமும் உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என்பதற்காகவே அவைகள் அங்கு எழுதப்பட்டுள்ளன. நாம் நமது பெருமைக்காக நமது உபவாச ஜெபங்களைக் குறித்த விபரங்களை தேவ எக்காளத்தில் எழுதுவதில்லை என்பது அன்பின் ஆண்டவருக்குத் தெரியும். நம்மைப்போல தேவப் பிள்ளைகளும் உபவாசித்து ஜெபித்து கர்த்தரிடமிருந்து அனந்த தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவே நாம் எழுதுகின்றோம்'' என்று மகனிடம் சொன்னேன்.

தாவீது ராஜாவும் ''தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்'' (சங் 66:16) என்று சொல்லுவதை நாம் பார்க்கின்றோம். அன்பின் ஆண்டவர் நமது ஆத்துமாவுக்குச் செய்ததையும், நம்மை அவர் பயன்படுத்தும்படியாக நாம் அவருக்கு அடிபணிந்து நடந்த காரியங்களையும், நமது பரிசுத்த அனுபவங்களையும் தேவ மக்கள் கண்டு உணர்ந்து கொள்ளும்படியாக நாம் அவற்றை எழுதுவது நம்மேல் விழுந்த கடமையாகும். ''நாம் மவுனமாயிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்'' (1 இரா 7 : 9) அந்த விபரணங்களை இந்த மாத தலையங்கச் செய்தியாக நான் உங்களுக்கு எழுதுகின்றேன். எனது தாழ்மையான அனுபவங்களை கர்த்தர் உங்கள் பரிசுத்த வாழ்வுக்கு ஆசீர்வாதமாக்கித் தருவாராக.

தேவ ஊழியம் செய்ய தேவ அழைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

''தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்'' என்ற முதுமொழி நமது தமிழ் நாட்டில் உண்டு. அதைப் போல தேவனுடைய வேத புத்தகத்தை தங்கள் கரங்களில் எடுத்தவர்கள் எல்லாரும் தேவ ஊழியர்களாகவோ அல்லது சுவிசேஷகர்களாகவோ ஆகிவிட முடியாது. அன்பின் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய அவருடைய திட்டமான அழைப்பைப் பெற்றிருத்தல் அவசியமாகும். உடலுழைப்பு இல்லாத மிகவும் எளிமையான பிழைக்கும் வழி என்ற நோக்கத்தோடு தங்கள் கரங்களில் வேதாகமத்தை எடுத்து வீடு வீடாக ஏறி இறங்கும் மக்களை நாம் இந்த நாட்களில் துயரத்துடன் காண்கின்றோம். 1976 ஆம் ஆண்டு நான் தேவனுடைய திட்டமான அழைப்பில் எனது உலப் பிரகாரமான நல்ல அலுவலைவிட்டு விட்டு இருந்த சமயம் மிகவும் ஐசுவரியமுள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரி என்னைப் பார்த்து ''நீங்கள் உங்கள் தேயிலைத் தோட்ட வேலையை விட்டுவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். அப்படியானால் (House Visit பண்ணியா) வீடுகள் தோறும் போய்

ஜெபம்பண்ணியா உங்கள் காரியம் நடக்கின்றது'' என்று என்னிடம் கேட்டார்கள். நான் அவர்களுக்கு உத்தரவாக ''நீங்கள் நினைப்பது போல நான் அப்படிப்பட்ட தேவ ஊழியன் அல்ல. கர்த்தரால் திட்டமாக அழைக்கப்பட்டு அவருடைய அங்கீகாரம் பெற்ற மெய்யான தேவ ஊழியன் நான். வீடு வீடாக காணிக்கைகளுக்காக படிக்கட்டு ஏறும் தேவ ஊழியன் அல்லன் நான்'' என்று சற்று காட்டமாகவே அவர்களுக்கு பதில் கொடுத்தேன். பின் வந்த நாட்களில் கர்த்தர் என்னை அற்புதம் அதிசயமாக வழிநடத்துவதைக் கண்டு ஆச்சரிப்பட்டு தங்கள் பங்களாவுக்கு மாதந்தோறும் நான் வந்து ஜெபித்துச் செல்லும்படியாக அவர்கள் என்னை வருந்திக் கேட்டார்கள். கர்த்தர் என்னை அனுமதிக்காததால் நான் அவர்கள் வீட்டிற்குச் செல்லவே இல்லை.

நான் எனது வேலையை விட்டதும் நான் வேலை செய்த தேயிலைத் தோட்டத்திலிருந்து கோத்தகிரியிலுள்ள ஒரு பாஸ்டர் ஐயா அவர்களுடைய வீட்டில் ரூபாய் 60 மாத வாடகையில் குடி இருந்தேன். அன்பின் ஆண்டவர் என்னைத் தமது முழு நேர ஊழியத்துக்கு திட்டமாகக் குரல் கொடுத்து அழைத்திருந்த காரியத்தை எல்லாம் நான் அவர்களிடம் ஆரம்பத்தில் சொல்லியிருந்தேன். சுமார் 6 மாதங்கள் சென்ற பின்னர் அந்த பாஸ்டர் ஐயா அவர்கள் என்னண்டை ஒரு நாள் வந்து ''சகோதரனே, கர்த்தர் உங்களை அழைத்து நீங்கள் முழு நேர ஊழியம் செய்ய உங்கள் வேலையை விட்டுவிட்டதாக நீங்கள் என்னிடம் ஆரம்பத்தில் சொன்னீர்கள். நான் அந்த வார்த்தைகளை உடனே நம்பவில்லை. கடந்த 6 மாத காலமாக ஆண்டவர் உங்களையும், குடும்பத்தையும் நடத்தும் காரியங்களை மிகவும் உன்னிப்பாக நான் கவனித்து வருகின்றேன். எந்த ஒரு தடுமாற்றமும், வீழ்ச்சியும், வறுமை துயரங்களும் இல்லாமல் வெகு அற்புதமாக கர்த்தர் உங்களை கரம் பிடித்து வழிநடத்தி வருவதை நான் ஆச்சரியத்துடன் கவனிக்கின்றேன். உங்கள் வாயின் வார்த்தைகளின்படி கர்த்தர் உங்களைத் தமது ஊழியத்திற்கு அழைத்தது நிச்சயமான உண்மை'' என்று சொன்னார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

எனது வாலிபப் பிராயமான எனது 18 ஆம் வயதில் என்னுடைய பாவங்களை எல்லாம் மன்னித்து என்னைத் தமது இரட்சிப்பின் பாத்திரமாக மாற்றி உலகம் தரக்கூடாத பேரின்ப சமாதானத்தையும், இரட்சிப்பின் சந்தோசத்தையும் எனக்குத் தந்து என்னை இரட்சிப்பின் பாத்திரமாக்கி என்னைத் தமது பரிசுத்த ஆவியால் அபிஷேகித்தது எத்தனை உண்மையும்,

சத்தியமுமான சம்பவமோ அதைப் போலவே என்னைத் தமது பரிசுத்த ஊழியத்தை முழு நேர ஊழியனாக வந்து செய்யும்படியாக குரல் கொடுத்து அழைத்த காரியமும் அப்பட்டமான பிரத்தியட்சமான உண்மையாகும். கர்த்தருக்கே மகிமை. அதைக் குறித்த தெளிவான விபரணத்தை நான் நமது தேவ எக்காளத்தின் கடந்த இதழில் எழுதியிருந்ததை நீங்கள் வாசித்திருப்பீர்கள்.

நான் வேலை செய்த தேயிலைத்தோட்டத்தில் எனக்குக் கொடுக்கப் பட்டிருந்த சிறிய வீட்டில் நான் படுத்திருந்த சின்ன நீண்ட சதுர அறைக்குக் கர்த்தர் வந்து தம்முடைய ஊழியத்தை நான் இனி முழு நேர ஊழியனாகச் செய்யும்படியாகவும், என்னையும் மனைவி பிள்ளைகளையும், எனது ஏழைப் பெற்றோரையும் அவர் எந்த ஒரு தாழ்ச்சியுமின்றி ஆதரித்து நடத்துவதாகவும் திட்டமாக தமது வாக்குத்தத்தத்தை எனக்குக் கொடுத்து என்னைப் பிரித்தெடுத்தார்.

கர்த்தர் என்னை இரட்சித்ததும், தமது பரிசுத்த ஊழியத்திற்கு அழைத்ததும் உண்மையாயிராத பட்சத்தில் பாவியாகிய என்னைக் கொண்டு இத்தனை பலத்த காரியங்களை அவர் ஒருக்காலும் செய்திருக்கமாட்டார். தேவ எக்காளத்தைப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக கடந்த 38 ஆண்டு காலமாக அச்சிட்டு வெளியிட அவர் என்னைப் பெலப்படுத்தி வந்துள்ளார். நல்ல தரமான காகிதத்தில் நிறைய பக்கங்களுடன் தேவ எக்காளம் வெளி வர அன்பின் நேசர் எனது கரங்களை திடப்படுத்தினார். கடைசியாக நாம் வெளியிட்ட தேவ எக்காளம் 120 பக்கங்களைக் கொண்டது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். கர்த்தருக்கே மகிமை.

தம்முடைய மகிமையின் சுவிசேஷத்தை சுமந்து கொண்டு நேப்பாளம், சிக்கிம், பூட்டான், மேற்கு தீபெத் என்றழைக்கப்படும் லே லடாக், காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரிலிருந்து 2 முழுமையான நாட்கள் பயண தூரத்திலுள்ள ஸன்ஸ்கார் என்ற பனிப் பாலைவனம், இமயத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கெல்லாம் நான் சென்று அவருடைய ஜீவ வார்த்தைகளை அங்கு வாழும் மக்களுக்கு கொடுக்கக் கூடிய சிலாக்கியத்தையும், பாக்கியத்தையும் அன்பின் கருணாகர கர்த்தர் எனக்குத் தந்தார்.

தமஸ்குவிலுள்ள தம்முடைய அடியான் அனனியாவிடத்தில் பவுலைக் குறித்து பேசும் போது ''அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான்

தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்'' (அப் 9 : 15) என்று கூறினார். ''நான் தெரிந்து கொண்ட பாத்திரம்'' என்று ஏழைப் பரதேசியாகிய என்னைக் குறித்தும் சாட்சி கொடுக்க என் கன்மலையாம் கர்த்தர் ஆயத்தமாக விருக்கின்றார். அந்த அன்பருக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்த முடியும்?

பயிற்சியாளர்களின் எஜமானர்

காலஞ்சென்ற பரிசுத்தவானான சாந்தப் பிள்ளை அவர்கள் தனது புத்தகம் ஒன்றை ''பயிற்சியாளர்களின் எஜமானர்'' **(Master Trainer)** என்ற தலைப்பில் அன்பின் ஆண்டவரைக் குறித்து எழுதியிருக்கின்றார்கள். விளையாட்டுகளில் சிறந்த வீரர்களை உருவாக்க அரசாங்கம் தலைசிறந்த பயிற்சியாளர்களை நிறைய பணங்களை செலவு செய்து ஏற்படுத்துகின்றனர். சில திறம்பட்ட பயிற்சியாளர்களை வெளி நாடுகளிலிருந்து கூட வரவழைத்து சிறப்பான பயிற்சிகளைக் கொடுக்க ஏற்பாடு செய்கின்றனர். உலகம் அந்தவிதமாக மக்களுக்கு பயிற்சி கொடுக்கும்போது ஆண்டவரும் தம்முடைய மகிமையின் சுவிசேஷத்தை உலகத்துக்கு அறிவிக்கும்படியாக தாம் தெரிந்து கொண்ட மக்களுக்கு ஆவிக்குரிய பயிற்சிகளைக் கொடுக்கின்றனர்.

எகிப்திலிருந்து கானான் தேசத்துக்குப் புறப்பட்ட இஸ்ரவேல் மக்களின் எண்ணிக்கை 10 லட்சம் பேர்கள் என்று வேத பண்டிதர்கள் கூறுகின்றனர். ஒரு மாபெரும் பட்டணமே வனாந்திரத்தில் யாத்திரை செய்து கொண்டிருந்தது என்று நாம் சொல்லலாம். அந்தப் பெரும் ஜனக்கூட்டத்தை குறிப்பாக முரட்டாட்டமுள்ள அந்த வணங்கா கழுத்துள்ள மக்களை எந்த ஒரு வசதியுமற்ற வனாந்திரத்தில் வழிநடத்திச் செல்லுவது என்பது அத்தனை இலகுவான காரியமல்ல. அப்படி வழிநடத்திச் செல்லத் தேவையான எல்லா பயிற்சிகளையும் சர்வ வல்ல தேவன் மோசேக்கு பார்வோனுடைய அரண்மனையில் கொடுத்தார். அந்த நாட்களில் எகிப்தியரின் ஞானம் தலை சிறந்ததாக விளங்கியது (1 இராஜாக்கள் 4 : 30). எகிப்து தேசத்தையே ஆளுகை செய்யக்கூடிய ராஜபரிபாலன பயிற்சி மற்றும் சிறந்த போர்ப் பயிற்சி போன்ற அனைத்து பயிற்சிகளும் அவருக்கு அரண்மனையில் அளிக்கப்பட்டது. எகிப்து தேசத்தை அரசாட்சி செய்யும் ராஜ சிம்மாசனம் மோசேக்கு 4 தடவைகள் அளிக்கப்பட்டதாகவும், அந்த நான்கு வாய்ப்புகளையும் அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் என்றும் வேத பண்டிதர்கள் கூறுகின்றனர். மோசே, பார்வோனின் அரண்மனையில் பெற்ற 40 ஆண்டு கால பயிற்சியும் தனது மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை 40 ஆண்டு காலம் வனாந்திரத்தில் கறவலாடுகளின் பின்னாக பொறுமையுடன் நடந்து சென்று மேய்த்த போது

கர்த்தர் கொடுத்த பரலோகப் பயிற்சியும்தான் அந்த திரள் கூட்டமான இஸ்ரவேல் ஜனங்களை 40 ஆண்டு காலம் பாழான நிலத்திலும், ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்திர வெளியிலும் அருமையாக வழிநடத்திச் செல்ல அவருக்கு வகைசெய்தது.

ஆங்கிலமொழியில் பூஜ்யமான அறிவுடன் வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்துக்குள் கொண்டு சென்ற என் அன்பின் தேவன் அந்த வெள்ளைக்காரர்களின் அலுவலகத்தில் வைத்தே பின் நாட்களில் நான் செய்ய வேண்டிய தேவ ஊழியங்களுக்கான ஆங்கிலப் பயிற்சியை எனக்குக் கொடுத்தார். அந்த தேயிலைத் தோட்ட அலுவலகத்தில் நான் கடைநிலை குமஸ்தாவாக இருந்தேன். எனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளில் ஒன்று தேயிலைத் தோட்டத்துக்கு வரும் எல்லாக் கடிதத் தொடர்புகளையும் நான்தான் பைல்களில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். சரியாக 91 பைல்கள் என் வசம் இருந்தன. ஆங்கிலம் மற்றும் தமிழ் கடிதங்கள் எல்லாவற்றையும் நான் வாசித்து அந்தந்த பைல்களில் போட்டு வைத்து அந்தக் கடிதத்தின் சாராம்சத்தை எனக்கு மேலாக உள்ள அலுவலர்கள் மற்றும் முதலாளிகள் சொன்ன உடனே அந்தக் கடிதம் இருக்கும் கோப்பை நான் அவர்களுக்கு எடுத்துக்கொடுக்க வேண்டும். அந்தக் கடினமான வேலையைச் செய்ய வேண்டிய ஆங்கில அறிவை, ஆங்கிலம் மற்றும் தமிழ் வேதாகமத்தை ஒப்பிட்டுப் படித்தும், தேவ சமூகத்தில் நான் கண்ணீர் சொரிந்து அழுது ஜெபித்தும் பெற்றேன். அதின் காரணமாக எந்த ஒரு கடிதம் என்று குறிப்பாக மேலதிகாரிகள் என்னிடம் சொன்ன உடனே அந்தக் கடிதம் இருக்கும் கோப்பை எடுத்து அப்படியே கொடுப்பேன். அதுமட்டுமல்ல, அவர்களுக்குச் சந்தேகம் அளிக்கும் ஆங்கில வார்த்தைகளை எல்லாம் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு ஆண்டவர் எனக்கு நல்ல ஆங்கில அறிவைத் தந்தார். அந்த தேயிலைத் தோட்ட அலுவலகத்தில் எனக்குக் கிடைத்த அந்த ஆங்கில அறிவின் காரணமாகத்தான் மேல் நாடுகளிலிருந்து பரிசுத்த பக்தர்களின் வாழ்க்கைச் சரித்திர பிரபந்தங்களை விலைக்கு வாங்கித் தருவித்து அவைகளை தேவ பெலத்தால் உங்கள் உள்ளங்கவரும் பரிசுத்த நடையில் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து உங்களுக்கு தேவ எக்காளத்தில் அளித்து வருகின்றேன்.

உபவாச ஜெப பயிற்சி

நான் தேயிலைத் தோட்டத்தில் குமஸ்தாவாக பணிபுரிந்த நாட்களில்தான் அன்பின் பரம தகப்பன் தமது வருங்கால தேவ

ஊழியத்திற்கான உபவாச பயிற்சியையும் எனக்கு அளித்தார். நான் வேலை செய்யும் தேயிலைத் தொழிற்கூடத்திற்கு தினமும் சில கிலோ மீட்டர் தொலைவு நான் நடந்து வந்து பணி செய்ய வேண்டும். எந்த ஒரு வாகனப் போக்கு வரத்தும் அங்கு கிடையாது. காலை 7 : 30 மணிக்கு நான் அலுவலகத்தில் இருக்க வேண்டும். அப்படியானால், நான் காலை 6 மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டாக வேண்டும். அந்தக் காலை நேரத்தில் எனக்காக கரிசனையோடு எழும்பி ஆகாரம் தயார் செய்து கொடுக்க மனைவியால் இயலாது. அவர்கள் முற்றும் பெலவீனமானவர்கள். காலையில் நான் எழுந்து என்னால் முடிந்தால் தான் ஆகாரம் தயார் செய்து சாப்பிட்டுவிட்டு மத்தியானத்துக்கும் ஆகாரம் எடுத்து வருவேன். இல்லையேல் நான் ஆகாரம் எடுத்து வரும் பாத்திரத்தை நன்கு சுத்தம் செய்து பழபழக்கும் வெறும் பாத்திரத்தை வேலை ஸ்தலத்திற்குக் கொண்டு வருவேன். என்னோடு வேலை செய்பவர்கள் ''இன்றைக்கு மத்தியான ஆகாரம் கொண்டு வரவில்லையா? அப்படியானால் எங்கள் வீட்டிற்கு சாப்பிட வாருங்கள்'' என்று அழைப்பதை தவிர்ப்பதற்காக நான் அப்படிச் செய்வேன். பல நாட்களில் எனது ஆகாரம் வெறும் தண்ணீராகவே இருந்திருக்கும். அந்த தண்ணீரைக் குடித்துவிட்டு தேயிலைத் தொழிற்சாலையின் உச்சி மாடியில் போய் மத்தியானம் 12 க்கும் 1 : 30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஜெபத்தில் தரித்திருப்பேன். அத்துடன் எனது ஹிந்தி மொழி அறிவையும் பெருக்கிக் கொண்டேன்.

இந்தவிதமாக ஆகாரம் சாப்பிடாமல் இருந்து இருந்து பழக்கமாகிவிட்டபடியால் நினைத்த நேரம் நான் உபவாசிக்கவும், நீண்ட நாட்கள் உபவாசம் இருக்கவும் கர்த்தர் எனக்கு நன்கு பயிற்சி கொடுத்துவிட்டார். ஒருக்கால் தேவன் என்னை இந்தவிதமான உபவாசப் பயிற்சியில் கொண்டு வந்திருக்காதபட்சத்தில் தேவ எக்காளம் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்க முடியாது. இத்தனை விசாலமாக தேவன் என்னைப் பயன்படுத்தியிருக்கவுமாட்டார். உண்மைதான், ஆரம்பத்தில் நாம் பார்த்த சாந்த பிள்ளை என்ற பரிசுத்தவான் குறிப்பிட்டது போல தேவன் நிச்சயமாகவே ''பயிற்சியாளர்களின் எஜமானர்தான்''

என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக

அன்பின் ஆண்டவரை அறிகிற அறிவில் வளர வளர எனது வாழ்வில் என்னைப் பற்றிக் கொண்டிருந்த பல மாம்ச ஆசை விருப்பங்களை தகன

பலிபீடத்தில் தகனிக்கும்படியாக நான் பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்பட்டேன். விசேஷமாக, ஆகார மோகத்தை நான் கைவிடும்படியாக ஏவப்பட்டேன். அதின் காரணமாக, மிகுந்த ஆசை ஆவலோடு நான் சாப்பிட்டு வந்த இறைச்சியை சாப்பிடாமல் நிறுத்தினேன். அதின் பின்னர் நான் விரும்பிப் புசித்த மீன், கருவாடு வகைகளை விலக்கும்படியாக ஆவியானவரால் உணர்த்தப்பட்டு அவைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தேன். நான் சிறுவனாக இருந்தபோது நான் மிகவும் விருப்பமாக காலையில் புசிக்கும் ஆகாரம் கஞ்சியும் அதின் கூட்டுக்கு கருப்புகட்டியும்தான். விருத்தாப்பிய வயதில் இருக்கும் இந்த நாட்களிலும் அந்தக் கஞ்சி உணவே எனக்கு மிகவும் திருப்தியான ஆகாரமாகும். அன்று கருப்புகட்டி கூட்டுக்கு இருந்தது, ஆனால் இன்று ஊறுகாயை பயன்படுத்துகின்றேன்.

தொலைக்காட்சி, வானொலியை நான் பயன்படுத்துவதில்லை. தொலைக்காட்சிப் பெட்டி என்னிடம் கிடையாது. செய்தித்தாள் வாசிப்புக்கும் தேவ பெலத்தால் முற்றுப் புள்ளி வைத்தேன். இந்த இதழின் முகப்புச் செய்தியில் ''நீங்கள் செய்தித் தாளை வாசித்துக் கொண்டு அதே சமயம் தேவனுடைய வேத புத்தகத்தையும் வாசித்து அதின் பரலோக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவது கூடாத காரியம்'' என்ற டாம் ஹானி என்ற பரிசுத்தவானின் வார்த்தைகள் என்னை அதிகமாகத் தொட்டது, என்னை அதிர்ச்சியடையப் பண்ணியது. அந்த வார்த்தைகளை நான் படித்த நாளிலிருந்து தெருக்களில் போனால் கடைகளின் முன்பாகத் தொங்கும் செய்தித்தாட்களின் தலையங்க போஸ்டர்களைக்கூட நான் கண்ணேறிட்டுப் பார்ப்பதில்லை. தேவனுடைய வசனங்களை தியானிப்பதற்கே அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றேன். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

அனைத்தும் அர்ப்பணமே, அனைத்தும் இரட்சகருக்கே

கடந்து சென்ற ஆண்டுகளில் சாத்தானாம் பிசாசு என் காதிற்குள் சொல்லும் ஒரு காரியம் ''பார், ஊழியத்தின் பாதையில் உனது கரங்களுக்கு வந்த பணத்தைப் பார்த்தாயா? இந்தப் பணத்தை எல்லாம் ஊழியத்திற்குச் செலவிடாமல் அப்படியே வங்கியில் நிரந்தர வைப்பு நிதியில் (Fixed Deosit) போட்டுவிட்டு மாதந்தோறும் அதில் வரும் வட்டியை எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு உடம்பை அலட்டிக் கொள்ளாத சிறிய தேவ ஊழியங்களைச் செய்து கொண்டு அப்படியே வீட்டோடு அடங்கி இருந்துவிடு'' என்று கூறுவான். சாத்தானுக்கு நான் பிரதியுத்தரமாக ''தன்

ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்'' (மாற் 8 : 35) என்று எழுதப்பட்டிருக்கின்றதே. அத்துடன் மதிகேடனான ஐசுவரியவானுக்கு தேவன் கொடுத்த உத்தரவு ''மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?'' (லூக்கா 12 : 20) என்ற தேவ வார்த்தையை நீ அறியாதவனா?'' என்று கூறி அவனை துரத்தியடித்திருக்கின்றேன்.

என்னோடு கூட கோத்தகிரியில் தங்கள் தேவ ஊழியங்களை மிக எளிமையாக ஆரம்பித்து கால்நடையாக நடந்து சென்ற தேவ ஊழியர்கள் இன்று தங்களுக்கென்று சொந்த வீடு வாசல்களையும், நிலபுலங்களையும் கொண்டு, தங்களுடைய வாழ்க்கையை மிகுந்த பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு காலத்தில் கால் நடையாக சுற்றி அலைந்து ஊழியம் செய்த அவர்களை நாம் இப்பொழுது ரஸ்தாவில் நடைபயணத்தில் காண்பதற்கில்லை. தங்களுடைய விலையுயர்ந்த கார்களுக்குள் அப்படியே மறைந்து கொண்டனர். மிகுந்த ஆடம்பரத்தோடு அலங்கரிக்கப்பட்ட தங்கள் சொந்த வீடுகளில் வாழ்கின்றனர். செய்தித்தாட்கள் வாங்குவதற்கும், காலையில் சமவெளிப் பிரதேசத்திலிருந்து கோத்தகிரி மலைக்கு வரும் காய்கறிகளையும், கீரைகளையும் வாங்க தங்கள் கார்களை பயன்படுத்துகின்றனர். கர்த்தர் அவர்களை இன்னும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக.

இங்கு கோத்தகிரியில் பிரபல்யமான ஒரு கத்தோலிக்க குருவானவரை எனக்குத் தெரியும். மிகவும் இரக்கமுள்ளவர். தனது ஜீப்பில் ரஸ்தாவில் போனால் நடக்க முடியாமல் தெருவில் செல்லும் ஏழை எளிய மக்களை எல்லாம் தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லுவார். அந்த மக்கள் எந்த அழுக்கு, எந்த கந்தை வஸ்திரம் உடுத்தியிருந்தாலும் அதை எல்லாம் அவர் கண்டு கொள்ளமாட்டார். அநாதைப் பிள்ளைகளுக்காக ஒரு அநாதை இல்லத்தையும் வைத்து உண்மையோடும், உத்தமத்தோடும் அவர் நடத்தி வருகின்றார். அவர்கள் ஒரு நாள் என்னைச் சந்தித்தபோது இவ்வண்ணமாக என்னிடம் சொன்னார்கள் ''சகோதரனே, இங்கு கோத்தகிரியில் உள்ள பல தேவ ஊழியர்களை நான் நன்கறிவேன். அவர்கள் கோத்தகிரிக்கு எந்த ஒரு நிலையில் வந்தார்கள், இப்பொழுது அவர்கள் எந்த ஒரு ஆடம்பரமான நிலையில் வாழ்கின்றார்கள் என்பதை நான் நன்கறிவேன். ஆனால், கர்த்தருக்கு மகிமையாகச் சொல்லுகின்றேன், நீங்கள் கோத்தகிரிக்கு எந்த ஒரு நிலையில்

வந்தீர்களோ அதேவிதமாக எந்த ஒரு ஆடம்பரமும், பகட்டும் இல்லாமல் ஒரு எளிய தேவ ஊழியனாக யாவருக்கும் முன்மாதிரியாக இன்று வரை காணப்படுகின்றீர்கள். உங்கள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப் படுகின்றது. நான் உங்களை அதிகமாக நேசிக்கின்றேன்'' என்றார்கள். கர்த்தருக்கே மகிமை.

சமீபத்தில் ஒரு அன்பான தேவப் பிள்ளை தனது கடிதத்தில் ''ஆண்டவர் உங்களுக்கு ஒரு அழகான வீட்டை சொந்தமாக சீக்கிரம் தரப்போகின்றார்'' என்று எழுதியிருந்தார்கள். பின்னர் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார்கள். அப்பொழுது நான் அவர்களிடம் ''உங்கள் கடிதத்தில் ஆண்டவர் எனக்குச் சொந்தமாக ஒரு அழகான வீடு தரப்போவதாக எழுதியிருந்தீர்களே, அந்த வீடு பூமிக்குரிய வீடா? அல்லது பரலோகத்துக்குரிய வீடா?'' என்று நான் கேட்டேன். ''ஆம், அது பூமிக்குரிய வீடுதான்'' என்று சொன்னார்கள். ''இனி உங்கள் கடிதத்தில் அந்த வார்த்தைகளை எழுதாதேயுங்கள், இந்த உலகத்தில் எனக்கென்று சொந்தமாக ஒரு வீடு இருப்பதை கடைசி வரை நான் விரும்பவில்லை என்பதை நிச்சயமாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று அவர்களிடம் அன்பாகச் சொன்னேன். கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

என் கரங்களைக் கடந்து சென்ற தேவ மக்கள் தேவ ஊழியங்களுக்கென்று கொடுத்த பணங்களைக் கொண்டு உலகப் பிரகாரமாக நான் எதை எதை எல்லாமோ எனக்கென்றும், என்னுடைய சந்ததிக்கென்றும் கட்டவும், நாட்டவும், கொள்ளவும், சேமிக்கவும் நிறைய சந்தர்ப்பங்கள் வந்தன. ஆனால், நான் அப்படிச் செய்ய என் உள்ளத்தில் கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்கவில்லை. ''கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன், நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை'' (சங் 18 : 21) என்று கூறிய சங்கீதக்காரரைப் போலவும் ''நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை. ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை, அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன்'' (நெகேமியா 5 :15,16) என்ற வைராக்கியமான தேவ மனிதரின் வார்த்தையின்படி ஆண்டவருடைய ராஜ்யத்தைக் கட்டவும், மக்களை மனந்திரும்புதலுக்கும், தேவனைப் பற்றும் அன்புக்கும், பரிசுத்தத்துக்கும் நேராக வழிநடத்தும் செய்திகளை நமது தேவ எக்காளப் பத்திரிக்கையில் எழுதவும் என்னை தேவ பெலத்தால் அர்ப்பணித்தேன்.

காலஞ்சென்ற என் அருமை மனைவியின் கல்லறை சில ஆண்டு காலமாகக் கட்டப்படாமல் அப்படியே தரை மட்டத்திலேயே கிடந்தது. சில பரிசுத்த தேவப் பிள்ளைகள் அதைக் குறித்துக் கேள்விப்பட்டு அவர்களின் கல்லறையைக் கட்டாயம் கட்டிவிடும்படியாக என்னை வற்புறுத்தினதுடன் ஓரிரு அன்பான மக்கள் அதற்கு உதவியும் செய்தார்கள். அந்த மக்களின் காரணமாக கல்லறை கட்டி முடிக்கப்பட்டது. கல்லறை வேலைகள் எல்லாம் முடிந்த பின்னர் அதில் மீதியிருந்த சாந்தை கல்லறைக்கு அருகில் கொட்டி சமப்படுத்தி அதிலும் ஒரு கல்லறை இருப்பதைப் போன்ற ஒரு எண்ணத்தை மக்கள் கண்டு கொள்ளும்படியாக எனது பிள்ளைகள் இருவரும் செய்தனர். ஏனெனில், நான் எனது பிள்ளைகளிடம் ஏற்னெவே எனக்கு கல்லறை எதுவும் கட்டக்கூடாது என்று திட்டமாக சொல்லி வைத்திருக்கின்றபடியால் அவர்கள் சாந்து போட்ட இடத்தில் எனது சடலத்தை வைத்துவிட்டால் அம்மாவுக்கு அருகில் அப்பா வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கண்டு கொள்ளலாம் என்பதற்காக அப்படிச் செய்தனர். அவர்களுடைய செயலை நான் அருகில் இருந்து கவனித்தபோது உள்ளங் கசிந்தேன். எனக்கென்று சொந்தமாக ஒரு கல்லறைக் கட்டிடத்தைக்கூட விரும்பாத எனது தியாக நினைவுகளைத் தேவன் கனப்படுத்துபவராக இருக்கின்றார்.

உங்கள் பிதா இரக்கம் உள்ளவராக இருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.

கிறிஸ்தவர்கள் பலரும் குறிப்பாக கர்த்தருக்கு ஊழியஞ் செய்கின்றவர்கள் தாங்கள் ஆண்டவர்மேல் அதிகமாக அன்பு கூருவதைப் போல அவரை வெகுவாகப் பாராட்டி அன்பே என்றும் ராஜா என்றும், இயேசப்பா என்றும், கண்ணே என்றும், மணியே என்றும், டாடி என்றும் இன்னும் பற்பலவித அன்பின் பாச வார்த்தைகளோடு அவரை அழைத்து உள்ளம் கசிவார்கள். ‘‘என்னுடைய மகள் என்னிடம் பால் பாயிண்ட் பேனா வாங்கித் தரும்படி கேட்டாள், ஆனால் என்னுடைய டாடி அவளுக்கு பால்பாயிண்ட் பேனா வாங்கிக் கொடாதே, அவளுக்கு ரீபில் (Refil) மட்டும் வாங்கிக் கொடுத்தால் போதும், அப்படியானால் உனக்கு 2 ரூபாய் மிச்சமாகும்’’ என்று சொல்லிவிட்டார் என்பார்கள். எங்க டாடி என்னை இன்று அதிகாலையில் என் விலாவிலே தட்டி ஜெபிக்க எழுப்பினார் என்றெல்லாம் கதை கதையாகச் சொல்லுவார்கள். ஆனால், அந்த மக்களுடைய வாழ்க்கையை கவனித்தால் அவர்களிடம் இரக்கம், ஈகை, அன்பு எதுவும் இருக்காது. அவர்களுடைய உள்ளத்திலுள்ள கபடம், சூது, பெருமை,

மாய்மாலத்தை நீங்கள் இந்த உலகத்தில் எங்கும் காணவியலாது. மற்ற தேவ மக்களை வெகு அற்பமாக நினைப்பார்கள். (பரிசேயனின் ஆவி - லூக்கா 18 : 11) அவர்கள் இருதயம் கருங்கல்லாக இருக்கும். ஆனால், அவர்கள் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள். அந்நிய பாஷைகளைப் பேசி ஆர்ப்பரிப்பார்கள். தங்கள் கைகளை வானத்திற்கு நேராக உயர்த்தி உடனே பரலோகம் போகப்போகின்றவர்களைப் போல வானத்திற்கும் பூமிக்கும் நடுவாக குதி குதி என்று குதிப்பார்கள். ஆனால், தேவன் விரும்பும் இரக்கம், ஈகை, அன்பு எதுவும் இருக்காது. அவர்களுக்குப் பக்கத்தில் வாழும் ஏழை எளிய தேவ மக்களின் நலனைக் குறித்து கொஞ்சம்கூட கண்டு கொள்ளமாட்டார்கள். அவர்களைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

பலி, ஆராதனை, துதி, ஆடல், பாடல், ஆர்ப்பரிப்பு எனக்கு அவசியமில்லை, இரக்கத்தையே நான் விரும்புகிறேன் என்று ஆண்டவர் திட்டவட்டமாகச் சொன்னார் (மத் 9 : 13, மத் 12 : 7) தன்னண்டை வந்து நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்ற ஜனங்களைப் பார்த்து யோவான் ஸ்நானகன் சொன்ன வார்த்தைகளை கவனித்தீர்களா? ''இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன், ஆகாரத்தையுடையவனும் அப்படியே செய்யக்கடவன்'' (லூக்கா 3:11) என்று இரக்கத்தைப் பிரதானப்படுத்தி அவர் கூறுவதை நாம் காண்கின்றோம். கொர்நேலியுவின் தானதர்மங்கள் பரலோக தேவனின் சந்நிதியில் போய் எட்டினது (அப் 10 : 4) என்ற வார்த்தை நம்மை எத்தனையாகப் பரவசப்படுத்துகின்றது!. ஏழைகள், ஊனர்கள், சப்பாணிகள், குருடர்களை அழைத்து நீ விருந்து செய், அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் (லூக்14 : 13,14) என்ற இரட்சகரின் வார்த்தைகளின் ஒரு உறுப்பு மாறும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? (லூக்கா 16 : 17)

நம்மில் அநேகரை தேவன் தம்முடைய நாமத்திற்கு மகிமையாகப் பயன்படுத்தாமல் போனதின் காரணம் இரக்கமும், ஈகையும், அன்பும், கருணையும் நம்மில் காணப்படாமல் போனதினால்தான். ''நீ அதிகமான அன்பு, கருணை இல்லாதவனாக இருந்தால் நீ அதிக பரிசுத்தமுள்ளவனாக இருக்க முடியாது'' (If you are not very kind you are not very holy) என்று ஒரு தேவ மனிதர் கூறுகின்றார். எத்தனை உண்மையான வார்த்தைகள். பரிசுத்த மகாத்துமா சாது சுந்தர்சிங் அவர்கள் தனது கடைசி காலத்தில் வாழ்ந்த அவருடைய பங்களாவை இமயமலைகளிலுள்ள சுபத்துவில் நான்

போய்ப்பார்த்து அந்த பங்களாவில் எனது கண்ணீரை ஊற்றி நான் ஜெபித்து வந்திருக்கின்றேன். அவருடைய பங்களாவுக்கு அருகில் அவருக்குச் சொந்தமான மற்றொரு அழகான சிறிய வீடும் உள்ளது. அங்குள்ள மக்கள் என்னிடம் ''அந்த வீடும் சாது சுந்தர்சிங் அவர்களுடைய வீடுதான். அந்த வீட்டை அவர் தனக்கு வீடில்லாத ஒரு ஏழைத் தோட்டிக்கு முற்றும் இலவசமாகக் கொடுத்துவிட்டார்'' என்று என்னிடம் சொன்னார்கள். உலகத்தின் பணம் காசைக் குறித்து கொஞ்சம் கூட அக்கரையும், கவலையும், மதிப்பும் வைக்காத தேவ மனிதர் அவர். தனக்கு 2 அங்கிகள் கிடைத்துவிட்டால் உடனே ஒரு அங்கியை மற்றவர்களுக்கு கொடுத்துவிடுவார். தனக்கு 2 வேதாகமங்கள் சேர்ந்துவிட்டால் ஒன்றை தான் அன்பாக நேசிக்கின்ற ஒரு தேவப் பிள்ளைக்குக் கொடுத்துவிடுவார். இரக்கத்தின் பிரதிபலிப்பாகத் தனது பரம எஜமானரைப் போல அவர் விளங்கினார். ஆண்டவரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட பரிசுத்த தேவ மனிதர்கள் எல்லாரும் தங்கள் ஆண்டவரைப்போல இரக்கமுள்ளவர்களாக விளங்கினார்கள் என்பதை நாம் அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை வாசித்துப் பார்த்தால் கண்டு கொள்ளலாம்.

பாவியாகிய நான் சிறுவனாக எங்கள் ஊருக்கு அருகிலுள்ள மெய்ஞ்ஞானபுரம் என்ற பெரிய கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது எனது அருமைத் தாயார் எனக்கு அனுதினமும் ஒரு சிறிய அலுமினியப் பாத்திரத்தில் சாதம் வைத்து அதற்கு மேலாக தேங்காய் துவையல் அரைத்து வைத்துத் தருவார்கள். எனது பள்ளி நாட்களில் எல்லாம் மத்தியான வேளையில் எனது ஆகாரம் அதுவேதான். சில கில்லோ மீட்டர் தொலைவு நடந்து நான் பள்ளிக்குப் போவேன். வழியில் பசி, பட்டினியாக யாரையாவது நான் சந்தித்தால் எனது ஆகர்ரத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய வயிற்றுக்குப் போஜனம் அளித்துவிட்டு நான் பசி பட்டினியாக வெறும் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் செல்லுவேன். அப்படியே எங்கள் வீட்டிலுள்ள அரிசி, பருப்பு, கருப்புகட்டி போன்றவற்றையும் பணம் காசுகளையும் என்னுடைய பெற்றோருக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டுபோய் எங்கள் ஊரிலுள்ள ஏழை எளியோருக்குக் கொடுத்துவிடுவேன். நேப்பாள நாட்டிற்கு தேவ ஊழியங்களுக்குச் செல்லும் சமயங்களில் இங்குள்ள தேவப் பிள்ளைகளிடமிருந்து நல்ல தரமான பயன்படுத்திய சட்டை துணிகளை வாங்கிக்கொண்டு போய் அந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து வந்தேன். பின்னர் எல்லைப் புறத்திலுள்ள சுங்கச் சாவடிகளில்

உள்ள இந்திய மற்றும் நேப்பாள அதிகாரிகள் அதை அனுமதிக்காததால் அந்த நேப்பாள நாட்டிலேயே புது துணிகளாக கடையில் வாங்கி ஏழைகளுக்கு கொடுத்தேன். இன்று வரை வடமாநில தேவ ஊழியங்களில் ஒரு கணிசமான சிறிய தொகையை ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து வருகின்றேன். இந்தவிதமான கருணை உள்ளத்தைக் கர்த்தர் எனக்குக் கிருபையாகக் கொடுத்த தயவுக்காக நான் அவருக்குத் துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன். ''அன்பின் தகப்பனே, நீர் என்னை இரக்கம், அன்பு, தயாளம், ஈகை உள்ளவனாக படைத்ததற்காக நான் உமக்குத் துதி செலுத்துகின்றேன்'' என்று அடிக்கடி நான் அவருக்கு நன்றி கூறி ஜெபித்து வருகின்றேன். தேவ மக்கள் ஊழியங்களுக்காகத் தரும் பணங்களை ஒரு கரத்தில் பெற்று அடுத்த கரத்தின் வழியாக தேவ ஊழியங்களுக்காக செலவு செய்துவிடுகின்றேன். வங்கிகளில் நான் அவைகளைச் சேர்த்துக் குவிப்பதில்லை. பெரும்பாலும் எனது வங்கியின் சேமிப்பு கணக்கில் அபாய அளவான குறைந்தபட்ச தொகையான ரூபாய் 500 அல்லது சற்று கூடுதலாகவேதான் கிடக்கும்.

தேவனுக்கு முன்பாக என்னை உத்தமனாக நிறுத்திய எனது ஜெப உபவாச வாழ்க்கை

தேவ எக்காளம் கடந்த 38 ஆண்டு காலமாக அநேக ஆயிரங்களுக்கு எண்ணடங்கா ஆசீர்வாதங்களை அள்ளிக் கொண்டு வந்ததென்றால் அதின் ஒரே காரணம் ஒரு பரிசுத்த தேவப் பிள்ளை சமீபத்தில் எனக்கு எழுதியது போல அதற்காக செலுத்தப்பட்ட கிரயம் பெரியதாகும். கோத்தகிரியில் நான் இப்பொழுது இருப்பது எனது நான்காம் வாடகை வீடாகும். நாங்கள் இருந்த ஒவ்வொரு வீட்டிலும் நான் எனது ஜெபத்திற்காக மணிக்கணக்காக தேவ சமூகத்தில் முழங்காலூன்றியிருந்த இடம் மிகுந்த வழவழப்புடன் இருந்ததை என்னுடைய பிள்ளைகள் கண்டு அந்த இடத்தை எனக்குச் சுட்டிக் காண்பித்திருக்கின்றனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

எனது படுக்கை அறையிலிருந்து ஒவ்வொரு நாள் காலையிலும் நான் வெளியே வரும்போது குறைந்தபட்சம் 2 மணி நேரங்கள் ஆண்டவரோடு தனி ஜெபம் இல்லாமல் நான் என் அறையின் கதவைத் திறப்பதில்லை. அதின் பின்னரும் கர்த்தரைப் பாடித்துதிப்பதிற்கும், ஜெபிப்பதற்கும் அந்த நாளில் எப்படியும் 2 மணி நேரங்களாவது செலவிட்டுவிடுவேன். எத்தனை தேவப்பணிகள் இருந்தாலும் இந்த ஜெபதியானத்திற்கு நான் என் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்து வருகின்றேன். என்னுடைய பெலத்தினாலல்ல (சகரியா 4 : 6) தேவகிருபை அதைச் செய்து வருகின்றது.

ஆம், நான் இருக்கிறது தேவனுடைய கிருபையினாலே இருக்கின்றேன் (1 கொரி 15 : 10). சரீரத்தில் நான் மிகவும் பெலவீனமாக இருந்து கடுமையான சோர்பு, களைப்பு இருந்தால் மட்டும் இந்த ஜெப ஒழுங்கை ஏதோ ஒரு நாளில் நான் கடைப்பிடிக்க முடிவதில்லையே தவிர மற்றபடி தேவ பெலத்தால் தினமும் இந்த பரிசுத்த பழக்கம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டுகளில் நான் தினமும் எத்தனை மணிக்கு எழும்பினேன், எத்தனை மணி நேரம் ஜெபித்தேன், எந்த நாட்களில் உபவாசம் இருந்தேன், கர்த்தர் என்னோடு எந்த எந்த வசனங்களைக் கொண்டு பேசினார், நான் தேவ சமூகத்தில் வைத்த ஜெப வேண்டுகோள் என்ன? கர்த்தர் அதற்கு எப்பொழுது பதில் அளித்தார் என்ற விபரங்கள் எல்லாம் டயரிகளில் எழுதி அவைகளை இன்று வரை வைத்து வந்திருக்கின்றேன். அவைகளை அவ்வப்போது எடுத்துப் பார்த்து கர்த்தர் எங்களை வழிநடத்தின பாதைகளையும், அவரின் தாயடைவான அன்பையும் நினைத்து அவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுத்து மகிழ்ந்து வருகின்றேன்.

எந்த ஒரு காரியத்தையும் மாம்சத்தின்படி செய்யாமல் தேவ ஒத்தாசையையே நாடுவேன். தேவ எக்காளத்தின் மொழிபெயர்ப்பு வேலைகளை எல்லாம் கர்த்தரே செய்யும்படியாக மொழிபெயர்க்கக்கூடிய புத்தகத்தை ஆண்டவர் பாதங்களில் வைத்து பல தடவைகளும் முகங்குப்புற விழுந்து கெஞ்சுவேன். செய்திகளின் தலையங்கங்களுக்கு என்ன பெயர் சூட்டுவது, செய்திகளை எப்படிக் கோர்வைப்படுத்தி அமைப்பது என்ற விபரங்களை எல்லாம் ஆண்டவரிடம் முழங்கால்களில் நின்று கேட்டுத் தெரிந்து கொள்ளுவேன். பறவைகள், விலங்கினங்கள் மற்றும் நான் காண்கின்ற இதர நிகழ்ச்சிகளை உங்களுக்கு ஆசீர்வாதமான விதத்தில் நல்ல உதாரணங்களாகக் கொண்டு வருவது எப்படி என்றும் அந்த அன்பரிடமே கேட்டு அவர் தரும் தேவ ஆலோசனைகளை உங்களுக்கு எழுதுவேன். அப்படி கர்த்தரால் கொடுக்கப்பட்ட ''அவைகளை எல்லாம் ஞானமாகப் படைத்தீர்'' என்ற தலைப்பில் நான் எழுதியுள்ள ஒரு செய்தியை நீங்கள் இந்த இதழில் காணலாம்.

செய்திகளை கம்பியூட்டரில் தயார் செய்வதற்கு முன்பும் அவைகளை டைப்செய்த பின்பும் ஜெபிப்பேன். அச்சுக்கூடத்திற்கு செய்திகளை அச்சுப் பதிப்புக்காக அனுப்பும் முன்பு அவைகளை தேவ சமூகத்தில் வைத்து ஜெபித்து அனுப்புவேன். பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு வீடு வந்ததும் அவைகளைப் பெட்டிகளிலிருந்து பிரிக்கு முன்பு ஜெபிப்பேன். அவைகளைத்

தனித்தனியாக உறைகளில் போட்டு தேவ எக்காள சந்தாதாரர்களுக்கு அனுப்புவதற்காக அஞ்சலகம் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு முன்னரும் அவைகளைப் படிக்கும் ஆத்துமாக்களோடு கர்த்தர் பேசவும், அதின் மூலமாக நித்திய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும் ஜெபிப்பேன்.

அசிசி பட்டணத்து பரிசுத்த துறவியான பிரான்சிஸ் மகாத்துமா அவர்கள் தான் மரிப்பதற்கு முன்பாகத் தனது சொந்த சரீரத்திடம் மன்னிப்புக் கேட்டாராம். ஆம், அவர் தனது சரீரத்தை தனது வாழ்நாள் காலத்தில் நன்கு வதைத்து சித்திரவதை செய்துவிட்டார். சரீரம் விரும்பிய எதனையும் அவர் அதற்குக் கொடுக்க மறுத்துவிட்டார். சரீரம் ஆசை ஆவலாக மீன் சாப்பிடவேண்டுமென்று ஆசைப்பட்டால் அதின் விருப்பப்படி மீன் வாங்கிக் கொண்டு வந்து நல்ல சுவையாக அதை தயார் செய்து அரை கில்லோ மீனுக்கு அரைக் கில்லோ உப்பைக் கலந்து அதை தனக்கு முன்பாக வைத்து தனது சரீரத்தை சாப்பிடும்படியாகச் சொல்லுவார். ஆம், இந்தவிதமாக அந்த பரிசுத்தவான் தனது சரீரத்தை வாட்டி வதைத்திருந்தார்.

அந்த அளவிற்கு நான் எனது சரீரத்தை வதைக்காவிட்டாலும் எனது வாழ்நாட்காலத்தில் எனது சரீரத்தை உபவாசத்தால் நன்கு ஒடுக்கியிருக்கின்றேன். கர்த்தருக்குள் நான் திட்டமிட்டு உபவாசித்த நாட்கள் எத்தனையோ இருந்தபோதினும், நானாகவே எனது சமையல் வேலையைக் கவனித்து ஆகாரம் பொங்கிச் சாப்பிட்டபடியால் எனது சோம்பல், அசதி மற்றும் அதிகமான தேவப் பணிகள் காரணமாக ஆகாரம் சாப்பிடாமல் சும்மா இருந்த நாட்கள் ஏராளமுண்டு. சமையல் அறைக்குச் சென்று அங்கு சமையல் பாத்திரங்கள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதைக் கண்டு சோம்பல் பட்டு சமையல் செய்யாமல் பட்டினியாக இருந்த நாட்கள் பலவுண்டு. அந்த நாட்களை எல்லாம் உபவாச நாட்களாக்கிக் கொண்டேன். ஒரு தேவப் பிள்ளை சொன்னது போல எனது முழு வாழ்க்கையுமே உபவாச ஜெபம்தான் என்ற அளவுக்கு எனது உபவாச ஜெபம் அமைந்தது. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

மிகுந்த பணச் செலவுகள் நிறைந்த இமயமலை தேவ ஊழியங்களை எல்லாம் நான் தேவ பெலத்தால் எனது நீண்ட உபவாச ஜெபங்களின் மூலமாக கர்த்தருடைய ஒத்தாசையோடு செய்து முடிக்கத் தேவ கிருபை பெற்றேன். தேவ ஊழியங்களைச் செய்ய முடியாதபடி சத்துரு தடைகளைக் கொண்டு வரும்போதும், ஆவியில் உற்சாகமிழந்து காணப்படும்போதும் உபவாச ஜெபத்தையே நான் என் கரங்களில் எடுப்பேன்.

நான் 1976 ஆம் ஆண்டு எனது தேயிலைத் தோட்ட வேலையை விட்டுவிட்டு கோத்தகிரியில் வந்து குடியமர்ந்ததும் முதன் முதலாவதாக எங்களது வீட்டிற்கு மேலாக இருந்த ஒரு ஆங்கிலேய விடுமுறை விடுதியில் **(Holiday Home)** ஒரு அறை வாடகைக்கு எடுத்து மூன்று நாட்கள்



தொடர்ச்சியாக புசியாமலும் குடியாமலும் உபவாசத்தில் அமர்ந்தேன். நான் எனது உபவாச ஜெபத்தை ஆரம்பித்த முதல் நாள் இரவில் சாத்தானாம் பிசாசு எனக்கு பயமுண்டாக்க என்மேல் விழுந்து என்னை அப்படியே அழுத்தத் தொடங்கினான். என்னால் கைகால்களை அசைக்க முடியாத, வாய் பேச முடியாத அளவில் அவனோடு போராடிக் கொண்டிருந்தேன். அவன் என்னைவிட்டு எழுந்தபாடில்லை. கடைசியாக ''சத்துருவே, நான் என் ஆண்டவரின் பிள்ளை, அவர் என்னைத் தமது இரத்தக் கிரயத்தால் தமக்கெனக் கொண்டிருக்கின்றார். என்மேல் உனக்கு எந்த ஒரு அதிகாரமும் கிடையாது'' என்று நான் எனது வாய்க்குள் கூறவும் உடனே அவன் என்னைவிட்டுப் போய்விட்டான். அந்த நாளில் போன சாத்தான் அதற்கப்பால் என்னண்டை வரவே இல்லை. என்னை பயமுறுத்து வதற்காகவும், இனிமேல் அந்த இடத்தில் வந்து நான் உபவாசம் செய்யாதபடி என்னைத் தடுக்கவும் சாத்தான் அப்படிச் செய்திருக்க வேண்டும். அதற்கப்பால் எத்தனை தடவைகளோ நான் அந்த பங்களாவில் வாடகைக்கு அறை எடுத்து உபவாசித்து ஜெபித்திருக்கின்றேன், எவ்வளவோ ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றேன். அந்த அழகான பங்களாவை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

விபச்சாரம், வேசித்தனத்திற்கு விலகிய பரிசுத்த தேவ வாழ்க்கை.

''ஸ்திரீயுடனே விபச்சாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன், அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான்'' (நீதி 6 : 32) என்றும் ''பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்பான்'' (நீதி 6 : 29) என்றும் ''வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்'' (1 கொரி 6 : 18) என்றும் தேவனுடைய வார்த்தை கூறுகின்றது.

நான் நேசித்த ஒரு கர்த்தருடைய ஊழியர் விபச்சாரப் பாவத்தில் வீழ்ச்சியடைந்த ஒரு துக்ககரமான செய்தி சமீபத்தில் எனது காதுகளுக்கு வந்தெட்டியது. அந்தச் செய்தி முற்றும் உண்மையான செய்தி என்பதை நான் ஊர்ஜிதம் செய்துகொண்டேன். கர்த்தருக்காக எத்தனை பயனுள்ள ஊழியங்களை எல்லாம் அவர்கள் கடந்த கால நாட்களில் செய்திருக்கின்றார்கள். அவர்களுடைய கிருபை நிறைந்த செய்தியை நானும் கேட்டு தேவ மக்களுக்கு பிரயோஜனப்படும் வகையில் நான் அவர்களை ஒரு தடவை இங்கு கோத்தகிரிக்கு அழைத்து ஒரு பெரிய தேவாலயத்தில் சில செய்திகளைக் கொடுக்க ஏற்பாடு செய்தேன். எப்படி அவர்களால் அந்தக் கொடிய பாவச் சேற்றில் வீழ்ச்சியடைய முடிந்தது? ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா?

ஒரு தேவ ஊழியன் விபச்சார வேசித்தன பாவத்தில் வீழ்ச்சியடைவானானால் அத்துடன் அவனுடைய சகாப்தம் முடிவடைந்தது என்பதை நாம் நிச்சயமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதின அந்தக் கையுறுப்பை ராஜாவாகிய பெல்ஷாத்சார் கண்ட மாத்திரத்தில் அவன் முகம் வேறுபட்டது, அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணினது, அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது, அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது (தானி 5 : 5, 6) என்ற தேவ வாக்கின்படி விபச்சாரம் செய்த ஒரு தேவ ஊழியனின் கிறிஸ்தவ வாழ்க்கை உடனே அஸ்தமித்து அவனுடைய முகநாடி வேறுபட்டு அவனுடைய கிறிஸ்தவ வாழ்வின் உறுதியான இடுப்பின் கட்டுகள் உடனே தளர்ந்துவிடும். மும்தாஜ் மஹால் என்ற தனது அழகிய மனைவி இறந்துவிட்டாள் என்ற செய்தியைக் கேட்ட நேரத்திலேயே மன்னர் ஜாஜஹானின் தாடி முடி முழுமையும் உடனே அப்படியே வெண் பஞ்சாக நரைத்துவிட்டதாக சரித்திரம் கூறுகின்றது. அப்படியே ஒரு பரிசுத்த தேவ

ஊழியன் தேவ கோபாக்கினைக்கு ஏதுவான விபச்சாரப் பாவத்தில் விழும்போது அவன் நீண்ட காலமாக தன் அன்பின் ஆண்டவருக்காகச் செய்த அருமையான தேவ ஊழியங்கள் எல்லாம் யாவரும் வெறுத்துத் தள்ளக்கூடிய கிழப்பருவத்தின் வெண்மை ரோமங்களாக உடனே மாற்றம் அடைந்துவிடும்.

கர்த்தரால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தேவ ஊழியனுக்கு எதிராக சாத்தான் விரிக்கக் கூடிய மகா கொடிய வலை இந்த விபச்சார,வேசித்தன பாவம்தான். கிழவனான ஒரு பரிசுத்தவானை விபச்சாரப் பாவத்தில் வீழ்ச்சியடையப்பண்ண தந்திர சாத்தான் தனது பண்டக சாலையிலிருந்து ஒரு இளம் வயதான அழகுப் பெண்ணை அனுப்பி அந்த தேவ ஊழியன்மேல் பலவந்தமாக கை போட்டு இழுக்கச் செய்து அவனைத் தனது தேவனுக்குத் துரோகம் செய்யச் செய்து அந்த பரிசுத்த தேவனுடைய முகத்தில் காரி உமிழச் செய்வான்.

இந்தக் கொடிய பாவத்தில் உங்கள் சகோதரனாகிய என்னை வீழ்ச்சியடையப்பண்ண வலுசர்ப்பமாகிய பிசாசு கடந்த நாட்களில் எனக்கு எதிராக மேற்கொண்ட தந்திரச் செயல்கள் பலவாகும். அவன் எனது கால்களுக்கு எதிராக விரித்த அத்தனை வலைகளுக்கும் நான் எப்படி தப்பித்து வந்தேன் என்பதை இப்பொழுது நினைத்தாலும் ஆச்சரியமாகவிருக்கின்றது. வட இந்தியாவிலுள்ள காசி பட்டணத்திலும், நேப்பாள தேசத்திலுள்ள தான்சேன் என்ற இடத்திலும் அழகான பெண்களைக் கொண்டு என்னை அவன் நேருக்கு நேர் மோதவிட்டான். யோசேப்பின் மேல் பலவந்தமாக கைபோட்ட போத்திப்பாரின் மனைவியைப் போல என்மேல் கைபோட்ட ஒரு குடும்ப ஸ்திரீயும் உண்டு. அந்த ஸ்திரீக்கு முன்பாக நான் என்னைக் கருங்கல்லாக்கிக் கொண்டேன். கிறிஸ்துவிடனே கூடச் சிலுவையில் அறையப்பட்ட ஒரு செத்த சவத்தின் மேல் கைபோட்டு என்ன பிரயோஜனம்! ஓ, அந்த இடங்களில் எல்லாம் என்னை ஆட்கொண்ட என் அன்பின் ஆண்டவர் என்னைக் கண்ணின்மணி போலப் பாதுகாத்தக் கொண்டார். அந்த இடங்களில் எல்லாம் கர்த்தர் எனக்காக யுத்தம்பண்ணினார் (யாத் 14 : 14) என்றே நான் திட்டமாகச் சொல்லுவேன். அந்தக் குறிப்பிட்ட பாவச் சோதனை (காசிப் பட்டணத்துச் சம்பவம்) எனக்கு வரப்போவதை முன் அறிந்த நம் அன்பின் தேவன் அந்த தடவை நான் தேவ ஊழியத்திற்காக வட இந்தியா புறப்படு முன்னர் ஒரு மாத காலம் புசியாமலும், குடியாமலும் உபவாசம் எடுத்துக்கொள்ள என்னை ஏவினார். உடனே அந்த பரலோகக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தேன். அந்த உபவாசத்தின் வலிமையாலும்,

யாவுக்கும் மேலாக தேவனுடைய கிருபையாலும் சத்துருவின் அக்கினியாஸ்திரத்தை நான் அவிப்பது எனக்கு சுலபமாகவிருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

காசிப்பட்டணத்தில் என்னைப் பாவத்தில் வீழ்ச்சியடையப்பண்ண என் அறைக்கு வந்த வேசிப் பெண் எனது அறையிலிருந்து கண்களில் கண்ணீருடன் புறப்பட்டுச் செல்லும் வரை ''தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்வது எப்படி?'' (அதி 39 : 9) என்ற தேவ வார்த்தையைத் திரும்பத் திரும்ப என் உள்ளத்திலிருந்து ஒலித்துக் கொண்டே இருக்கச் செய்து என்னை ஆட்கொண்ட என் அன்பின் ஆண்டவர் என்னைச் சுத்தப் பொன்னாக அந்த இடத்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். அல்லேலூயா

பிரான்ஸ் தேசத்திலுள்ள பாரீஸ் பட்டணத்துக்கு என்னை அழைத்துச் செல்லுவதாக நயம் காட்டிய பெண்ணிடமிருந்தும் நேப்பாள நேசத்தில் தேவன் என்னை அற்புதமாகப் பாதுகாத்தார். இந்தக் காரியங்களை எல்லாம் நான் எனது சுயபெலத்தாலோ அல்லது எனது சாமர்த்தியத்தினாலோ செய்து வெற்றி சிறக்கவில்லை. கர்த்தருடைய ஆவியானவர் எனக்காக யுத்தம் செய்து என்னைக் கறைதிரையற்ற பரிசுத்த பாத்திரமாகக் காத்துக் கொண்டார். கடந்த காலங்களில் என்னைக் கடந்து சென்ற கொடிய விபச்சார வேசித்தன பாவங்களிலிருந்தெல்லாம் நான் எப்படி தப்பிப் பிழைத்தேன் என்பதை நான் நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் மெய்யாகவே தேவ கரம் என்னோடிருந்தது என்பதை நான் திட்டமாக உணருகின்றேன்.

இன்றைக்கு ஆவிக்குரிய பரிசுத்த சபைகளிலும், மற்ற சபைகளிலும் தேவ ஊழியர்களை சாத்தான் விபச்சாரப் பாவங்களால் கட்டி வைத்திருக்கின்றான். மறைமுகமாக தங்கள் சபையின் மக்களோடு விபச்சாரத்தைச் செய்து கொண்டே பேராயர்கள், குருவானவர்கள், உபதேசிகள், பாஸ்டர்கள் தங்கள் சபைகளை பரிசுத்தமும், பக்தியுமாக நடத்துகின்றார்கள் (எல்லாரையும் நான் இங்கு குறிப்பிடவில்லை). தங்களுடைய கொடிய விபச்சார வாழ்க்கையுடன் தங்கள் சபை மக்களுக்கு முன்பாக வேதாகமத்தில் நாம் பார்க்கின்ற புழுபுழுத்துச் செத்த ஏரோதுவைப் போல வாரந்தோறும் தேவ தூதனைப் போல பிரசங்கிக்கின்றார்கள் (அப் 12 : 21 - 23) பிரசங்க பீடத்தில் பெரிய பரிசுத்தவான்களைப் போல அங்கும் இங்கும் சாடிப் பாய்ந்து குதித்துப் பிரசங்கிக்கின்றார்கள். உடம்பெல்லாம் வேசித்தனம், உள்ளமெல்லாம் கபடம், வாழ்க்கை எல்லாம் பெருமை, மாய்மாலம். அவர்களுடைய நடிப்பைக் கண்டு சாத்தானாம் பிசாசு

கைதட்டிச் சிரிக்கின்றான். அவர்களை நரக பாதாளத்தில் தலை கீழாகத் தள்ளும் நாள் விரைந்து நெருங்கி வருவதைக் கண்டு நாட்களை எண்ணிக் கொண்டு ஆனந்தக் களிப்போடு காத்திருக்கின்றான்.

கர்த்தர் இயேசுவின் நாமத்திற்காக வைராக்கியம் காண்பிக்கும் ஒரு வாழ்க்கை

''அந்த ஊர் மனுஷர் காலமே எழுந்திருந்தபோது, இதோ பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டதும், அதின் அருகேயிருந்த தோப்பு வெட்டிப் போடப்பட்டதும், கட்டப்பட்டிருந்த பலிபீடத்தின் மேல் அந்த இரண்டாம் காளை பலியிடப்பட்டதுமாயிருக்கக்கண்டு ஒருவரையொருவர் நோக்கி இந்தக் காரியத்தைச் செய்தவன் யார் என்றார்கள், கேட்டு விசாரிக்கிறபோது யோவாசின் மகன் கிதியோன் இதைச் செய்தான் என்றார்கள்'' (நியா 6 : 28, 29)

அன்று எங்கள் ஊர் முழுவதுமே ஒரே பரபரப்பு. எங்கள் ஊர் இந்து மக்கள் முகங்களில் எல்லாம் கோபக்கனல் பறந்தது. காரணம், அவர்கள் வணங்கி வழிபடும் சந்நியாசி அம்மன் கோயிலில் உள்ள 3 பெரிய இந்து விக்கிரகங்களின் மேல் 3 பெரிய சிலுவை அடையாளங்கள் வரையப் பட்டிருந்தன. அந்தச் சிலுவை அடையாளங்களை வரைந்தது யார்? அந்த நபர் கண்டு பிடிக்கப்பட்டிருந்தால் அவர்கள் அவனுக்கு என்ன தண்டனை கொடுத்திருப்பார்களோ? எதையும் தயங்காமல் துணிச்சலாகச் செய்யக்கூடிய தேவர்(மறவர்) குலத்தைச் சேர்ந்த மக்களுடைய தெய்வங்களின் மேல்தான் அந்தப் பெரிய சிலுவை அடையாளங்கள் வரையப் பட்டிருந்தன. அந்த தகாத காரியத்தைச் செய்த மனிதனை அவர்கள் கடைசி வரைக் கண்டு பிடிக்க முடியவே இல்லை. அப்படி சிலுவை அடையாளத்தை எந்த ஒரு பயமுமில்லாமல் அந்த மக்களுடைய விக்கிரகங்களின் மேல் நடுமத்தியான நேரம் போய் வரைந்தது பாவியாகிய நானேதான். சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே அன்பின் ஆண்டவர் இயேசுவே உலகின் மெய்யான ஜீவனுள்ள தெய்வம் என்பது என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அதின் காரணமாகத்தான் நான் எனது சிறு பிள்ளைத்தனமான வைராக்கியத்தில் அந்தக் காரியத்தைச் செய்து அந்த அன்பான இந்து மக்களை வேதனைப்படுத்தி யிருந்தேன். அதுமட்டுமா, இந்து மக்களின் விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு போய் தண்ணீர் நிறைந்த கிணறுகளில் போட்டிருக் கின்றேன்.

என்னில் காணப்பட்ட அந்த பக்தி வைராக்கியமானது நாளடைவில் எல்லா மக்களும் இயேசு இரட்சகரை தங்கள் சொந்த பரம தகப்பனாக அறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் திரும்பினது. அந்த வைராக்கியம்தான் என்னை தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்துடன் இந்தியாவின் பற்பல இடங்களுக்கும், நேப்பாளம், சிக்கிம், பூட்டான் நாடுகளுக்கும் என்னை அழைத்துச் சென்றது. கர்த்தர் என்னை எங்கெங்கெல்லாம் தமது மகிமையின் சுவிசேஷத்தினிமித்தமாக அழைத்துச் சென்றார் என்ற நடபடிகள் எல்லாம் அவருடைய ஞாபக புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் எந்த ஒரு சுவிசேஷகனும் சென்றிராத இடங்களுக்கெல்லாம் அன்பின் ஆண்டவர் என்னைக் கூட்டிச் சென்று எனது பாதங்களைப் பதியச் செய்தார். ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கு என்ற தீபெத்திய மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கெல்லாம் என்னைக் கூட்டிச் சென்று தமது மகிமையின் சுவிசேஷத்தை மக்களுக்குக் கொடுக்க கிருபை செய்தார். அந்தப் பனிப்பள்ளத்தாக்கில் பிராண வாயு குறைவானதால் புதிதாக அங்கு செல்லுவோர் தாராளமாக மூச்சுவிடுவது சற்று கடினமாகும்.

தங்கள் இடத்தில் நான் வந்து கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்புகின்றேன் என்ற கடுங்கோபத்தில் அங்குள்ள குறும்புக்கார பையன்களை ஏவிவிட்டு நதியில் நான் ஒரு நாள் குளித்துக் கொண்டிருந்தபோது என் மேல் கல் எறிய வைத்தார்கள். மிகவும் பள்ளத்தில் குளித்துக் கொண்டிருந்த எனக்கு அருகில் அந்தக் கற்கள் விழுந்தவண்ணமாக இருந்தன. எனினும், அன்பின் ஆண்டவர் ஒரு கல்லாவது என்மேல் விழாதவாறு என்னைக் கிருபையாகப் பாதுகாத்துக் கொண்டார். நானும் துரிதம் துரிதமாக குளித்துவிட்டு பள்ளத்திலிருந்து மேலே ஏறி வந்துவிட்டேன். அப்பொழுது அந்தக் குறும்புக்காரப் பையன்கள் எனக்கு முன்பாக ஓடுவதை நான் கண்டேன்.

நான் அந்த ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கிலிருந்து ஒரு நாள் அதிகாலை ஜம்மு காஷ்மீர் அரசுக்குச் சொந்தமான ஒரு திறந்த டிரக்கில் ஏறி கார்க்கில் என்ற இடத்திற்கு அந்த நாளின் மாலையில் வந்து சேர்ந்தேன். அந்த இடத்தின் அந்த அதிகாலைக் கடுங்குளிர் காரணமாக எனது நாசியிலிருந்து அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டது. நான் ஏறி வந்த வாகனம் இடையில் ஓரிடத்தில் பிரயாணிகளின் நண்பகல் ஆகாரம் சாப்பிடுவதற்காக நிறுத்தப்பட்டது. கொஞ்ச நேரம் சென்ற பின்னர் ஒரு கூட்டம் தீபெத்தியர்கள் தங்கள் லாமாவைக் கூட்டிக் கொண்டு என்னண்டை வந்து எனக்கு விரோதமாக அவரிடம் ஏதோ புகார் கொடுத்தார்கள். தங்களுடைய

கிராமங்களுக்கெல்லாம் நான் சென்று கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்பினேன் என்று அவர்கள் அந்த லாமாவிடம் சொல்லியிருப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். அவர்களுக்கு ஆதரவாக ஒரு மேல்நாட்டு கிறிஸ்தவ சுற்றுலா பயணியும் சேர்ந்து கொண்டான். வரவர கூட்டம் அதிகரித்தது. அவர்கள் என்மேல் கைபோட நெருங்கும் வேளையில் நான் பிரயாணம் செய்த வந்த வாகனத்தின் முகமதிய டிரைவர் குறுக்கிட்டு உடனே வாகனத்தை கிளப்பத் தொடங்கினார். அதின் காரணமாக அந்த இடத்தில் அன்று நான் தேவ கிருபையால் பாதுகாக்கப்பட்டேன்.

நான் முதன் முறையாக காஷ்மீரிலிருந்து லே லடாக் என்ற மேற்கு தீபெத் செல்லும்போது கார்க்கில் என்ற ஒரு சிறிய முகமதிய பட்டணத்திலுள்ள சிமெண்ட் போன்ற புழுதி மண்ணுக்குள் தெருவிலுள்ள ஒரு கடையின் கடைசிப்படிக்கட்டில் எங்கள் தலைகளை வைத்து பாவியாகிய நானும், காலஞ்சென்ற பரிசுத்தவானான சாது சுந்தையானந்து ஐயா அவர்களும் ஒரு இரா முழுவதும் படுத்திருந்தோம். எங்களுக்கு இராத்தங்க அங்குள்ள முகமதியர்கள் எவரும் இடம் தர மறுத்துவிட்டார்கள். கடுங்குளிரான அந்த இடத்தில் நாங்கள் கர்த்தருக்குத் துதி செலுத்திக் கொண்டு நடு நடுங்கிக்கொண்டு படுத்திருந்தோம்.

பூட்டான் தேசத்தில் ஒரு கடையாந்திர கிராமத்திற்கு நான் சென்று ஒரு மாலை மயங்கும் நேரத்தில் எந்த ஒரு வீட்டிலும் இராத்தங்க என்னை அனுமதிக்காத காரணத்தால் கடைசியாக அங்குள்ள ஓரிடத்தில் நாய்கள் படுத்திருந்த தகரக் கொட்டகையில் அன்றைய இரவைக் களிப்பதற்காக நான் எனது பொருட்களை எடுத்துக் கொண்டு செல்லவிருந்த கடைசி நேரத்தில் நான் ஆரம்பத்தில் இராத்தங்க இடம் கேட்ட பூட்டானிய மனிதன் இரக்கம் கொண்டு தனது வீட்டில் என்னைப் படுக்க அனுமதித்தான். கர்த்தர் அந்த மனிதனை ஆசீர்வதிப்பாராக. அந்த வீட்டினுள்ளேயே கடுங்குளிர் காரணமாக நான் ஒரு கண்ணுக்கும் தூக்கமில்லாமல் இரா முழுவதும் நடுநடுங்கிக் கொண்டிருந்தேன். காலை எழுந்து கதவைத் திறந்து வெளியே தெருவைப் பார்த்தால் தெரு முழுவதும் வெண் பனியால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். ஒருக்கால் நான் அந்த தகரக் கொட்டகையில் படுத்திருந்தால் நிச்சயமாக பனியால் உறைந்து மாண்டு போயிருப்பேன். நிச்சயமாக அன்பின் தேவன் என்னை அந்த இடத்தில் அற்புதமாகப் பாதுகாத்துக் கொண்டார். ‘‘தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்’’ (2 சாமுவேல் 8 : 14) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது.

நேப்பாள எல்லையில் கிறிஸ்தவ பிரசுரங்களுடன் நான் பிடிபட்டு அரசாங்க அதிகாரிகளின் முன் நிலையில் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றேன். நேப்பாள கிராமங்களின் வீடுகளில் திண்ணைகளில் நான் படுத்திருக்கின்றேன். இரவில் தெள்ளுப்பூச்சி கடிகளிலிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ள என் உடம்பெல்லாம் டி-டி-ற்றி என்ற ரசாயானப் பவுடரைப் பூசிக்கொண்டு குப்பை மேட்டில் புரண்டு எழும்பிய கழுதையைப்போல படுத்திருக்கின்றேன். ஓடோமஸ் கிரீம் போன்றவற்றை வாங்க பண வசதி இல்லாததால் அப்படிச் செய்தேன். அப்படி ஒரு திண்ணையில் நான் என் பொருட்களை எனது தலைக்கு அடியில் வைத்துப் படுத்திருந்தபோது நள்ளிரவு நேரம் ஒரு அழகான சின்னப் பிள்ளை என்னை எழுப்பி நான் எனது பொருட்களை வீட்டுக்காரரிடத்தில் கொடுத்துவிட்டுப் படுக்கும்படியாகக் கேட்டது. நல்ல அயர்ந்த தூக்கத்தில் நான் அந்தக் குழந்தையைப் பார்த்தபோது அதின் உருவம் பிரகாசமாக இருந்தது. அந்தக் குழந்தை நல்ல தெளிவான ஹிந்தியில் அந்த வார்த்தைகளைப் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தக் குழந்தையின் சொற்படியே நான் என் பொருட்களை வீட்டுக்காரரின் கதவைத் தட்டி அவர்களிடம் கொடுத்துவிட்டு எனது டார்ச் லைட்டை மாத்திரம் என்னுடைய தலைக்கு அருகில் வைத்துக் கொண்டு திரும்பவும் படுத்துக் கொண்டேன். இரவில் நான் கண்விழித்துப் பார்த்தபோது அந்த டார்ச் லைட்டை திருடர்கள் திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஒரு வேளை அந்தக் குழந்தை என்னைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்காதபட்சத்தில் எனது பொருட்களையும், பணங்களையும் இழந்து சொல்லொண்ணா இன்னல்களுக்கு நான் உள்ளாகியிருப்பேன். அந்த நள்ளிரவு நேரம் வந்து சுத்தமான ஹிந்தி மொழியில் பேசிய அந்தக் குழந்தை யார்? அந்தக் கிராமத்திலுள்ள குழந்தைகள் எல்லாம் நேப்பாள மொழியில்தானே பேசும். அப்படியானால் அந்தக் குழந்தை ஒரு தேவதூதனாக இருக்குமோ? நான் அப்படியேதான் இந்நாள் வரை விசுவாசிக்கின்றேன். முடிவில்லாத நித்தியம் அதை நமக்கு வெளிப்படுத்தும். கர்த்தருக்கே மகிமை.

ஆரம்ப நாட்களில் எனது இரு ஆண் மக்களும் சின்னஞ்சிறாராக இருந்தார்கள். மூத்த மகனுக்கு 13 வயதும் அடுத்த மகனுக்கு 12 வயதாகவிருந்தது. எனது மனைவி முற்றும் பெலவீனமானவர்கள். அந்தச் சூழ்நிலையில் அவர்களை விட்டுவிட்டு கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் நான் வடக்கே கடந்து செல்லுவேன். அந்த நாளில் கோத்தகிரியில் இருந்த சின்னஞ்சிறிய பேருந்து நிலையத்தில் என்னை பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு பிள்ளைகள்

இருவரும் தங்கள் கண்களில் கண்ணீர் வடிய வடிய அழுதுகொண்டே செல்லுவார்கள். நானும் கண்களில் கண்ணீரை வடித்துக்கொண்டே வடக்கே கடந்து செல்லுவேன்.

ஆரம்ப கால வட இந்திய ஊழிய நாட்களில் பண வசதிகள் மிகவும் குறைவாக இருந்தபடியால் பசி பட்டினியோடு ஊழியம் செய்த நாட்கள் பல உண்டு. ராஜஸ்தான் மாநிலத்தில் மத்தியான வேளையில் ஹூட் என்ற வெல்லத்தைக் கடித்துச் சாப்பிட்டு வயிறு நிறைய தண்ணீரைக் குடித்து ஊழியம் செய்த நாட்களை நான் மறவேன். ஒரு சமயம் டில்லி ரயில் நிலையத்தில் பிளாட்பாரத்திலேயே 2 நாட்கள் பசி பட்டினியோடு செலவிட வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ரிசர்வேசன் செய்யும்படியாக நான் பணம் கொடுத்த சகோதரன் பணத்தை வாங்கிச் செலவு செய்துவிட்டு அந்தவிதமான ஒரு இன்னலுக்குள் என்னைத் தள்ளிவிட்டார்கள்.

எப்படியாவது ஜீவனுள்ள தேவனின் மகிமையின் சுவிசேஷத்தை அதை அறியாத மக்களுக்கு அறிவித்துவிட வேண்டும், தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் அதை அறியாத மக்களுடைய கரங்களில் போய்க் கிடைத்துவிடவேண்டும் என்ற ஒரே வைராக்கியத்தின் காரணமாக நான் கடந்து சென்ற பாதைகளும், பட்ட பாடுகளும், துயரங்களும் கர்த்தர் ஒருவரே அறிகின்றவராக இருக்கின்றார்.

ஆம், கர்த்தருக்காக வைராக்கியம் காண்பிக்கும் மக்கள் ஆண்டவருக்குத் தேவை. மனைவி இறந்த ஆண்டான 1996 ஆம் ஆண்டைத் தவிர அநேகமாக ஒவ்வொரு ஆண்டும் தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கே நான் சென்று வந்திருக்கின்றேன். அங்கு செய்த ஊழியங்களை எல்லாம் நமது தேவ எக்காள பத்திரிக்கையில் கடந்த காலங்களில் விபரமாக நான் எழுதியிருக்கின்றேன். தேவ எக்காளத்தின் பழைய சந்தாதாரர்களுக்கெல்லாம் அந்த விபரணங்கள் நன்கு தெரியும். புதிய சந்தாதாரர்களுக்கு இரத்தினச் சுருக்கமாக அந்த விபரங்களை இங்கே எழுதுகின்றேன்.

தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்

''தேவன் உங்களோடு கூட இருக்கிறார், எந்த ஒரு மனிதனாலும் மறுக்க முடியாத உண்மை இது'' என்று ஒரு பரிசுத்த வாலிப தம்பி சமீபத்தில் எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். கிறிஸ்தவர்களைப் போலவே, நமது தேவ எக்காள பத்திரிக்கையை நமக்கு அழகாக அச்சிட்டுத் தரும் அச்சகத்தின் நிர்வாகியான நமது இந்து சகோதரன் ஆறுமுகம் அவர்களும்

(கிறிஸ்தவ பள்ளியில் பயின்றவர்கள்) கர்த்தர் என்னோடு கூட நிச்சயமாக இருப்பதாகவும், அதின் காரணமாகத்தான் இந்த விருத்தாப்பிய வயதிலும் சிறப்பான விதத்தில் தேவ எக்காளச் செய்திகளை கம்பியூட்டரில் டைப் செய்து கொடுக்க முடிகின்றது என்று கூறுகின்றார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஒருவனோடு தேவன் இல்லாத பட்சத்தில் 38 ஆண்டு காலமாக அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக ஒரு கிறிஸ்தவ பத்திரிக்கையை எழுதி வெளியிடுவது எப்படி? ஒவ்வொரு ஆண்டும் தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை சுமந்து கொண்டு வட மாநிலங்களுக்கும், இமயமலை நாடுகளுக்கும் செல்லுவது எப்படி? குறிப்பாக சமீப கால ஆண்டுகளில் ஒரு குழுவாக வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சுவிசேஷ நற்செய்தியை இமயத்தின் கடையாந்திரங்களில் அறிவிப்பது எப்படி நடைபெறும்? உண்மையோ உண்மைதான், வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவன் என்னோடு கூட இருந்தபடியால் மேற்கண்ட காரியங்களெல்லாம் சாத்தியமாயிற்று. அந்த ஜீவனுள்ள கர்த்தர் இன்றும் என்னோடிருக்கின்றார், அனுதினமும் தம்முடைய வார்த்தைகளின் மூலமாக என்னோடு பேசுகின்றார், எனது தனித்த வாழ்வில் அவரே எனக்குப் பரம தகப்பனாக, எனது துன்ப துக்கங்களில் என்னை அரவணைக்கும், என்னை ஆற்றித் தேற்றும் அன்புத் தாயாக இருந்து என்னைக் கரம் பிடித்து வழிநடத்திச் செல்லுகின்றார்.

கர்த்தருக்கு நான் உண்மையற்றவனாக, தேவ மக்கள் ஊழியங்களுக்காக எனக்குத் தரும் பணங்களை தந்திரமாக வங்கிகளில் பதுக்கி வைத்து எனது பிள்ளைகளுக்கும், எனது வருங்கால சந்ததிக்கும் நான் அதைத் தனிமைப்படுத்துவேனாகில் எனது ஊழியம் என்றைக்கோ அஸ்தமித்து, தகடுபொடியாகி நொறுங்கி மண்ணோடு மண்ணாக ஒன்றரக் கலந்திருக்கும். அத்துடன் நானும் எப்பொழுதோ மண்ணாகி நிர்ப்பந்தமான முடிவை அடைந்திருப்பேன். தேவனுக்கு முன்பாக இன்று வரை நான் என்னை உத்தமமாகக் காத்துக் கொண்டபடியால் தேவ எக்காள ஊழியத்தை தேவன் கனப்படுத்தி ஆசீர்வதித்து வருகின்றார். அது மட்டுமல்ல, ''நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்'' (நீதி 4 :18) என்ற தேவ வாக்கின்படி இந்த எளிய ஊழியத்தை தேவன் நாளுக்கு நாள் அற்புதமாக உயர்த்தி மேன்மைப்படுத்தி ஆசீர்வதித்து வழிநடத்தி வருகின்றார்.

இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒன்றுமில்லாத ஒருவரான ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் என்ற மனிதரைப் பிடித்து முழு உலகத்தையே தேவன் அவர் மூலமாக அசைத்துவிட்டார். தேவன் அந்தப் படிப்பறிவற்ற கொத்தனாரை (Plumber) தனது 26 வயது வரைக்கும் எழுத வாசிக்கத் தெரியாத அந்த மனிதனைக் கொண்டு வேத பண்டிதர்களையும், கர்த்தருடைய வார்த்தைகளில் பாண்டித்தியம் பெற்ற ஞானவான்களையும் தனது வாக்குவன்மையையால் எதிர்கொள்ளக்கூடிய பரம ஞானத்தை அவருக்குக் கொடுத்திருந்தார். பிசாசின் பிடியிலும், கொடிய வியாதி துன்பங்களிலும் சிக்குண்டு தவித்த திரள் திரளான மக்களை எவரும் கேள்வி கேட்கவிலாத அற்புத அடையாளங்களால் அவர் விடுவித்தார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். இந்த மகத்துவமான காரியங்களை எல்லாம் தேவன் அந்த மனிதர் மூலமாகச் செய்ய அந்த மனிதரில் காணப்பட்ட ஒரே ஒரு எளிய காரணம் ''அவர் தனது பரம எஜமானருடைய உபயோகத்துக்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருந்ததுதான்'' என்று சொல்லப்படுகின்றது.

இதை ஆசை ஆவலாகக் கருத்தோடு வாசிக்கும் அன்பான தேவப் பிள்ளையே, பாவியாகிய என்னைத் தமது பரிசுத்த ஊழியத்தின் பாதையிலே அநேகருக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்திய அன்பின் ஆண்டவர் உங்களையும் பயன்படுத்த ஆசை ஆவலாக இருக்கின்றார். ''தன்னை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்த ஒரு மனிதனை தேவன் பயன்படுத்தும் விதத்தை உலகம் இன்னும் காணவில்லை'' என்ற ஒரு பரிசுத்தவானின் வார்த்தையின்படி யார் யார் தங்களை முற்றுமாகக் கர்த்தருக்கு ஒப்புவித்து ஆண்டவருடைய பரிசுத்த ஊழியத்தை பொருளாசையற்றவர்களாகவும், பெயர், புகழ் விரும்பாதவர்களாகவும், மிகுந்த ஜெபத்தோடும், ஆத்தும பாரத்தோடும், விபச்சாரம், வேசித்தனமற்ற கர்த்தர் விரும்பும் மிகுந்த பரிசுத்தத்தோடும், தங்களுக்காக கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்தி தமது இரத்தக் கிரயத்தால் கொண்ட அன்பின் ஆண்டவருக்காக வைராக்கியத்தோடும், மிகுந்த மனத்தாழ்மையோடும், கர்த்தரை மாத்திரம் உலகுக்கு உயர்த்திக் காண்பித்து ஊழியம் செய்வார்களோ அவர்களுடைய தேவ ஊழியங்களை தேவன் நிச்சயமாக ஆசீர்வதிப்பார், அவர்களை அவர் ஒருக்காலும் வெட்கப்படுத்தமாட்டார்.

இந்தத் தலையங்கச் செய்தியிலே பாவியாகிய என்னுடைய வாழ்வின் தாழ்மையான அனுபவங்கள், ஊழியப்பாதையின் பாடுகள் போன்ற காரியங்களை மிகுதியாக நான் எழுதியிருக்கின்றேன். அதின் ஒரே காரணம்,

நீங்கள் என்னைப் பெருமைப்படுத்தி, நீங்கள் எனக்குப் புகழ் ஆரங்களைச் சூட்டி என்னைச் சிம்மாசனத்தில் ஏற்றி ராஜ கிரீடத்தை எனக்குச் சூட்டி ஆர்ப்பரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் எழுதவில்லை. கர்த்தர் என்னை இத்தனை நீண்ட ஆண்டு காலங்களாக தமது பரிசுத்த நாமத்திற்கு மகிமையாக பயன்படுத்த என்னில் காணப்பட்ட முழுமையான அர்ப்பணிப்பு, துளிதானும் பொருளாசையற்ற உத்தம இருதயம், எனது ஜெப உபவாச வாழ்க்கை, கர்த்தருக்காக நான் காண்பித்த பலத்த வைராக்கியம், பெயர் புகழை விரும்பாத எளிய வாழ்க்கை, மனைவி பெலவீன பாண்டமாக இருந்தபோதினும், எங்களுக்கிடையில் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சி இல்லாத போதினும், சாத்தானாம் பிசாசு சந்தர்ப்பத்தை தனக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி என்னைப் பாவத்தில் வீழ்த்த எவ்வளவோ முயற்சித்தபோதினும் கர்த்தருடைய பெலத்தால் நான் அவைகளை எல்லாம் மேற்கொண்டு தேவனை மகிமைப்படுத்திய எனது பரிசுத்த வாழ்க்கையும், அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த எனது ஆத்தும பாரம் போன்ற பரிசுத்த பண்புகளை நீங்களும் உங்கள் நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசித்து நம் அன்பின் ஆண்டவர் இயேசுவுக்காக நீங்கள் உங்கள் குறுகிய கால வாழ்வில் ஒரு பெரிய தேவ ஆசீர்வாதத்தை தேவ ஜனங்களுக்கு பின் வைத்துச் செல்ல வேண்டுமென்பதே என்னுடைய ஆத்துமாவின் கதறுதலாகும். அதற்கான தேவ கிருபைகளை ஆண்டவர்தாமே உங்களுக்குத் தந்தருள்வாராக. ஆமென்.

தேவன் உன் வாழ்வில் நேரானதும், ஏற்றத்தாழ்வில்லாததும், எல்லாம் ஒரே சீரானதுமான வழிகளை உண்டாக்குவதில்லை. உன்னால் ஆராய்ந்து பார்க்க முடியாத ஆச்சரியமான வழிகளை அவர் உன் ஜீவியத்தில் உருவாக்குகின்றார். அந்த வழிகளை அவர் எங்கு வேண்டுமானாலும் உண்டாக்குவார். தான் எங்கு குதித்தாலும் தனக்கான வழியை அங்கெல்லாம் உருவாக்கிக் கொண்டே செல்லும் சிலந்திப் பூச்சியை உண்டாக்கிய தேவன் உன்னுடைய பாதையை வெறுமையிலும், ஏமாற்றத்திலும், தாங்கொண்ணா துயரத்திலும், தடுமாற்றத்திலும், சோர்பிலும், லோக மாந்தர் யாவரும் கைவிட்ட தனிமையிலும் ஏற்படுத்தக் கூடாதவராகவிருக்கின்றார் என்று எண்ணுவாயோ? ''உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது, உமது காலடிகள் தெரியப்படாமற் போயிற்று'' ***(சங் 77 : 19)***

அவைகளை எல்லாம் ஞானமாகப் படைத்தீர்
(சங்கீதம் 104 : 24)

''மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும், இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது'' (ஏசாயா 1:3)

''ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும், காட்டுப் புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும், என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்'' (எரேமியா 8:7)

ஒரு நாள் இரவில் நான் படுக்கச் செல்லுவதற்கு முன்பு எங்கள் வீட்டு குளியலறையின் வெளிக்கதவை மூடுவதற்காகச் சென்றேன். அந்த நேரம் பார்த்து திறந்து கிடந்த மற்ற ஒரு கதவின் வழியாக ஒரு தவளை தத்தித் தத்திச் சென்று வீட்டுக்குள் வந்துவிட்டது. அதை துரத்திவிட எவ்வளவோ முயன்றும் கூடாது போயிற்று. அது எங்கேயோ போய் பொருட்களுக்கு அடியில் மறைந்து கொண்டது. இனி அதை மறு நாள் நாம் துரத்திவிடலாம் என்று நினைத்து நான் போய்ப் படுத்துக் கொண்டேன்.

மறு நாள் அதிகாலை நான் எழுந்து குளியலறைக்கு வந்தபோது முந்தின நாள் வீட்டுக்குள் வந்துவிட்ட அதே தவளை கதவுக்கு அருகில் பொறுமையோடு காத்து அமர்ந்திருப்பதை நான் ஆச்சரியத்துடன் கவனித்தேன். நான் கதவைத் திறந்ததும் அந்த தவளை உடனே துரிதம் துரிதமாக வெளியே குதித்துச் சென்றுவிட்டது. அதின் செயலைக் குறித்து நான் பின்னர் எனக்குள் சிந்தித்துப் பார்த்தேன். அந்த அறையில் வேறு 2 கதவுகள் இருந்தபோதினும் அந்த இரண்டு கதவுகள் அருகிலும் போய்க் காத்திராமல் தான் எந்த கதவின் வழியாக வீட்டுக்குள் வந்ததோ அதே கதவின் அருகில் போய் அமர்ந்து காத்திருந்து அதின் வழியாகவே வெளியே போய்விட்டது. தான் எந்த கதவின் வழியாக அறைக்குள் வந்ததோ அந்தக் கதவு ஒன்றே தனக்குப் பாதுகாப்பானது, சரியான வழி என்பதை உணர்ந்த அந்த தவளை மற்ற 2 கதவுகளையும் புறக்கணித்துவிட்டு தான் வந்த கதவின் வழியாகவே வெளியே சென்றுவிட்டது. அந்த அற்பமான ஜீவராசியின் ஞானம் எனக்கு ஆச்சரியத்தை அளிப்பதாகவிருந்தது.

நாய்களை எதிர்த்து நின்ற காட்டுப் பன்றி

ஒரு நாள் ஒரு பெரிய காட்டுப் பன்றி எங்கள் வீட்டுத் தோட்டத்தின் அருகிலிருந்த ஒரு எரு குழியின் மேல் வந்து நின்று அங்கு போடப்பட்டிருந்த ஆகாரத் துணிக்கைகளையும், எச்சில்களையும் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அந்தக் காட்டுப் பன்றி அங்கு நிற்பதை எப்படியோ ஓரிரு நாய்கள் மோப்பம் எடுத்துக் கண்டு பிடித்து அதற்கு முன்பாக வந்து நின்று குரைத்துக் கொண்டிருந்தன. அந்த நாய்கள் குரைப்பதைக் கவனித்த மற்ற ஒன்றிரண்டு நாய்கள் வந்து அவைகளோடு சேர்ந்து கொண்டு அந்தப் பன்றியைப் பார்த்து குரைத்தன. இந்த எண்ணிக்கை வரவர கூடுதலாகி பன்றியைச் சுற்றிலும் ஒரு கூட்டம் நாய்கள் சூழ்ந்து கொண்டு இப்பொழுது அவைகள் அதைக் கடித்துக் குதறுவதற்காக நெருங்கின. நான் அந்தக் காட்சியை ஆவலோடு அருகிலிருந்து பார்த்துக் கொண்டு நின்றேன். நாய்கள் தன்னைக் கடிக்க முனைந்து முன்னேறுவதையும் அவற்றின் எண்ணிக்கை அதிகரிப்பதையும் கண்ட அந்தக் காட்டுப் பன்றி ஒரு பெரிய உறுமல் சத்தத்துடன் தனது ரோமங்கள் அனைத்தையும் ஈட்டி போல சிலிர்த்துக் கொண்டு அந்த நாய்களின் மேல் உடனே ஒரு பாய்ச்சல் பாயப்போவதைப் போல கம்பீரமாக அவைகளுக்கு முன்பாக மிகுந்த வீரியத்துடன் நின்று கொண்டிருந்தது.

அதைக் கண்ட நாய்கள் எல்லாம் பயந்து ஒவ்வொன்றாக அந்த இடத்திலிருந்து நகர ஆரம்பித்து இறுதியில் ஒரு நாய்கூட இல்லாமல் அனைத்தும் போய்விட்டன. இப்பொழுது அந்த காட்டுப் பன்றி தனியாக எந்த ஒரு தொந்தரவும் இல்லாமல் நின்று தனது ஆகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு தன் வழியாக தேயிலைக் காட்டுக்குள் போய் மறைந்துவிட்டது. அந்தக் காட்டுப் பன்றியின் செயல் எனக்கு மட்டற்ற ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவிருந்தது. அது அந்த இடத்தில் பெரிய உறுமல் சத்தம் போட்டு தன்னை வளைத்து நின்ற நாய்களுக்கு முன்பாக கெம்பீரமாக நின்று கொண்டிருந்த அந்தக் காட்சியின் மூலம் அந்த நாய்களைப் பார்த்து ''நாய் தம்பிமாரே, நான் யார் என்றும், என்னிடத்திலுள்ள பெலன் என்னவென்றும் உங்களுக்குத் தெரியாது போலும்! என்னிடத்திலுள்ள கூர்மையான பற்களாலும், எனது வலிமையான தாடையாலும் என்னை நெருங்கும் புலியைக்கூட எதிர்த்து நிற்கும் நான் மிகவும் சுலபமாக உங்களை கிழித்து எறிந்துவிடுவேன் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் அமைதியாக

இங்கிருந்து உடனே ஓடிப்போய்விடுங்கள்'' என்று சொல்லுவது போல இருந்தது.

ஒரு கானக ஜீவன் தனக்குள்ள வலிமையை எத்தனை சுலபமான வழியில் தன்னைச் சூழ்ந்து நின்ற கடி நாய்களுக்கு காண்பித்து அவைகளைத் துரத்திவிட்டு தன்னைக் காத்துக் கொண்டது என்பதை நான் நினைத்துப் பார்த்து எனக்குள் வியப்படைந்தேன்.

சின்னப் பறவைகளில் விளங்கும் அற்புத ஞானம்

கோடை காலம் தொடங்கிவிட்டால் பறவைகள் முட்டைகளையிட்டு குஞ்சு பொரிக்கத் தொடங்கிவிடும். எங்கள் வீட்டைச் சுற்றி தேயிலைத் தோட்டமும், மரங்கள், பதர்களும் இருப்பதால் அவைகளில் பட்சி பறவைகள் முட்டையிட ஆரம்பித்துவிடும். குத்துச் செடிகளாக இருக்கும் தேயிலைச் செடிகளில் புல் புல் பறவைகள் தங்கள் கூடுகளைக் கட்டி முட்டையிட்டு தங்கள் குஞ்சுகளுக்கு இரை கொடுக்கத் தொடங்கும். தங்களது கூடுகளைக் கட்ட தேயிலைச் செடிகள்தான் ஏற்றவைகள் என்பதை புல்புல் பறவைகள் கண்டறிந்திருப்பதை நான் கவனிக்கின்றேன்.

புல்புல் பறவைகளின் முட்டைகளையும், குஞ்சுகளையும் கொத்திக் கொண்டுபோக தந்திரமான காகங்கள் உயரமான மரங்களிலிருந்து அந்தப் பறவைகளின் போக்குவரத்துக்களை கண்ணும் கருத்துமாகக் கவனித்த வண்ணமாக இருக்கும். ஒரு புல்புல் பறவை ஒரு குறிப்பிட்ட தேயிலை செடியிலிருந்து அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தால் அந்தச் செடியில் அதின் கூடும், முட்டைகளும், குஞ்சுகளும் நிச்சயமாக இருக்கும் என்பதைக் கண்டு கொண்ட காகம் நேராக அந்தச் செடிக்குச் சென்று பார்த்து அவைகளைக் கொத்திக் கொண்டு போய்விடும்.

தந்திரக் காகத்தின் இந்தச் செயலைப் புரிந்து கொண்ட புல்புல் பறவைகள் தாங்கள் முட்டையிட்ட தேயிலைச் செடியிலிருந்து நேராக மேலே பறந்து செல்லாமல் தேயிலைச் செடியின் தரை மட்டத்தின் வழியாக பறந்து வேறு எங்கோ ஓரிடத்தில் எழும்பிப் பறந்து வேளியே போய்விடும். அப்படியே தங்கள் கூடுகளுக்குத் திரும்பும்போதும் சரியாக தங்கள் கூடுகள் இருக்கும் செடியில் வந்து இறங்காமல் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு தேயிலைச் செடியில் வந்து இறங்கி அங்கிருந்து மறைவாக தேயிலைச் செடிகளின் அடிமட்டம் வழியாக பறந்து வந்து தங்களுடைய கூடுகளுக்கு

வந்துவிடும். இத்தனைக்கும் நடுவில் தந்திர காகம் புல்புல் பறவைகளின் கூடுகளைத் தேடி ஒவ்வொரு தேயிலைச் செடியாக பரிசோதனைப் போடத் தொடங்கிவிடும். அப்படிக் காகம் சோதனை போடுவதைக் கண்டதும் புல்புல் பறவைகள் காகத்தண்டை பறந்து வந்து அந்தச் செடிகளில் தங்கள் கூடுகள் இருப்பதைப் போல நடித்து துயரக் குரல்கள் எழுப்ப ஆரம்பித்துவிடும். அதே சமயம் தங்கள் கூடு இருக்கும் தேயிலைச் செடியை காகம் சோதனையிடும்போது அந்தப் பறவைகள் முற்றும் அமைதியாகிவிடும். ஒரு அற்பமான பறவையினம் தன்னுடைய சந்ததியைக் காக்க மேற்கொள்ளும் தந்திர செயல்களைக் கண்டு நான் பெரிதும் வியப்படைந்திருக்கின்றேன்.

ஜன்னலைக் கொத்தி உணவு கேட்கும் சின்னஞ்சிறு குருவிகள்

அநேகமாக ஒவ்வொரு நாள் காலையிலும் நான் எங்கள் வீட்டுக்கு வரும் பற்பலவிதமான பறவைகளுக்கு ஆகாரம் கொடுப்பது வழக்கம். அதெற்கென்றே ரொட்டி கடைக்குச் சென்று ''பன்'' வாங்கிக் கொண்டு வந்து வைத்திருப்பேன். அவைகளை மைனாக்கள், புல்புல் பறவைகள், பூணியல் குருவிகள் போன்றவைகள் உண்ணும். அடைக்கலான் குருவிகள், புறாக்கள் கருஞ்சிட்டுகள், தினைச்சிட்டுகளுக்காக அரிசி குறுணைகள் வாங்கி வந்து அவைகளுக்குப் போடுவேன். இவைகளை நான் ஒழுங்காக செய்து வருவதால் அந்தப் பறவைகள் எல்லாம் என்னை அதிகமாக நேசிக்கின்றன.

ஒவ்வொரு நாள் காலையில் நான் என் அறையைவிட்டு வெளியே வருவதற்கு கால தாமதமாகும் பட்சத்தில் அந்தப் பறவைகளில் அடைக்கலான் குருவிகளும், புல்புல் பறவைகளும் எனது அறையின் ஜன்னல்களை வந்து கொத்த ஆரம்பித்துவிடும். எங்கள் வீட்டில் நான் இருக்கும் அறையோடு இன்னும் 2 அறைகள் இருக்கின்றன. அந்த அறையின் ஜன்னல்களை எல்லாம் வந்து கொத்தாமல் நான் எப்பொழுதும் தங்கியிருக்கும், மற்றும் தூங்குகின்ற அறையின் ஜன்னல்களை மாத்திரம் அந்தச் சின்னக்குருவிகள் வந்து கொத்தி என்னை எழுப்பி என்னிடம் ஆகாரம் கேட்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். வீட்டைவிட்டு வெளியே நான் வந்து விட்டால் எனது தலைக்கு அருகில் அவைகள் பறந்து வருவதும், நான் நின்று கொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஏதாவதொரு செடியிலோ அல்லது புதரிலோ அவைகள் இருந்து தங்கள் பறவைப் பாஷைகளில் பேசி என் மேலுள்ள தங்கள் அன்பை வெளிப்படுத்துவதும் எனக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுப்பதாகவிருக்கும்.

நீ நினைப்பது போல நான் முயல் அல்ல, பூனைதான்.

ஒரு நாள் நான் எங்களது வீட்டுத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பூனையை ஒரு நாய் விரைந்து துரத்தி வந்து கொண்டிருந்தது. அந்த நாய் அந்தப் பூனையை ஒரு முயல் என்று நினைத்து எங்கிருந்தோ துரத்தி வந்து கொண்டிருந்தது. பூனைக்கு அதற்கு மேல் ஓட பெலனில்லை. ஓடாமல் நின்றால் நாய் தன்னை முயல் என்று தவறாக நினைத்து கடித்துக் குதறிவிடும். எனவே, அந்தப் பூனை சற்று தூரத்தில் நின்று தன் முதுகை மேலாகத் தூக்கித் தனது தலையை நன்றாகத் தாழ்த்தி தான் ஒரு பூனை மாத்திரமே, நான் முயல் அல்ல என்று தனது பூரணமான பூனை உருவத்தை உருவாக்கி அந்த நாய்க்குக் காண்பித்தது. அதைக் கண்ட நாய் உடனே அந்த இடத்திலிருந்து பூனையை விட்டுவிட்டுப் போய்விட்டது.

ஒருக்கால் அந்தப் பூனை முட்டாள்தனமாக இன்னும் ஓடிக்கொண்டிருந்தால் அந்த நாயினால் கடிபட்டுச் சாகவேண்டியதைத் தவிர அதற்கு வேறு வழியே இல்லை. அந்தப் பூனையின் சமயோசித செயல் என்னை மிகுந்த வியப்புக்குள்ளாக்கியது.

பருந்துவிடமிருந்து உயிர் தப்ப அடைக்கலம் தேடும் அடைக்கலான் குருவிகள்

பறவைகளுக்கு நான் ஒழுங்காக எங்கள் வீட்டில் ஆகாரம் போடுவதால் அந்த பறவைக்கூட்டத்தில் அடைக்கலான் குருவிகளும் அதிகமாக உள்ளன. இந்த அடைக்கலான் குருவிகள் சிறிய பருந்தான ''வில்லேத்திரம்'' என்ற பறவைக்கு மிகவும் விருப்பமான உணவாகும். இந்தப் பருந்துவுக்கு பசி உண்டாகிவிட்டால் நேரடியாக எங்களது வீட்டிற்கு வந்து அங்கு அமர்ந்திருக்கும் கூட்டமான அடைக்கலான் குருவிகளில் ஒன்றை அடித்துக் கொண்டு போய்விடும். அந்தப் பொல்லாத பருந்துவிடமிருந்து அடைக்கலான்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எங்களது வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு நெருக்கமான பெரிய குத்துச் செடியில் ஆரம்பத்தில் மறைந்து இருந்து வந்தன. அந்த மறைவான குத்துச் செடியினுள்ளும் பருந்து வந்து புகுந்து அவைகளைப் பிடித்துக் கொண்டு சென்றதால் தங்கள் இருப்பிடத்தை மாற்றி வீட்டிற்குப் பக்கத்திலுள்ள ஒரு அடர்த்தியான பெரிய மரம் போன்று வளர்ந்து நிற்கும் காப்பிச் செடியினுள் தங்கள் இருப்பிடத்தை மாற்றின. ஆனால், தந்திரமான பருந்து அந்தக் காப்பிச் செடிக்குள்ளும் புகுந்து அடைக்கலான்களை அடித்துச் சென்றன.

அடைக்கலான் குருவிகளுக்கு பருந்துவிடமிருந்து தப்பிக்கொள்ள என்ன செய்வதென்றே தெரியவில்லை. எந்த ஒரு இடத்திற்குச் சென்றாலும் அங்கெங்கெல்லாம் வந்து தங்களைப் பட்சிக்கும் பருந்துவிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கடைசியாக அவைகள் ஒரு இடத்தை அவைகள் தங்களுக்கு தெரிந்தெடுத்தன. எங்களது வீட்டின் பாத் ரூம் கதவு எப்பொழுதும் திறந்தே கிடக்கும். அதின் வழியாக அவைகள் இப்பொழுது வீட்டிற்குள் பறந்து வந்து பாத் ரூம் அறையின் மேல் விட்டங்களில் சப்தமிடாமல் அமைதியாக இருந்து கொள்ளுகின்றன. இப்பொழுது அடைக்கலான்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றன. தங்களுடைய நிச்சயமான பாதுகாப்பு எங்கே உள்ளது என்பதைக் கண்டு கொண்ட அந்த அற்பமான சிட்டுக் குருவிகளின் ஞானத்தை நான் எண்ணி பெரும் வியப்படைந்தேன்.

குரங்கை எச்சரிக்கும் காகங்கள்.

கோடை காலம் தொடங்கிவிட்டால் ஒவ்வொரு ஆண்டும் அநேகமாக எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள மரங்களில் காகங்கள் தங்கள் கூடுகளைக் கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிப்பது வழக்கம்.

அந்த நாட்களில் தங்கள் கூடுகள் இருக்கும் மரங்களண்டை வரும் குரங்குகளை காகங்கள் மிகவும் ஆவேசத்துடன் பாய்ந்து பறந்து வந்து கொத்தித் துரத்துவதை நான் பார்த்திருக்கின்றேன். அந்தக் குரங்குகள் எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு பேரிக்காய் மரத்தில் வந்து அமர்ந்து கொள்ளும். அதைக் கண்ட காகங்கள் அவைகளை சரமாரியாக பறந்து கொத்திக்கொண்டே இருக்கும். அவைகளில் ஒரு காகம் ஏதாவது ஒரு குரங்கண்டை வந்து அமர்ந்து பக்கத்திலுள்ள சிறிய மரக்கிளைகளை தனது அலகால் பலமாகக் கொத்தி கொத்தி இலைகளையும், சிறிய கிளைகளையும் அந்தக் குரங்கிற்கு முன்பாகப் பூமியிலே போடுவதை நான் வியப்புடன் பார்த்திருக்கின்றேன். அந்தச் செயலானது அந்தக் குரங்கைப் பார்த்து ''குரங்கே, எனது அலகானது எத்தனை கூர்மையும், பலமுமானது என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். இதோ பார், நான் உனக்கு முன்பாக இலைகளையும், கிளைகளையும் நான் கொத்திப் பூமியில் போடுகின்றேன். அப்படியே, நீ எனது கூட்டிற்கு வந்து அதைக் கலைப்பாயானால் நான் உன்னை எனது கூர்மையான அலகால் கொத்தி இரத்தக்களறியாக்கிவிடுவேன். எனவே, நீ இந்த இடத்திலிருந்து சீக்கிரமாக ஓடிப் போய்விடு'' என்று அதைக் கடுமையாக எச்சரிப்பது போலவிருக்கும். ஓர் அற்பமான பறவை தனது

தந்திரமான செயலின் மூலமாக தன்னைவிட ஒரு வலிமையான ஜீவராசியை எச்சரிப்பது பார்ப்பதற்கு ஆச்சரியமாகவிருக்கும்.

கனம் பொருந்தினவனாக இருந்தும் அறிவில்லாத மனுஷன்

நாம் அற்பமாக எண்ணக்கூடிய ஜீவராசிகள் யாவும் இந்த உலகத்தில் மிகுந்த ஞானத்தோடு வாழ்ந்து தங்கள் உயிரையும், தங்கள் சந்ததிகளின் உயிர்களையும் பாதுகாத்துக் கொள்ளுவதை மேற்கண்ட சம்பவங்களின் மூலமாக நாம் கவனித்தோம். ஆரம்பத்தில் நாம் பார்த்த அந்த தவளை எத்தனை மணி நேரமாக அந்தக் கதவண்டைக் காத்திருந்ததோ நாம் அறியோம். தனது உயிரைப் பாதுகாத்துப் பத்திரமாக வெளியேறிச் செல்ல தான் வீட்டுக்குள் வந்த கதவே தஞ்சம் என்று அறிந்து அங்கேயே உட்கார்ந்துவிட்டது.

தனது சந்ததியைத் தந்திர காகத்தினிடமிருந்து காத்துக் கொள்ள புல்புல் பறவைகள் தேயிலைச் செடிகளின் அடிமட்டத்தில் பறந்து சென்று வேறு ஒரு இடத்தின் வழியாக வெளியேறிப் பறந்து செல்லுகின்றன.

தன்னைக் கடித்துப் பட்சிக்கத் தன்னைச் சூழ்ந்து நிற்கும் நாய்களின் வாயிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தனது பெலத்தை அவைகளுக்கு வெளிப்படுத்தி அந்த நாய்கள் தாங்களாகவே தன்னைவிட்டுப் போகச் செய்யும் காட்டுப் பன்றியின் ஞானத்தை நாம் பார்த்தோம்.

வீட்டின் 6 ஜன்னல்களில் எந்த ஜன்னலைத் தங்கள் அலகினால் கொத்தினால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும் என்று அந்த சின்னஞ்சிறு அடைக்கலான்களும் புல்புல் பறவைகளும் ஞானத்தோடு கண்டு வைத்திருந்தன.

தன்னைக் கடித்துக் குதறத் தன்னைப் பின் தொடர்ந்து வரும் கடி நாயின் வாய்க்குத் தப்பித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தனது முதுகை நன்கு உயரத் தூக்கி தனது தலையைத் தாழ்த்தி தனது உருவத்தைப் பூனையாகக் காண்பித்த அந்த அற்பமான ஜீவராசியின் ஞானத்தை நாம் ஆச்சரியத்துடன் அறிந்தோம்

தங்களைப் பட்சிக்கும் பருந்துவினிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள செடிகொடி புதர்களில் அடைக்கலம் தேடுவதைவிட மனிதர்கள் வாழும் வீடே தங்களுக்கு நிச்சயமான அடைக்கலப் பாதுகாவல் என்பதைக் கண்டு கொண்ட அடைக்கலான்கள் மனிதர்களோடு வாழத் தீவிரிக்கின்றன.

தங்களது கூடுகளில் உள்ள தங்கள் முட்டைகளையும், குஞ்சுகளையும் பாழாக்கக்கூடிய குரங்குகளை அவைகளுக்கு முன்பாக பேரிக்காய் மரத்தில் வந்து அமர்ந்து மரத்தின் இலைகளையும், சிறிய மரக்கிளைகளையும் கொத்தி முறித்து பூமியில் போட்டு தங்களது வலிமையை குரங்குக்குக் காண்பித்து அவைகளை எச்சரித்து காகங்கள் துரத்துகின்றன.

ஆனால் மகா ஞானவானான மனிதன், காலக்கடிகாரமற்ற முடிவில்லாத நித்தியத்தை ஆண்டவர் இயேசுவோடு பரலோகத்தில் செலவிடவேண்டிய மனிதன், அதற்கான ஆயத்தங்களை பூமியில் செய்து எந்த நேரமும் தன்னைச் சந்திக்கக்கூடிய மரணத்தை தைரியத்தோடு சந்திக்க மனமற்றவனாக நொடிப் பொழுதில் மறைந்தொழியும் உலக மாயையின் மணல் கோட்டைகளை ஆசை ஆவலோடு மரணம் என்ற அலை மோதும் சமுத்திரத்தின் கரையில் மதியீனனைப் போலக் கட்டி அழகு பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருக்கின்றான்.

இதை ஆசை ஆவலோடு கருத்தாக வாசிக்கும் சகோதரனே, சகோதரியே உனது பாவங்களிலிருந்து மனந்திரும்பிவிட்டாயா? உலகம் தரக்கூடாததும், உலகம் உன்னிலிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாததுமான தேவ சமாதானம் உன் உள்ளத்தில் இருக்கின்றதா? ஆம், நீ மறுபடியும் பிறந்து விட்டாயா? அன்பின் ஆண்டவர் பேசுகின்ற பரலோக குரலை நீ கேட்டு வருகின்றாயா? ''உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருப்பதற்காகச் சந்தோசப்படுங்கள்'' (லூக்கா 10 : 20) என்று ஆண்டவர் சொன்னாரே, அந்த அற்புத வாக்குத்தத்தால் உன் இருதயம் தினமும் களிகூர்ந்து வருகின்றதா? நாட்களும், மாதங்களும், ஆண்டுகளும் உருண்டோட, உருண்டோட தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்காக ஆயத்தம்பண்ணி வைத்துள்ள (1 கொரி 2 : 9) பரதீசின் காட்சிகள் உன் கண்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றதா? அந்த ஆனந்தக் காட்சியால் நீ பூரிப்படைந்து வருகின்றாயா? நீ வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகம் உனக்கு சொற்ப காலம் தங்கி நீ துரிதமாகக் கடந்து செல்லும் ஒரு சத்திரமாகவும், இந்த உலகத்தில் நடந்து கொண்டிருக்கும் காரியங்கள் எல்லாம் வேஷமும் விருதாவும் (சங் 39 : 6, ஏசாயா 40 : 6) மாத்திரமே என்பதுவும் உனக்குத் துலாம்பரமாகத் தெரிகின்றதா?

வாசிப்போனே, உன் இகத்தின் கண்களை நீ மரணத்தில் மூடும்போது உனது கண்களை பரலோகத்தில் நிச்சயமாகத் திறப்பாயா என்பதை உறுதிப்படுத்திக் கொள். அதைவிட்டு விட்டு உனது மனதும், மாம்சமும்

விரும்புகின்ற வழியில் இந்த உலகத்தில் வாழ்ந்து செல்லுவாயானால் "புத்தியீனமாகச் செய்தீர், உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற் போனீர். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது" (1 சாமுவேல் 13 : 13 -14) என்ற துயரக் குரலை வாழ்வின் முடிவில் கேட்டு என்றென்றைக்குமுள்ள காரிருளுக்குள் கடந்து செல்ல வேண்டியதாகவிருக்கும்.

தேவப் பிள்ளையே, உனது பூவுலக வாழ்வுக்குப் பின்னர் நீ ஆண்டவருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும் என்ற நிச்சயமான நம்பிக்கை உனக்கு உள்ளதா? அதைக் கண்டு பிடிக்க ஒரே ஒரு பரிசோதனை என்னவெனில் ஒரு நாளில் நீ எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஆண்டவருடைய பரிசுத்த பாதங்களில் அப்படியே ஜெப நிலையில் உன்னால் அமர்ந்திருக்க முடியும். ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமத்தையும், அவரைப் பாடித் துதிக்க ஒரு கீதத்தையும் நீ எடுத்துக்கொண்டு ஒரு ஆள் அரவமற்ற தீவில் கூட தன்னந்தனிமையில் உன்னால் உனது வாழ்நாட்காலத்தை மிகுந்த களிகூருதலோடு செலவிட்டுவிட முடியும். ஏன்? மோட்சமாகிய இயேசு உன்னோடு கூட இருக்கின்றார். காரணம், நீ உனது பாவங்களுக்காக மனங் கசந்து அழுது பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட மறுபடியும் பிறந்த ஒரு பரிசுத்த தேவப் பிள்ளை நீ. உலக மக்களைப் போல உனது பொன்னான நேரத்தையும், காலத்தையும் பாழாக்க உனக்கு தொலைக்காட்சி பெட்டி, செய்தித் தாட்கள், உலக சஞ்சிகைகள், வீண் வார்த்தைகளைப் பேச நண்பர்களும், உற்றார் உறவினர்களும் தேவைப்படார்கள். தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்ட மரியாளைப் போல ஆண்டவர் இயேசுவின் பாதங்கள் ஒன்றையே வாஞ்சித்துக் கதறுவாய் (லூக்கா 10 : 42) அதினால்தான், சங்கீதக்காரர் எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம் (சங் 73 : 28) என்று சொன்னார். உன்னை ஒரு கணம் சோதித்து உனது நிலை அறிவாயா?

மதுரை அரசரடி திருமறைக் கல்லூரியே, உன்னிலிருந்து பரிசுத்த குருவானவர்கள் எழும்புவது எப்போது?

''இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! அவன் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குவதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாயிருக்கும்'' (லூக்கா 17 :1,2)

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள மெய்ஞ்ஞானபுரம் என்ற ஊரிலுள்ள அம்புரோஸ் உயர்நிலைப்பள்ளியில் நான் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு வகுப்பு ஆசிரியராக இருந்த ஒரு அன்பான ஐயா அவர்களிடமிருந்து சமீபத்தில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தின் வரிகள் இவ்வாறு இருந்தன. ''எனது மூத்த மகன் பி.எஸ்ஸி., பட்டப் படிப்பை முடித்ததும் சில பரிசுத்த கிறிஸ்தவ வாலிபர்களின் ஐக்கியத்தின் காரணமாக ஆண்டவராகிய இயேசு இரட்சகரை தனது சொந்த இரட்சகராக தனது உள்ளத்தில் ஏற்று அவருடைய சொந்தப் பிள்ளையானான். கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஒரு பரிசுத்த வாஞ்சை மகனில் அதிகமாகக் காணப்பட்டது. அதை உணர்ந்த நாங்கள் மதுரையிலுள்ள அரசரடி திருமறைக் கல்லூரியில் சேர்த்தால் மகன் ஒரு குருவானவராகி அன்பின் ஆண்டவருக்கு கனி நிறைந்த ஒரு ஊழியம் செய்ய வழி பிறக்கும் என்ற பரிசுத்த ஆவலில் அவனை அங்கு சேர்த்தோம். ஆனால் என்ன துயரம்! மகன் அங்கு சேர்ந்து அந்தக் கல்லூரியிலுள்ள தேவனுக்கு விருப்பமில்லாத மாறுபாடான உபதேசங்களைக் கண்டு மனக் கொதிப்படைந்து ''சீ, இதுதானா கிறிஸ்தவ ஊழியம்!'' என்று அந்தக் கல்லூரியை விட்டு வெளியே வந்து விட்டான். அங்கு சென்றதின் காரணமாக மகன் தன் கர்த்தர் மேல் கொண்டிருந்த தனது ஆதி அன்பிலிருந்து வழிவிலகி கர்த்தரை விட்டுப் பின்வாங்கி அவரிலிருந்து தூரமாகப் போய் இந்த நாட்களில் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றான்'' என்று எழுதியிருந்தார்கள். எத்தனை கண்ணீரின் நிலை பாருங்கள்!

நான் சிறுவனாக இருந்தபோது நாசரேத் என்ற பெரிய கிறிஸ்தவ கிராமத்துக்கு அருகில் உள்ள திருமறையூர் என்ற இடத்தில் குருவானவர்களைப் பயிற்றுவிப்பதற்கான திருமறைக் கல்லூரி இருந்தது. அந்த நாட்களில் நான் அந்த இடத்திற்குச் சென்று அந்தக் கல்லூரியைக் கண்டு வந்திருக்கின்றேன். அந்த இடம் முழுவதும் வேப்ப மரங்களால் நிறைந்து

இருந்தது. கோடை கால நாட்களில் வேப்ப மரங்கள் பழங்களால் நிறைந்து மைனாக்கள், மற்றும் அணில்களின் சத்தத்தால் அந்த இடம் எதிரோலி கொடுத்து நிற்கும். வரிசை வரிசையாக குருவானவர்களுக்குப் படிப்பவர்களின் வீடுகள் அமைந்திருக்கும். அங்குள்ள சிற்றாலயம் எருசலேம் தேவாலய வடிவமைப்பில் கட்டப்பட்டிருப்பதாக மக்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன். அதை நான் போய் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்.

அந்த நாட்களில் திருமறையூர் திருமறைக்கல்லூரிக்கு தாமஸ் சித்தர் என்ற பரிசுத்த குருவானவர் பிரின்ஸ்பாலாக இருந்தார்கள். சாதுசுந்தர்சிங் என்ற பரிசுத்த மகாத்துமா நாசரேத் வந்திருந்தபோது அந்த தாமஸ் சித்தர் ஐயரவர்களின் பங்களாவில்தான் தங்கியிருந்ததாக நான் புத்தகத்தில் படித்திருக்கின்றேன். அந்த அளவுக்கு ஐயரவர்கள் பரிசுத்தமாக இருந்தார்கள். அவர்களுடைய அழகான பங்களா திருமறையூர் இறையியல் கல்லூரிக்கு மத்தியில் அழகாக அமைந்திருந்தது. அந்த திருமறையூர் கல்லூரியில் வேதாகம பயிற்சிபெற்ற குருவானவர்கள் ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்தார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அங்கு கல்வி பயிலும் இளங்குருவானவர்கள் இரண்டிரண்டு பேராக பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள தேவாலயங்களில் ஆராதனைகளை நடத்தி தேவனுடைய செய்தியைக் கொடுத்தார்கள்.

அப்படி ஒரு தடவை 2 இளங்குருவானவர்கள் திருமறையூரிலிருந்து நான்கு மைல்கள் தொலைவிலுள்ள எங்கள் பிள்ளைவிளை என்ற ஊருக்கு வந்து எங்கள் ஊர் ஆலயத்தில் ஆராதனை நடத்தி பிரசங்கம் செய்திருக்கின்றார்கள். குருவானவர்களுக்குரிய வெண் வஸ்திரம் தரித்தவர்களாக அந்த இரண்டு குருவானவர்களும் காணப்பட்ட விதமும், அவர்களால் அன்று எங்கள் ஊர் தேவாலயத்தில் கொடுக்கப்பட்ட எழுப்புதலான தேவச் செய்தியும் அன்று ஆலயத்துக்கு வந்திருந்த எனது அருமைத் தாயாரின் உள்ளத்தை அதிகமாகத் தொட்டுள்ளது. அந்த ஆலயத்தில் அவர்கள் தனது ஒரே குமாரனான என்னையும் பின் நாட்களில் அந்த குருவானவர்களைப் போல மாற்ற வேண்டும், நான் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று கர்த்தரிடம் கண்ணீர் சிந்தி ஜெபித்திருக்கின்றார்கள். அன்று அவர்கள் அந்த ஆலயத்தில் ஏறெடுத்த கண்ணீரின் மன்றாட்டு தேவ சமூகத்தில் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒருக்கால் நான் ஒரு குருவானவராக மாற்றம் பெறாவிட்டாலும் தேவனுடைய பரிசுத்த உள்ளத்துக்கு உகந்த ஒரு சுவிசேஷகனாக கர்த்தருடைய திட்டமான அழைப்பைப் பெற்று அவருக்கு

ஊழியம் செய்யும் பாக்கியமும், சிலாக்கியமும் பின் நாட்களில் எனக்கு கிடைத்துள்ளது. கர்த்தருக்கே மகிமை.

திருமறையூரிலிருந்த அந்த பரிசுத்தமான இறையியல் கல்லூரி பின் நாட்களில் மதுரை அரசரடிக்கு மாற்றப்பட்டு தேவனுடைய திருவுள்ளத்துக்கு வேதனை தரக்கூடிய மாறுபாடான உபதேசங்களை போதிக்கும் ஒரு கல்லூரியாக இன்று சிறந்து விளங்குவதால்தான் ஆரம்பத்தில் நாம் கண்ட அந்த அன்பான வாலிப மகன் தான் தனது கர்த்தரில் கண்டானந்தித்த ஆனந்த இரட்சிப்பின் அனுபவத்தை இழந்து நிர்கதியாக நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றான். அங்கு இறையியல் கல்வி பயின்று வெளி வரும் குருவானவர்கள் பலரும் (எல்லாரையும் நான் குறிப்பிடவில்லை. உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்று ஆண்டவர் குறிப்பிட்டாரே அந்த மக்களைத்தான் நான் இங்கு சுட்டிக் காண்பிக்கின்றேன்) மதுபானம் அருந்தியவர்களாக, அந்த மதுபான வாடையுடனும், தங்கள் குருத்துவ அங்கிப் பையில் சிகரெட், தீப்பெட்டியுடனும் ஆராதனை நடத்துகின்றனர். உள்ளத்தில் சிற்றின்ப பாவ சிந்தையுடன் தங்களுக்கு முன்பாக முழங்காலூன்றியிருக்கும் திருச்சபை பெண்களுக்கு நற்கருணை பரிமாறுகின்றனர். நரகம் இல்லை என்று துணிச்சலாகவே தேவ சந்நிதியில் நின்று பிரசங்கிக்கின்றனர். தங்கள் கரங்களில் கர்த்தர் கொடுத்த பரிசுத்த ஊழியத்தை பயத்தோடும், நடுக்கத்தோடும், ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சையுடையவர்களாக ஆத்தும பாரத்தோடும் செய்வதற்குப் பதிலாக ''மணி அடித்தால் சாப்பாடு, மாதம் பிறந்தால் சம்பளம்'' என்ற வார்த்தைக்கு இணங்க உலகத்து வேலைகளில் ஒன்றைப் போல நிர்விசாரமாகவும், இறுமாப்பாகவும், தாங்கள் ஊழியம் செய்கின்ற திருச்சபை மக்களை துச்சமாக எண்ணிக்கொண்டு கர்த்தருடைய பயமின்றி செய்கின்றனர். இது சம்பந்தமாக எனது காதுகளுக்கு எட்டிக்கொண்டிருக்கும் எவ்வளவோ நிகழ்வுகளை எழுதிக்கொண்டு செல்லலாம். அந்த வார்த்தைகள் கர்த்தருடைய நல்ல நாமத்துக்கு மகிமை சேர்க்காது. இந்த அன்பான மக்கள் 1 சாமுவேல் 2 ஆம் அதிகாரம் 25 ஆம் வசனத்தைக் கண்ணீரோடு வாசித்துப் பார்த்து தேவன் தமது சுடரொளிப் பட்டயத்தை அவர்களுக்கு எதிராக சுழற்றும் முன்னர் மனந்திரும்பவேண்டும். நாமும் இந்த குருவானவர்களின் மனந்திரும்புதலுக்காகவும், மதுரை அரசரடி திருமறைக் கல்லூரியின் கள்ள உபதேசங்கள் ஒழிந்து, தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளின் சத்தியம் அங்கு போதிக்கப்படவும், மறுபடியும் பிறந்த பரிசுத்த குருவானவர்களை மாத்திரம் அந்த திருமறைக்கல்லூரி உருவாக்கவும் ஜெபிப்போம்.

நீங்கள் வாங்கும் கிறிஸ்தவ பத்திரிக்கைகளைக் குறித்து விழிப்பாக இருங்கள்

இந்த நாட்களில் திரள் திரளான கிறிஸ்தவ பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு வெளி வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பத்திரிக்கைளின் பெயர்களும் விந்தை விநோதமுமாயிருக்கின்றது. ஒரு காலத்தில் தமிழ் கிறிஸ்தவ திருச்சபை உலகில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில கிறிஸ்தவ பத்திரிக்கைகளே வெளி வந்தன. பெரும்பாலான கிறிஸ்தவ பத்திரிக்கைள் கிறிஸ்தவ மக்களின் விலையேறப் பெற்ற ஆத்துமாவின் இரட்சிப்பின் காரியத்தை மனதில் கொண்டு ஆத்தும பாரத்தோடும், கண்ணீரோடும், கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக செய்திகளை வெளியிடாமல், பெயர் பிரஸ்தாபத்திற்காகவும், லோகாதாயத்திற்காகவும் அச்சிடப்படுவதை நாம் அந்தப் பத்திரிக்கைளை படிக்கும்போதே மிகவும் எழுதில் கண்டு கொள்ளலாம். தபால்காரர் எங்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கும் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் பலவும் வாசிக்கப்படாமல் நேராக குப்பைக் கூடைக்குச் செல்ல வேண்டிய பத்திரிக்கைகள் என்று ஒரு தேவப் பிள்ளை ஒரு சமயம் எனக்கு எழுதியிருந்தது என் நினைவுக்கு வருகின்றது. உண்மையான வார்த்தைகள் அவை.

இந்தச் செய்தியை நான் உங்களுக்கு எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் எனது கரங்களுக்குக் கிடைத்த ஒரு கடிதத்தில் இந்தவிதமான வரிகள் காணப்படுகின்றன ''எனக்கு கிறிஸ்தவ பத்திரிக்கைகள் மட்டும் 25 க்கு மேல் வருகின்றன. ஆனால், ஒன்றிரண்டு பத்திரிக்கைகளைத் தவிர மற்ற பத்திரிக்கைகளை நான் வாசிப்பதில்லை. கிறிஸ்தவ உலகில் இன்று பத்திரிக்கைகள் திரள் திரளாக மலிந்து கிடக்கின்றன.

உலகின் மிகப் பெரிய தீவுகளில் ஒன்றான நியூகினியில் மிகவும் அழகான பரதீசின் பறவைகள்(Bird of Paradise) வாழ்கின்றன. அந்த அழகான பறவைகளின் நடுவில் பிடோஹூய் என்ற பறவையும் வாழ்கின்றது. அந்தப் பறவையை அந்த இடத்தின் பழங்குடி மக்கள் சாப்பிடமாட்டார்கள். காரணம், அந்தப் பறவையின் உடலில் கடுமையான விஷம் இருக்கின்றது. அந்தப் பறவையானது அந்த மக்கள் விரிக்கும் வலைகளில் சிக்கினால் அதை உடனே விடுவித்து வெளியே விட்டுவிடுவார்கள். அந்தப் பறவையை அந்த பழங்குடி மக்கள் ''குப்பை பறவை'' (Rubbish Bird) என்று அழைக்கின்றனர். அதைப் போலவே நமது

ஆத்துமாவை நச்சுப்படுத்தக் கூடிய குப்பை கிறிஸ்தவ பத்திரிக்கைகள் இந்தக் கடைசி காலத்தில் நிறைய உள்ளன.

நாம்அந்தப் பத்திரிக்கைகளை விரும்பாத போதினும் அவைகளை அச்சிட்டு வெளியிடுபவர்கள் நமது முகவரிகளை எப்படியோ யார் மூலமாகவோ கண்டு பிடித்து நமக்கு பத்திரிக்கைகளை ஒழுங்காக அனுப்புகின்றனர். பத்திரிக்கை வேண்டாமென்று நாம் அவர்களுக்கு கடிதம் எழுதினால் மேலும் ஒரு பத்திரிக்கை நமக்கு சேர்த்து அனுப்பி வைப்பார்கள். நமது விலாச மாற்றத்தை நாம் அவர்களுக்குத் தெரிவித்தால் கூடுதலாக 3 பத்திரிக்கைகளை நமக்கு அனுப்புவார்கள். எந்த ஒரு ஒழுங்கும், பொறுப்பும், கவலையுமின்றி ஆயிரக்கணக்கில் பத்திரிக்கைகளை அச்சிட்டு யார் யாருக்கெல்லாமோ அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். தாங்கள் அனுப்பும் பத்திரிக்கைகளை அவைகளை வாங்கும் நபர்கள் அக்கரையோடு வாசிப்பார்களா அல்லது அதின் உறையைக்கூட பிரிக்காமல் தூக்கி வீசி எறிவார்களா, விலாசதார் முகவரி மாற்றம் செய்திருப்பார்களா என்பதை எல்லாம் அவர்கள் யோசித்துப் பாராமல் ஆண்டுக்கணக்காக தங்கள் பத்திரிக்கைகளை அனுப்பிக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு கிறிஸ்தவ வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்களுக்கு வரும் ஒரு நல்ல தரமான கிறிஸ்தவ பத்திரிக்கையின் உறையைக் கூட பிரிக்காமல் அவர்கள் வீட்டின் ஒரு அறையில் குவியலாகப் போட்டு வைத்திருந்தார்கள். குறைந்தபட்சம் 10 வருடங்களுக்குரிய பத்திரிக்கை அங்கே உறை பிரிக்கப்படாமல் அப்படியே கிடந்தது. அதைப் பார்க்க எனக்கு மனம் சம்மதியாததால் அங்கே உட்கார்ந்து அந்தப் பத்திரிக்கையின் உறைகளை எல்லாம் பிரித்து அவைகளை எடுத்துக் கொண்டு போய் அவைகளை மற்ற கிறிஸ்தவர்களுக்கு அக்கறையோடு கொடுக்கக்கூடிய ஒரு தேவப் பிள்ளையிடம் கொடுத்தேன்.

இங்கு கோத்தகிரியில் சிலர் தேவ எக்காளத்தை வாங்கி வாசிப்பார்கள். என்னைச் சந்தித்த கோத்தகிரியிலிருக்கும் ஒரு கிறிஸ்தவ சகோதரன், தேவ எக்காளம் பத்திரிக்கை ஒன்றை தான் கோத்தகிரியிலுள்ள பழைய பேப்பர் கடை ஒன்றில் கண்டதாகவும், அதை தான் எடுத்து படித்து வருவதாகவும் என்னிடம் சொன்னார்கள். அப்படியானால், கோத்தகிரியிலுள்ள சந்தாதாரர்கள்தான் தங்களுக்கு வந்த தேவ எக்காளத்தை தாங்கள் படித்துவிட்டு பழைய பேப்பர் கடைக்குப் போட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து அன்றிலிருந்து கோத்தகிரி வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு தேவ

எக்காளம் பத்திரிக்கை அனுப்புவதை நான் உடனே நிறுத்திவிட்டேன். அவர்களுடைய சந்தா பணங்களையும் திரும்ப மணி ஆர்டர் பண்ணி அனுப்பிவிட்டேன்.

ஒரு பேருந்து நிலையத்துக்கு அருகில் ஒரு பள்ளமான இடத்தில் ஒரு கிறிஸ்தவ பத்திரிக்கை கிடந்தது. ஆண்டவர் இயேசுவின் படத்தையும், ஒரு நல்ல தேவ வசனத்தையும் அந்தக் கிறிஸ்தவப் பத்திரிக்கை தாங்கி நின்றது. கேட்பவர்களுக்கெல்லாம் முற்றும் இலவசமாக அனுப்பப்படும் பத்திரிக்கை அது. மேலேயிருந்து சிறுநீர் கழிப்பவர்கள் சரியாக அந்தப் பத்திரிக்யையில் சிறுநீர் கழிப்பதை நான் கண்டு பெரிதும் விசனமும், அதிர்ச்சியும் அடைந்தேன். கீழே இறங்கிப் போய் அந்தப் பத்திரிக்கையை அப்புறப்படுத்த இயலாத ஒரு இடத்தில் அது கிடந்ததால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது போயிற்று. அந்தக் காட்சியைக் கண்ட நான் நமது தேவ எக்காளம் இதழின் காரணமாகவும் ஒரு கடுமையான தீர்மானத்தை நான் மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

ஆம், எந்த ஒரு சூழ்நிலையிலும் தேவ எக்காளம் அதை விரும்பாத மக்களுடைய கரங்களுக்குச் சென்று விரும்பத்தகாத இடங்களில் போய்க் கிடந்து விடக் கூடாது என்பதுவே அந்தத் தீர்மானம் ஆகும். அந்தக் கண்டிப்பான தீர்மானம் காரணமாகவே 38 ஆண்டு காலத்திற்கு முன்பதாக 2000 பிரதிகளுடன் ஆரம்பமான தேவ எக்காளம் பத்திரிக்கை இன்று வெறும் 900 பிரதிகளாக குறைந்துவிட்டது. எண்ணிக்கைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. கொஞ்ச பேர்கள் தேவ எக்காளத்தைப் படித்தாலும் அவர்கள் தாங்கள் படித்த சத்தியத்தின்படி ஜீவித்து தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணிய பரம இளைப்பாறுதலை கண்டடைந்தால் அதுவே போதுமானது. அதுவே பேரானந்தமானது. அதுவே தேவனுடைய வார்த்தை சுட்டிக்காண்பிப்பது (மத்தேயு 7 :14) அதுவே கர்த்தருக்கு மகிமை சேர்க்கக் கூடியது.

யாரோ ஒரு தேவப் பிள்ளை ஒரு சமயம் என்னிடம் சொன்னது போல கிறிஸ்தவப் பத்திரிக்கைகள் பலவும் இன்றையக் காலக்கட்டத்தில் ஒரு பிச்சைப் பாத்திரம் போல (திருவோடு) பயன்படுத்தப்படுகின்றது. எத்தனை உண்மையான வார்த்தைகள் அவை! தங்கள் பத்திரிக்கைகளில் தங்கள் தேவைகளுக்காக கர்த்தருடைய பிள்ளைகளிடம் கையேந்தி நிற்கின்றார்கள். கட்டிடங்கள் கட்டுவதற்கும், தொலைக்காட்சி ஊழியத்திற்கும், வானொலி ஊழியத்திற்கும் இன்னும் இதர பல தேவ ஊழியங்களுக்கும் தங்களுக்குப்

பணம் தேவை என்று தங்கள் பத்திரிக்கைளில் முதல் பக்கம் முதல் கடைசிப் பக்கம் வரை விளம்பரப்படுத்தி மக்களிடம் பணம் கேட்கின்றனர்.

10000 பத்திரிக்கைகளை அச்சிட்டு வெளியிட்டால் மாதந்தோறும் 1000 மணி ஆர்டர்கள் சந்தாதாரர்களிடமிருந்து தங்களுக்கு தப்பாமல் கிடைக்கும் என்ற வியாபார நோக்கத்தோடு வெளியிடப்படும் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் பல உண்டு. அப்படிப்பட்ட பத்திரிக்கைகள் வெளியிடும் செய்திகளும் தேவ நாம மகிமைக் குலைச்சலான செய்திகளாகவே இருக்கும். அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவ பத்திரிக்கையில் இந்த 2005 ஆண்டு வெளி வந்த ஒரு உண்மைச் செய்தியை உங்களுக்கு அப்படியே கீழே தருகின்றேன். வாசித்துப் பாருங்கள் :-

கணவரை மகிழ்ச்சியாக்க.....................!?

''எங்கள் திருமணம் முடிந்து 25 ஆண்டுகள் ஆகின்றது. எனக்கு மூன்று பெண் பிள்ளைகள். பேத்திக்கு 6 மாதம். நான் என் திருமணத்திற்கு ஆயத்தப்பட்டபோது நான் எடுத்த பல தீர்மானங்களில் முதன்மையானது ''என் சரீரத்திற்கு நான் அதிகாரியல்ல, என் கணவரே அதிகாரி'' என்ற ஒரு சிறிய ஊறுதிப்பாடு எடுத்துக் கொண்டேன். திருமணமான முதல் நாளிலிருந்து என் கணவரை தாம்பத்திய உறவில் திருப்தி செய்ய நானே முந்திக் கொள்ளுகின்றேன். என் கணவர் நாளுக்கு நாள் என்னை அதிகம் நேசித்து வருகிறார். எங்களால் ஒருவரை ஒருவர் விட்டு ஒரு வாரம் கூட பிரிந்திருக்க முடியாது''

(2)

''என் கணவருக்கு பூரி பிடிக்கும். மதியம் மீன் குழம்பும் பொரியலும் அதிக இஷ்டம். மாலையில் பயறுவகை அதிகம் எதிர்பார்ப்பார். இரவில் இரண்டு காய்கறி, இரசம், அப்பளம் கொடுத்துவிட்டால் போதும். என் கணவருக்கு இஷ்டமான உணவை எங்களுக்கு வேலைக்காரியிருந்தும் நானே தயாரிக்கின்றேன். நானே பரிமாறுகிறேன். அவர் சாப்பிடும் பொழுது அருகில் உட்கார்ந்து அவர் நன்றாக சாப்பிட உற்சாகப்படுத்துகின்றேன். இவர் வயிறு நிரம்பின பின்பு கறுகலான காரியங்களைப் பேசி, மிக எளிதாகத் தீர்மானிக்கிறோம்''

இப்படிப்பட்ட காமவிகாரமான குப்பைச் செய்திகளை வெளியிடும் கிறிஸ்தவப் பத்திரிக்கைகளை படிக்கும் ஒரு ஆத்துமா மோட்சம் செல்லுமா

அல்லது நரக பாதாளம் செல்லுமா என்பதை நாம் கண்டு பிடிக்க வெகு நேரம் பிடிக்காது. தரமற்ற கீழ்த்தரமான செய்திகளை மட்டமான காகிதத்தில் அச்சிட்டு எந்த ஒரு மேல் உறையும் இல்லாமல் 8 அல்லது 12 பக்கங்களில் அதை அச்சிட்டு வெளியிடுகின்றனர். அதற்குப் பெயர் கிறிஸ்தவ பத்திரிக்கையாம்.

ஒவ்வொரு கிறிஸ்தவ பத்திரிக்கையில் அந்தப் பத்திரிக்கையின் ஆசிரியரான தேவ ஊழியர் ஜெபித்த காரணத்தால் பல ஆண்டுகள் பிள்ளையில்லாமல் இருந்த அவர்களுக்கு ஆண்பிள்ளை கிடைத்ததென்றும், மூன்று மாடி வீடு கிடைத்ததென்றும், மகனோ அல்லது மகளுக்கோ டாக்டர் படிப்புக்கு இடம் கிடைத்ததென்றும், பிள்ளைகளுக்கு நல்ல வேலைகள் வெளி நாடுகளில் கிடைத்தது என்றும், தங்களுடைய நிலபுலங்களில் அபரிதமான விளைச்சல் கிடைத்ததென்றும், வியாபாரங்களில் பன்மடங்கு லாபம் கிடைத்தது என்றும் பலதரப்பட்ட சாட்சிகள் ஏராளம் வெளி வருகின்றன. இதுதான் தேவனுடைய சுவிசேஷமா? இதுதான் நித்திய ஜீவ வழியா? இப்படிப்பட்ட செய்திகளைப் படிப்பதால் அதைப் படிக்கும் ஆத்துமாக்களுக்கு எந்த ஒரு நித்திய நன்மையும் ஒருக்காலும் கிட்டாது என்பதை திட்டமாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ''தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோசமுமாயிருக்கிறது'' (ரோமர் 14 : 17) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. எங்கே செழிப்பின் உபதேசம் **(Prosperity Gospel)** இருக்கின்றதோ அங்கே சாத்தான் தனது செட்டைகளை விரித்து ஆனந்தக் களிப்போடு அமர்ந்திருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தேவ மக்களுக்கும், செழிப்புக்கும் வெகு தூரம். ''இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர் களுமாயிருக்கிறோம்.........................இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவுமானோம்'' (1 கொரி 4 : 11,13) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. தேவ மக்களின் செழிப்பு இதுவேதான்.

அரசாங்கம் அளிக்கும் முத்திரை சலுகைக்காக தங்கள் கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் உலகச் செய்திகளை (பத்திரிக்கைச் செய்திகளை) வெளியிடும் பத்திரிக்கைகளை வாங்கி வாசியாதேயுங்கள். ''நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது?

கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது?'' (2 கொரி 6 : 14, 15) அவைகளைப் படிப்பதால் உங்கள் இருதயம் கறைப்படும். அவைகளைப் படிப்பதை விட தினத்தந்தி, தினமலர், தினமணி வாங்கிப் படித்தால் நிறையச் செய்திகள் படிக்கலாமே! தேவனுடைய வார்த்தை ''உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக'' (லேவி 19 : 19) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. அப்படியிருக்க ஜீவ விதைகளையும், சாத்தானின் நச்சு விதைகளையும் இவர்கள் எப்படி கலந்து விதைக்கின்றார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

இதைக் கருத்தோடு வாசிக்கும் தேவப் பிள்ளையே, நீங்கள் வாசிக்கும் கிறிஸ்தவ பத்திரிக்கைகளைக் குறித்து மிகவும் விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருங்கள். நம்முடைய வாழ் நாட் காலம் மிகவும் குறுகியது. ''உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே'' (யாக் 4 : 14) அத்தடன் அது மிகவும் விரைவாகப் பறந்தோடிக் கொண்டிருக்கின்றது ''என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது'' (யோபு 7 : 6) என்கின்றார் யோபு பக்தன். ''அது (மானிட வாழ்நாட் காலம்) சீக்கிரமாக கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்'' (சங் 90 : 10) என்று தேவனுடைய மனுஷனாகிய மோசே கூறுகின்றார். நமது சிறிய ஆயுட் காலத்தை ஆண்டவராகிய இயேசு இரட்சகரின் பரிசுத்த நாம மகிமைக்காக மாத்திரம் நாம் செலவிடக் கருத்தாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வாசிப்புக்கு நாம் செலவிடும் காலத்தைக் காட்டிலும் தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்து அவற்றில் களிகூர்ந்து மகிழ்வதற்காகவே நாம் நமது வாழ்நாளின் பெரும் பகுதியை செலவிட வேண்டும். சங்கீதக்காரராம் நமது தாவீது ராஜா நாள் முழுவதும் அதை மிகவும் பிரியத்தோடு வாசித்து தியானித்ததாக நாம் கர்த்தருடைய புத்தகத்தில் பார்க்கின்றோம். ''உம்முடைய வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுவதும் அது என் தியானம்'' (சங் 119 : 97) என்கின்றார் அவர்.

உலகின் அநேக நாடுகளில் உள்ள சுமார் 10 லட்சம் கிறிஸ்தவ மக்களால் 7 மொழிகளில் ஆசை ஆவலாக வாங்கி வாசிக்கப்படும் ''அனுதினமும் இயேசுவுடன்'' (Every Day With Jesus) என்ற மிகவும் பயனுள்ள ஆவிக்குரிய ஆங்கில தினசரி தியானச் செய்தியை எழுதும் தேவ மனிதராகிய செல்வின் குயிஸ் (Selwyn Hughes) என்ற தேவ மனிதர் நான் இந்தச் செய்தியை

உங்களுக்கு எழுதும் இந்த நாளில் எழுதின ஒரு குறிப்பை உங்களுக்கு முன்னர் வைக்க விரும்புகின்றேன். ''நான் எழுதி வெளியிடும் ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற தினசரி தியானச் செய்தி உங்கள் ஜெப வேளையை ஆனந்தமும், களிகூருதலின் வேளையுமாக்க கர்த்தருக்குள் உதவி செய்வதாக. அதற்காக நானும் ஜெபித்து வருகின்றேன் ஆனால் எனது தியானச் செய்தியை மட்டும் நீங்கள் வாசித்து உங்கள் வாழ்வில் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதை கை நழுவ விட்டு விடுவீர்களானால் நான் இருதயம் நொறுங்குண்டு போய்விடுவேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்புங்கள்'' என்று எழுதுகின்றார். உண்மைதான், மற்ற கிறிஸ்தவ பத்திரிக்கைகளை வாசிப்பதைவிட தேவனுடைய பரிசுத்த வேதாகமம் ஒன்றை மட்டுமேதான் நாம் அதிகமாக நேசித்து வாசித்து தியானிக்க வேண்டும். அந்த வேதம் காட்டும் வெளிச்சத்தில் நாம் நடக்க வேண்டும்.

உங்களை மோட்சானந்த பாக்கியத்துக்கு வழிநடத்தக்கூடிய, நீங்கள் உங்கள் ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வைக் கட்டி எழுப்பக்கூடிய, உங்கள் மரணத்தை தைரியமாக நீங்கள் சந்திக்க வகை செய்யக் கூடிய, உங்கள் அன்பின் ஆண்டவரை இன்னும் அதிகமாக நேசிக்கவும் அவருக்கு ஊழியம் செய்யவும் உங்கள் ஆத்துமாக்களை ஏவி எழுப்பிவிடக்கூடியதும், உங்கள் விலையேறப்பெற்ற ஆத்துமாவைக் குறித்த மெய்யான ஆத்தும பாரம் கொண்ட மெய்யான பரிசுத்த தேவ மக்கள் எழுதி வெளியிடும் குறிப்பிட்ட சில நல்ல தரமான கிறிஸ்தவ பத்திரிக்கைகளை வாங்கி வாசியுங்கள். அவைகளில் காணப்படும் சத்தியங்களின்படி தேவ பெலத்தோடு கட்டாயம் ஜீவியுங்கள். அந்த கிறிஸ்தவ பத்திரிக்கைகளுக்கான சந்தாவை ஆண்டுதோறும் ஒழுங்காக செலுத்துங்கள். அவைகளை ஒருக்காலும் இலவசமாக வாங்காதேயுங்கள். மனச்சாட்சியில்லாத பெயர் கிறிஸ்தவ மக்கள் ஒவ்வொரு கிறிஸ்தவ பத்திரிக்கைக்கும் போஸ்ட் கார்ட் எழுதிப்போட்டு கிறிஸ்தவ பத்திரிக்கைகளை வரவழைத்து எத்தனையோ ஆண்டுகள் வரை சந்தா செலுத்தாமல் பத்திரிக்கையை இலவசமாகப் பெற்றுவிடுவார்கள். ''உணர்வில்லாதவர்களாய் சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி தங்களை காம விகாரத்திற்கு அவர்கள் ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாக கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை'' (எபேசியர் 4 : 19, 20) ''நீ நல்மனச்சாட்சியுடையவனாயிரு''(1தீமோ 1:18)

இமயமலை கிராமங்களில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்.

''மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்துக்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்'' (ஏசாயா 55 : 10)

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்குத் துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஆமென். அன்பின் தேவன் ஒரு ஆத்துமாவைத் தமக்கென்று பிடிக்கச் சித்தம் கொள்ளும் போது அவர் கையாளும் வழிகள் மனுப் புத்திக்கு எட்டாதவிதத்தில் இருக்கும் என்பதை நாம் மறக்கக் கூடாது. சமீபத்தில் நான் வாசித்த ஒரு ஆங்கில கிறிஸ்தவப் பத்திரிக்கையில் இடம் பெற்றிருந்த ஒரு உண்மைச் சாட்சி அதை நிரூபிப்பதாக இருக்கின்றது. அந்தச் செய்தியை உங்களுடைய ஆசீர்வாதத்திற்காக அப்படியே கீழே தருகின்றேன்:-

காண்டலா என்ற இடம் இந்தியாவின் மாபெரும் பட்டணமான மும்பை நகரத்திலிருந்து சில கில்லோ மீட்டர் தொலைவிலேயே இருக்கின்றது. அது மிகவும் அழகான ஒரு இடம். சில காலத்திற்கு முன்னர் நான் அந்த இடத்திற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அந்த இடத்தில் வசித்து வந்த எனது வைராக்கியமான இந்து நண்பன் ராதாமோகன் என்பவன் தன்னுடைய வீட்டிற்கு வந்து தேநீர்ப்பானம் அருந்திச் செல்லும்படியாக என்னை அழைத்திருந்தான். அவனுடைய வீட்டில் நான் மிகவும் விந்தையான ஒரு காரியத்தைக் கவனித்தேன். அவனுடைய வீட்டின் நான்கு சுவர்களும் வித விதமான இந்துக் கடவுளர்கள், இந்து தேவியர்களின் படங்களால் நிறைந்திருந்தன. அந்தப் படங்கள் ஒவ்வொன்றையும் நான் கவனமாகப் பார்த்து வருகையில் அந்தப் படங்களின் நடுவே எந்த ஒரு கடவுளின் படம் இல்லாத ஒரு சதுரமான காலிச் சட்டம் அழகான வண்ணங்கள் பூசப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் காலிச் சட்டத்தின் கீழாக **''அறியப்படாத தேவனுக்கு''** (The Unknown God) என்று எழுதப்பட்டிருந்ததை நான் மிகுந்த ஆச்சரியத்துடன் கண்டு எனது

நண்பனிடம் அது குறித்துக் கேட்டேன். அவனுடைய பதில் இந்தவிதமாக இருந்தது ''எனக்கு இதுவரை தெரிந்த அளவில் என் அறிவுக்கு எட்டிய எல்லாத் தேவர்கள், தேவதைகளின் படங்களையும் கண்ணாடிச் சட்டங்களில் போட்டு தொங்கவிட்டு விட்டேன். ஒருக்கால் எனக்குத் தெரியாத உண்மையான மெய் தெய்வம் ஏதாவது ஒன்று இருந்துவிடுமானால் அதையும் நாம் விட்டுவிடக்கூடாது, அந்தக் கடவுளின் கோபத்தை நாம் விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காக அந்த தெய்வத்திற்காக அந்தச் சட்டத்தைக் காலியாகவே நான் வைத்திருக்கின்றேன்'' என்று என்னிடம் கூறினான். நான் அவனுக்கு எந்த ஒரு பதிலும் சொல்லாமல் எனது வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வாரம் சென்ற பின்னர் நான் மும்பை பட்டணத்தைவிட்டு ஒரேயடியாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்லுவதற்கு முன்னர் மேற்கண்ட எனது இந்து நண்பனை திரும்பவும் ஒரு தடவைப் பார்த்துவிட வேண்டுமென்று காண்டலாவிற்குச் சென்றேன். அவனுடைய வீட்டிற்குச் சென்றதும் நான் அவனை எனது புன்னகையால் வாழ்த்தினேன். நான் எனது நண்பனின் முகத்தைப் பார்த்த போது அந்த முகம் தேவப் பிரசன்னத்தின் ஒளியால் பிரகாசிப்பதை நான் கண்டு ஆச்சரியமடைந்தேன். அவன் என்னைக் கண்டதும் ஓடோடி வந்து என்னைக் கட்டிப் பிடித்துத் தழுவிக் கொண்டான். நான் அவனுடைய வீட்டின் சுவரைப் பார்த்தேன். ஏராளம் ஏராளமாகக் கிடந்த அந்த இந்து தேவர்கள், தேவியர்களின் படங்கள் எல்லாம் அங்கிருந்து விடைபெற்றிருப்பதை நான் கண்டு ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தேன். ராதாமோகன் எத்தனை வைராக்கியமான இந்து பக்தன், எப்படி அந்தப் படங்களை எல்லாம் தனது வீட்டிலிருந்து அப்புறப்படுத்தினான் என்பதைக் குறித்து நான் என் உள்ளத்திற்குள்ளாக ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில் அவனே நடந்த சம்பவத்தை என்னிடம் விளக்க ஆரம்பித்தான்.

''நீங்கள் என் வீட்டிற்கு வந்து என்னைப் பார்த்துவிட்டுச் சென்ற சில தினங்களுக்குள் நான் மாமகிமையான சொப்பனம் ஒன்று கண்டேன். நான் கண்ட அந்தச் சொப்பனத்தில் நான் எனது வீட்டு நான்கு சுவர்களில் தொங்க வைத்திருந்த அநேக இந்து தேவர்கள், தேவியர்களின் படங்களைப் பார்த்துக் கொண்டு வரும் வேளையில் அந்தப் படங்களின் ஊடாக நான் தொங்கவிட்டிருந்த அந்த அழகான காலிச் சட்டத்தை நான் பார்த்தபோது அது காலியாக இல்லாமல் ஏதோ ஒரு படம் அதினுள் இருப்பதை நான்

ஆச்சரியத்துடன் கண்டு நாம் அதைக் காலியாகத்தானே வைத்திருந்தோம், ஆனால் இப்பொழுது அது ஒரு படத்துடன் தொங்குகின்றதே என்று நான் கவனிக்கையில் ஆணி பாய்ந்த இரண்டு இரத்தம் வடிந்த கரங்கள் அங்கே இருப்பதைக் கண்டு நான் என் இருதயத்தில் பளிச்சென்று மினனல் பாய்ந்தவண்ணமான ஒரு ஆச்சரிய அதிர்ச்சியுடன் அந்தக் கரங்கள் யாருடைய கரங்கள் என்று நான் சிந்தித்த அடுத்த கணமே மனுக்குலத்தின் பாவத்துக்காக சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தி மரித்த கர்த்தராகிய இயேசு இரட்சகரின் கரங்களைத் தவிர வேறு எவரின் கரங்களும் அல்ல. அந்த இயேசு இரட்சகர் ஒருவரே எல்லாத் தேவர்களுக்கும் பெரியவர், அவர் ஒருவர் மாத்திரமே உலகின் மெய்யான ஜீவனுள்ள தேவன் என்று நான் நிச்சயித்து கண் விழித்தேன்.

கண் விழித்த உடன்தானே நான் என் முழங்கால்களில் விழுந்து என்னைத் தாழ்த்தி ஆண்டவராகிய இயேசு இரட்சகருக்கு என்னை முற்றுமாக ஒப்புவித்து அவரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அந்த நிமிஷமே என் உள்ளத்தில் சொல்லி முடியாத தேவ சமாதானம் கரை புரண்டு ஓடத் தொடங்கியது. நான் கர்த்தர் இயேசுவுக்குள் இப்பொழுது ஒரு புது சிருஷ்டியாக அவருடைய சொந்தப் பிள்ளையாக இருக்கின்றேன்'' என்று சொன்னான்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக நான் நேப்பாளத்தில் ஒரு கிறிஸ்தவ சகோதரனைச் சந்தித்தேன். (India Campus Crusade for Christ) என்ற கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் அவர்கள் பணி செய்கின்றார்கள். நேப்பாளியான அவர்கள் எப்படி ஆண்டவர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள் என்று நான் அவர்களின் இரட்சிப்பின் காரியத்தைக் குறித்து அவர்களிடம் கேட்டபோது, தான் வைராக்கியமான இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன் என்றும், தான் மனந்திரும்பி ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும்படியாக எந்த ஒரு தேவ ஊழியனும் தனக்குப் பிரசங்கம் பண்ணவில்லை என்றும், தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் மட்டுமே தன்னைத் தொட்டது என்றும் என்னிடம் சொன்னார்கள். அதின் விபரத்தை நான் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தபோது அவர்களுடைய தலைமை ஆசிரியருக்கு யாரோ ஒருவர் தலைமை ஆசிரியரின் பெயர் போடாமல் அவர்களுடைய பள்ளிக்கூட முகவரிக்கு கொஞ்சம் கிறிஸ்தவ கைப்பிரதிகளை தபாலில் அனுப்பி வைத்திருந்ததாகவும், அந்தக் கைப்பிரதிகளை

வாசித்தபோது ஆண்டவருடைய ஜீவனுள்ள வார்த்தைகள் தன்னைத் தொட்டதாகவும், அந்த வார்த்தைகளை எந்த ஒரு நிலையிலும் தன்னைவிட்டு அப்பால் விலக்கி வைக்க முடியவில்லை என்றும் கர்த்தர் இயேசுவை அவர்கள் தனது ஆத்தும மணவாளனாக ஏற்று அவருடைய அடிமையாக மாறும் வரை ஆண்டவருடைய வார்த்தைகள் தன் உள்ளத்தில் தொனித்துக் கொண்டே இருந்ததாகவும் என்னிடம் சொன்னார்கள். கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட தேவ வசனத்தில் கண்டபடி ''அது வெறுமையாகத் திரும்பாமல் தேவன் விரும்புகிற இரட்சிப்பின் காரியத்தை மனுமக்களிடத்தில் நிறைவேற்றித் திரும்பும்''. அந்த மாமகத்தான விசுவாச நம்பிக்கையில்தான் தேவனுடைய வார்த்தைகளை நாங்கள் சுமந்து கொண்டு ஒவ்வொரு ஆண்டும் வடக்கே இமயமலைகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த 2004 ஆம் ஆண்டு தேவ ஊழியத்தின் போது நாங்கள் ஒரு நாள் எங்கள் தேவ ஊழியத்தை முடித்துவிட்டு எங்கள் நண்பகல் ஆகாரத்தை மிகவும் கால தாமதமாகப் புசித்துவிட்டு ஒரு உயர்ந்த மலை உச்சியில் எங்கள் வாகனங்களை சற்று நேரம் நிறுத்திவிட்டு கண்கொள்ளாக் காட்சியோடு ஜொலிக்கும் சமவெளிப் பிரதேசங்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தச் சமயத்தில் எங்களுக்கு அருகாமையிலிருந்த ஒரு வீட்டிற்கு முன்னர் நாங்கள் அந்த நாளில் கொடுத்திருந்த சில தேவனுடைய பிரசுரங்களை யாரோ ஒருவர் கிழித்து வீசியிருப்பதை நாங்கள் மிகுந்த துக்கத்துடன் கவனித்தோம். அதைக் குறித்து நாங்கள் விசனப்படுவதை கவனித்த நமது பாஸ்டர் சகோதரன் என்.சாமுவேல் அவர்கள் ''அந்தக் காரியத்தைக் குறித்து நாம் விசனமடையத் தேவையில்லை. இப்படிச் செய்யும் மக்களைத்தான் ஆண்டவர் தம்முடைய அடிமைகளாக மாற்றுவார். அவர்கள்தான் அவருக்குப் பயனுள்ள பாத்திரங்களாகப் பின் நாட்களில் விளங்குவார்கள்'' என்றார்கள்.

ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் ஒரு தேவ ஊழியர் தேவனுடைய பிரசுரங்களை ரயில் பிரயாணிகளுக்குக் கொடுத்துக்கொண்டு வந்தார். எல்லாரும் அவைகளை அன்பாகப் பெற்றுக் கொண்டனர். ஆனால், அதை வாங்கிய ஒரு மனிதன் அதை அப்படியே வெளியே தூக்கி வீசி எறிந்துவிட்டான். வீசி எறியப்பட்ட அந்த சுவிசேஷப் பிரசுரம் வெளியே ரயில் தண்டவாளத்துக்கு அருகில் அப்படியே கிடந்தது. எத்தனை நாட்கள் அது அங்கு கிடந்ததோ நாம் அறியோம். ஒரு நாள் ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் வெறுப்புற்று தனது உயிரை ரயிலின் முன்னர் விழுந்து மாய்த்துக்

கொள்ளுவதற்காக அங்கே வந்தான். விரைந்து வரும் ரயிலுக்காக காத்திருந்த நேரம் அவனது கண்களிலே அந்த தேவனுடைய பிரதி தெரிந்தது. அதை எடுத்து அவன் வாசித்த போது அதில் எழுதப்பட்டிருந்த கர்த்தருடைய வார்த்தைகள் அவனோடு பேசியது. அவனால் தற்கொலை செய்ய முடியவில்லை. அவனுடைய உயிரைப் போக்கக்கூடிய ரயிலும் கடந்து போய்விட்டது. அந்த இடத்திலேயே அவன் ஆண்டவர் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தனது தற்கொலை எண்ணத்தை முற்றுமாகக் கைவிட்ட நிலையில், இருதயம் நிறைந்த தேவ சமாதானத்தோடு தனது வீட்டுக்குத் திரும்பினான். ரயிலிலிருந்து அந்தக் கைப்பிரதியை அந்த மனிதன் கோபத்தில் வீசி எறிந்ததின் காரணமாக ஒரு மனிதனின் உயிரும், அவனது விலையேறப்பெற்ற ஆத்துமாவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டது. கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

தேவனுடைய சுவிசேஷப் பிரசுரங்களின் மாட்சி குறித்து எத்தனை எத்தனையோ மெய்சிலிர்க்கக் கூடிய உண்மைச் சம்பவங்கள் உள்ளன. காரணம், தேவனுடைய வார்த்தைகள் ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரேயர் 4:12) 1987 ஆம் ஆண்டு நேப்பாள தேசத்திற்கு நான் தேவ ஊழியத்தின் பாதையில் சென்றிருந்தபோது ஒரு நேப்பாள ஸ்திரீக்கு ஒரு தேவனுடைய பிரதியைக் கொடுத்தேன். அவள் அதை என்னிடமிருந்து வாங்க மிகவும் தயக்கம் காண்பித்தாள். நான் அதின் காரணத்தை அவளிடம் கேட்டபோது அதை வாசித்தால் அது உள்ளத்தை விட்டு அகலாமல் அப்படியே என்னைப் பிடித்துக் கொள்ளும் என்று மக்கள் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன் என்று சொன்னாள். நான் அவளுக்குப் பிரதியுத்தரமாக மெய்தான், அதை வாசித்தால் உலகம் தரக் கூடாத மெய்யான சமாதானம் உள்ளத்தை விட்டுவிலகாமல் அப்படியே நிலைத்திருக்கும் என்றேன். உடனே அவள் அதை வாங்கி வாசிக்க ஆரம்பித்தாள்.

புத்தர்களின் கடவுள் அவதாரமான தலாய் லாமா தனது மக்கள் எவரும் கிறிஸ்தவர்கள் கொடுக்கும் பிரசுரங்களை வாங்கி வாசிக்கக் கூடாது என்று திட்டமாக உத்தரவிட்டிருக்கின்றார். அதைக் கையினால் தொடக்கூடாது என்று கூட கட்டளையிட்டிருக்கின்றார் என்றால் ஆச்சரியமாக விருக்கின்றதல்லவா? உண்மைதான், அது எனது சொந்த அனுபவமாக

இருக்கின்றது. மேற்கு தீபெத்தில் உள்ள புத்த மக்கள் நான் கொடுத்த தேவனுடைய பிரசுரங்களை வாங்க மறுத்ததால் அந்த மக்கள் வரும் வழியில் நான் அவைகளை வைத்துவிட்டு தூரத்தில் மறைந்திருந்து பார்ப்பேன். அவர்கள் அவைகளை எடுத்துச் சென்று வாசிப்பதை நான் கவனித்திருக்கின்றேன். நாம் நேரில் கொடுத்தால் அவைகளை அவர்கள் வாங்குவதில்லை. புத்தமதக் குழந்தைகள் கூட நாம் கொடுக்கும் தேவனுடைய வார்த்தைகளை வாங்க மறுத்துவிடுவார்கள். உண்மைதான் அந்த வார்த்தைகளில் ஜீவன் இருக்கின்றது. அது பாவ மனிதனை பரிசுத்தனாக மாற்றக்கூடியது என்பதை தந்திர சாத்தான் நன்கறிந்து வைத்திருக்கின்றான். அகையால்தான், எப்படியாவது தேவனுடைய வார்த்தைகளை மக்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று நாங்கள் எங்களை அர்ப்பணித்து இந்த பரிசுத்த ஊழியங்களில் எங்களை ஈடுபடுத்தி வருகின்றோம்.

டார்ச்சுலாவுக்கும், கட்டியாபகட்டுக்கும் இடையில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

நாங்கள் எங்கள் வாகனங்களில் சுமார் 100 கில்லோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்து பித்தோர்கார்ட் என்ற இடத்திலிருந்து டார்ச்சுலா வந்து சேர்ந்தோம். காலி என்ற ஒரு பெரிய நதி பேரிரைச்சல் போட்டுக் கொண்டு கருமையான நிறத்தில் இந்த இடத்தில் ஓடுகின்றது. நேப்பாளத்தையும், நமது இந்திய தேசத்தையும் இந்த காலி நதி பிரிக்கின்றது. நதிக்கு அப்பால் நேப்பாளமும், இந்தப் பக்கத்தில் இந்தியாவும் உள்ளது. இந்த நதியின் குறுக்காக ஒரு பெரிய தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு தேச மக்களும் பகற்காலங்களில் அங்குமிங்குமாக இந்த தொங்கு பாலத்தின் வழியாக சர்வ சாதாரணமாக போய் வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மாலை 5 : 45 மணி ஆனதும் இந்திய மற்றும் நேப்பாள பக்கங்களிலுள்ள கதவுகள் ஒரே நேரத்தில் அடைக்கப்பட்டுவிடுகின்றது. அந்தக் காட்சியைக் காணவே நான் ஒரு நாள் அந்தப் பாலத்தின் அருகில் போய் நின்றேன். அதிலும் அன்பின் ஆண்டவர் நான் உங்களுக்கு எழுதும்படியான ஒரு நல்ல சம்பவத்தைத் தந்தார். அந்தக் காரியத்தை நான் நமது தேவ எக்காளத்தின் அக்டோபர் - டிசம்பர் 2004 ஆம் இதழில் உங்களுக்கு எழுதியிருக்கின்றேன். ஆம், திறவுண்ட வாசல் அடைபடுமுன்னர் நாம் நமது நித்திய வீட்டுக்கான காரியங்களை ஒழுங்குசெய்து நம்மை நன்கு ஆயத்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தடவையும் நாங்கள் டார்ச்சுலாவில் உள்ள அரசாங்க ஓய்வு விடுதியில்தான் தங்கினோம். நாங்கள் எல்லோரும் ஒரே அறையில் படுத்துக் கொள்ளக்கூடிய பெரிய அறை கர்த்தருடைய கிருபையால் எங்களுக்குக் கிடைத்தது. நாங்கள் குளிப்பதற்கு தண்ணீர் வசதிதான் அங்கு கிடைக்கவில்லை. மற்றபடி எங்கள் விடுதிக்கு அருகிலேயே நல்ல சுத்தமான ஆகாரம் அதிகப் பணச்செலவில்லாமல் தேவ தயவால் எங்களுக்குக் கிடைத்தது. நல்ல பண்பான குணமுடைய ஒரு கணவனும், மனைவியும் அந்தச் சாப்பாட்டுக் கடையை நடத்துகின்றார்கள். நாங்கள் கொண்டு சென்றிருந்த தேவனுடைய பிரசுரங்களை அந்த அன்பான மக்களுக்குக் கொடுக்க மறக்கவில்லை.

நாங்கள் டார்ச்சுலாவிலிருந்து ஒரு நாள் காலை மிகுந்த ஜெபத்தோடு 32 கில்லோ மீட்டர் தொலைவிலுள்ள கட்டியாபகட் என்ற இடத்திற்குச் சென்றோம். நாங்கள் டார்ச்சுலா பட்டணத்தைக் கடந்ததும் ''கைலாசம், மான்சரோவர் வரும் யாத்ரீகர்களை நாங்கள் வரவேற்கின்றோம்'' என்ற பெரிய வரவேற்பு வளையம் எங்களுக்கு முன்னாலிருப்பதைப் பார்த்தோம். எத்தனையோ லட்சாதி லட்சம் இந்து மக்கள் தொன்று தொட்டு கைலாசத்திலுள்ள தங்கள் கடவுளைக் காண இந்தப் பாதையின் வழியாகத்தான் சென்று கொண்டிருக்கின்றனர். நம்முடைய பரிசுத்த மகாத்துமாவான சாது சுந்தர்சிங் அவர்களும் இந்தப் பாதை வழியாகத்தான் சில தடவைகள் கால் நடையாகக் கைலாச பர்வதம் சென்றிருக்கின்றார். அங்குள்ள கைலாச மகரிஷியை சந்தித்திருக்கின்றார். அந்தப் பாதை வழியாக நாங்களும் எங்கள் வாகனங்களும் கொஞ்ச கில்லோ மீட்டர் தூரம் செல்லக் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். கர்த்தருக்குத் துதி செலுத்துகின்றோம். அந்தக் கைலாச மலைப் பாதையின் வழியாகச் சென்று திரும்பி வராத இந்து மக்கள் எத்தனையோ ஆயிரங்கள் உண்டு. மக்கள் தங்கள் கடவுளைக் காண்பதற்காக எத்தனை பாடுகள், இரத்தத்தை உறைய வைக்கும் கடுங்குளிர்களின் ஊடே கடந்து செல்லுகின்றனர். அநேகர் வழியில் மாண்டு போகின்றனர். ஒரு இந்து யாத்ரீகன் அந்த கைலாச மலைகளிலுள்ள கடவுளைத் தரிசித்துவிட்டு திரும்பி வர வர பின்னிட்டுத் திரும்பித் திரும்பி ''கடவுளே நான் உம்மை விட்டுப் போகின்றேனே, நான் உம்மை என் பாவக்கண்களால் எப்பொழுது காண்பேன்'' என்று சொல்லி அந்தக் கைலாச மலைக்காட்சி மறையும் வரை கண்ணீர்விட்டுக் கதறி அழுது கொண்டும், புலம்பிக் கொண்டும் வந்ததாக நான் ஒரு புத்தகத்தில் வாசித்தேன். என்ன துயரமான நிலை பாருங்கள்!

ஆ, கிறிஸ்தவ மக்கள் குறிப்பாக ஆண்டவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருடைய அன்பில் ஜீவிக்கும் மக்கள் எத்தனை பாக்கியசாலிகள்! காரணம், அவர்களுடைய ஆண்டவர்

எப்பொழுதும் அவர்கள் அருகிலேயே இருக்கின்றார். அந்த ஆண்டவரைக் காண்பதற்காக அவர்கள் எந்த ஒரு இடத்திற்கும் தேடிக்கொண்டு செல்ல வேண்டியதில்லை. அந்த மக்களின் இருதயங்களிலே அந்த தேவன் சதா காலமும் வாசம்பண்ணிக் கொண்டேயிருக்கின்றார் (ஏசாயா 57 : 15) பிரயோஜனமாயிருக்கிறதை அவர்களுக்குப் போதித்து அவர்கள் நடக்க வேண்டிய வழியைக் காண்பித்துக் கொண்டே இருக்கின்றார் (ஏசாயா 48:17) உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் அவர் அவர்களுடனே கூட இருக்கின்றார் (மத் 28 : 20) அவர் அந்த மக்களைவிட்டு விலகுவதுமில்லை, அவர்களைக் கைவிடுவதுமில்லை (யோசுவா 1 : 5) தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் (சங் 23 : 4) என்று சங்கீதக்காரர் களிகூருகின்றார். ''நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிற போதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதைப்போல தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? (உபா 4 : 7) என்று கர்த்தருடைய வார்த்தை கூறகின்றது.

நாங்கள் டார்ச்சுலாவிலிருந்து 19 கில்லோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்து தவாகாட் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். இந்த 19 கில்லோ மீட்டர் பயணப் பாதையும் அத்தனை எளிதான பாதுகாப்பான பாதை அல்ல.

ஒரு பக்கம் ரஸ்தாவை ஒட்டி வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் கருமையான மலை. அந்த மலையிலிருந்து எப்பொழுதும் நீர் கசிந்து சொட்டிக் கொண்டே இருக்கின்றது. ஓரிரு இடங்களில் மலையிலிருந்து ஒரு குற்றாலம் அருவியே நடு ரஸ்தாவில் நீரைக் கொட்டிக் கொண்டிருக்கின்றது. அடுத்த பக்கத்தில் காலி நதி பேரிரைச்சல் போட்டு ஓடிக்கொண்டிருக்கின்றது. வாகனத்தை மிகவும் எச்சரிக்கையாக ஓட்ட வேண்டும். சற்று கவனக் குறைவாக ஓட்டினால் வாகனம் கெடு பள்ளம் போய் நதியில் முழ்கிவிடும். தவாகாட் என்ற

இடத்திலிருந்து இடது பக்கமான வழி கைலாச மலைகளுக்குத் தனியாகச் செல்லுகின்றது. நாங்கள் இந்த இடத்தில் எங்கள் வாகனத்தை நிறுத்தி தவாகாட்டிலுள்ள சின்னஞ்சிறு கடைவீதியில் நின்று கொண்டிருந்த சில மக்களுக்கு தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்துவிட்டு மற்றொரு வழியாக கட்டியாபகட் என்ற இடத்திற்குச் சென்றோம். வழியில் நாங்கள் சந்தித்த மக்களுக்கெல்லாம் எங்கள் வாகனங்களை நிறுத்தி கர்த்தருடைய பிரதிகளைக் கொடுத்துக் கொண்டே சென்றோம். ஓரிடத்தில் கொஞ்சம் மக்கள் நின்று கொண்டிருப்பதை நாங்கள் தூரத்திலேயே கவனித்தோம். அவர்களண்டை வந்ததும் நாங்கள் எங்கள் வாகனத்தை நிறுத்தி அவர்களுக்கும் பிரதிகளைக் கொடுக்க நாங்கள் இறங்கியபோது அவர்கள் எல்லாரும் எங்களைக் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் என்று நினைத்து பயந்து ஓட்டம் பிடித்தனர். அவர்களுக்கும் எப்படியாவது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஆவலில் நமது சகோதரன் ஜெபராஜ் அவர்கள் அந்த மக்களுக்குப் பின்னால் ஓடினார்கள். அதற்குள்ளாக அவர்களில் ஒருவன்

பயந்து செங்குத்தாக பள்ளத்தாக்கினுள் பாய்ந்து அங்குள்ள மலைப் பாறையில் வளர்ந்திருந்த ஒரு புதிரான புற்களைப் பிடித்துக் கொண்டு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்திருக்கின்றான். கீழே காலி நதி பாதாளத்தில் ஓடிக்கொண்டிருந்திருக்கின்றது. அவனுடன் ஓடினவர்கள் எல்லாரும் பயம் தெளிந்து நிற்கவே அவர்களுக்கு சுவிசேஷப் பிரதிகளைக் கொடுத்துவிட்டு வந்திருக்கின்றார்கள். அந்த மலை நாட்டுக்கென்றே பிறந்த அந்த மக்கள் எந்த ஒரு அந்தரத்தில் தொங்கினாலும் எந்த ஒரு பங்கமின்றி பாறைகளில் மானைப்போலக் குதித்து தப்பிவிடுவார்கள் என்று பின்னர் நாங்கள் கேள்விப்பட்டோம்.

நாங்கள் எங்கள் பிரயாணத்தை தொடர்ந்து சென்றபோது ஓரிடத்தில் ஒரு சிறு கூட்டம் மக்கள் காலி நதிக்கரையில் அமர்ந்து ஏதோ செய்து கொண்டிருந்தனர். அந்த மக்கள் அந்த நதியை அந்த இடத்தில் இறும்புக்

கம்பிகளைக் குறுக்காகக் கட்டி அதைக் கடப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தனர். டார்ச்சுலா பட்டணத்தில் ஒரு மாபெரும் நதியாக பேரிரைச்சல் போட்டுக்கொண்டு ஓடும் காலி நதி இந்த இடத்தில் ஒரு சிறு நதியாக பாறைகளுக்குள் ஒடுங்கி ஓடுவதை ஆச்சரியத்துடன் நாங்கள் கவனித்தோம். தென் நாட்டின் காவிரி நதி ஓரிடத்தில் ''ஆடு தாண்டும் காவிரி'' யாக ஓடுவதைப் போன்று அந்த நதி அந்த இடத்தில் அவ்விதமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த இடத்தில் அந்த நதியைக் கடப்பதற்காக காத்து உட்கார்ந்து கொண்டிருந்த மக்களுக்கு கர்த்தருடைய

வார்த்தைகளை ஜெபத்துடன் கொடுத்தோம். அந்த மக்கள் அவைகளை ஆவலோடு வாசிப்பதையும், இறும்பு வடத்தின் உதவியால் ஒரு மனிதன் நதியின் குறுக்காகக் கடந்து வருவதையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். அவர்கள் கடப்பதுடன் தங்களுடன் கனமான பொருட்களையும் கடத்திக் கொண்டு சென்றுவிடுகின்றனர். பெண்கள் கூட அந்தவிதமாக கடந்து செல்ல தங்கள் உடைகளை மடித்துக்கட்டி ஆயத்தப்படுவதை நாங்கள் கவனித்தோம். அங்குள்ள மக்களின் வாழ்க்கை மிகவும் கடினமானதாகும். அந்த மலை நாட்டு வாழ்வுக்கு ஏற்றபடி ஆண்டவர் அவர்களுடைய உடலையும், உள்ளத்தையும் நல்ல வலிமையுள்ளதாகப் படைத்திருக்கின்றார்.

நாங்கள் அங்கிருந்து தோபட், ஈலாகாட், தீன்தோலா, கஸ்க், பாங்க்லா, மாங்தி போன்ற எங்கள் பாதையில் எதிர்ப்பட்ட சிறிதும் பெரிதுமான இமயமலை கிராமங்களில் எங்கள் வாகனங்களை நிறுத்தி அங்குள்ள மக்களுக்கெல்லாம் ஆண்டவருடைய பிரசுரங்களைக் கொடுத்தோம். அப்படி ஒரு கிராமத்தில் நாங்கள் கொடுத்துக் கொண்டிருந்தபோது ரஸ்தாவுக்கு மேலாகவிருந்து ஒரு வாலிபன் எங்களை அசுத்தமான வார்த்தைகளால்



திட்டிக் கொண்டிருந்தான். அந்தவிதமாக அசுத்தமான வார்த்தைகளைப் பேசும் மனிதர்களையே தேவன் ஒரு நாள் தமது மகிமையின் சுவிசேஷத்தை அறிவிக்கும் அடியார்களாக மாற்றுவார் என்ற மகிழ்ச்சியோடு எங்களைத் தேற்றிக்கொண்டு அங்கிருந்து கடந்து சென்றோம்.

நாங்கள் அதற்கப்பால் சென்ற மலைப் பாதை மிகவும் கரடு முரடானதாகவும் சில இடங்களில் எங்கள் வாகனத்தின் நான்கு டயர்கள் மாத்திரமே தொட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு மிகவும் குறுகலானதாகவும் இருந்தது. அந்தக் குறுகலான செங்குத்தான ரஸ்தாவில் கூட அந்த இடத்திலுள்ள மலைவாழ் மக்கள் தங்கள் நிலங்களில் விளைந்த தானியக் கதிர்களை உலர வைத்திருந்தனர். அவைகளின் மேல் வாகனங்கள் ஏறிச் செல்லும்போது வாகனத்தை ஓட்டுவோர் ஏமாந்து ரஸ்தா விரிவாக இருக்கின்றது என்று ஓட்டினால் கெடு பாதாளத்திற்கு வாகனம் போய்விடும். அங்கிருந்து கீழே பார்த்தால் கெடு பாதாளத்தில் ஓடும் காலி நதி ஒரு வெண்மை நூல் போலத் தெரிகின்றது. அந்த வழியின் பயங்கரங்களை அவைகளை நேரில் கண்டு வந்தவர்களுக்கேயன்றி வேறு எவருக்கும் தெரியாது. அவைகளை வார்த்தைகளால் வர்ணிப்பதும் அத்தனை எளிதல்ல. அன்பின் ஆண்டவர் அந்த இடங்களில் எல்லாம் எங்களைக் கண்ணின் மணி போலப் பாதுகாத்துக் கொண்டார். நாங்கள் சென்ற மிகவும் கரடு முரடான அந்த இடத்தின் பாதை ஒன்றை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

நாங்கள்கடைசியாக கட்டியாபகட் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அது ஒரு கடைகோடியான இடமாகும். அதை ஒரு கிராமம் என்று அழைப்பதற்கில்லை. மலை உச்சிப் பகுதியில் ஏழை மக்களின் சில

குடிசைகளை நாங்கள் கண்டோம். அதை நீங்கள் காணலாம். இந்த கட்டியாபகட் என்ற இடத்திலிருந்து தீபெத்திற்கு அரிசி, கோதுமை, உப்பு, தீப்பெட்டி போன்ற பல்வேறு பொருட்கள் கோவேறு கழுதைகள் மூலமாகக்

கொண்டு செல்லப்படுகின்றது. இந்த இடத்தோடு மலை ரஸ்தா முற்றுப் பெற்று இங்கிருந்து வானத்தை அளாவி நிற்கும் செங்குத்தான மலை உச்சி வழியாக தீபெத் செல்லும் கால் நடை வழித்தடம் உள்ளது. இந்த இடத்தில் சில கூடாரங்கள் போடப்பட்டு அதிலே கோவேறு கழுதைகள் கொண்டு செல்லுவதற்கான மூட்டைகள் மற்றும் பொருட்கள்வைக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் நிறைய கோவேறு கழுதைகள் நிற்பதையும், அவைகளின் சாணங்களால் அந்த இடத்தில் நாற்றம் வீசுவதையும் நாம் காணலாம். அந்த இடத்திலுள்ள கூடாரங்களில் இருந்த மக்களுக்கும் குதிரைக்காரர்களுக்கும் நாங்கள் தேவனுடைய பிரசுரங்களை ஜெபத்துடன் கொடுத்தோம். அங்கிருந்த ஒரு டீ கடையில் நாங்கள் டீ குடித்துவிட்டு அந்தக் கடைக்காரப் பையனுக்கும் சுவிசேஷம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டோம். கட்டியாபகட் என்ற இடத்திலுள்ள டீ கடையில் நாங்கள் அமர்ந்து அந்த இடம் வரை சென்றதன் ஞாபகார்த்தமாக ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அதை நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம். அந்த இடத்திற்கு நாங்கள் இனி எங்கள் வாழ்நாட் காலத்தில் செல்லக்கூடுமா என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கும்போது எங்கள் கண்களில் கண்ணீர் துளிர்க்கின்றது.

மத்கோட் செல்லும் மார்க்கத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

ஒரு நாள் காலையில் நாங்கள் எங்கள் வாகனங்களில் தேவனுடைய பிரசுரங்களை ஏற்றிக் கொண்டு டார்ச்சுலாவிலிருந்து ஜெபத்தோடு பயணமானோம். நாங்கள் 27 கில்லோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்து ஜல்ஜீபி என்ற ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தோம். இது ஒரு பெரிய கடை வீதியைக் கொண்ட ஒரு பெரிய கிராமமாகும். இந்த இடத்தில் நாங்கள் கடந்த தடவை வந்து தேவ ஊழியம் செய்திருக்கின்றோம். இந்த ஜல்ஜீபி என்ற இடத்திலிருந்து மத்கோட் என்ற இடம் 40 கில்லோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த இடத்திற்கு நாங்கள் முனிசியாரி என்ற இடத்திலிருந்து செங்குத்தாக கீழே எங்கள் வாகனங்களில் வந்து கடந்த நாட்களில் நல்லதொரு தேவ ஊழியம் செய்திருக்கின்றோம். அதைக் குறித்த விபரங்களை தேவ எக்காளத்தில் நான் எழுதியும் இருக்கின்றேன். கர்த்தருக்கே மகிமை. இந்த தடவை நாங்கள் மத்கோட்டிற்கும் ஜல்ஜீபி என்ற இடத்திற்கும் இடையிலுள்ள மலைக் கிராமங்கள் பலவற்றில் சுவிசேஷ ஊழியம் செய்ய கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். 33 கி.மீ. தூர எங்கள் பிரயாணப்பாதையில் இந்த ஊழியங்கள் நடைபெற்றன.

ஜல்ஜீபி என்ற இடத்தைக் கடந்ததும் எங்கள் வாகனங்கள் இரண்டும் இருண்ட கானகங்களின் வழியாகச் சென்றன. எங்கும் கரிய நிறமான அடர்ந்த காடுகள் பின்னிப் பிணைந்து கிடப்பதை நாங்கள் கண்டோம். ரஸ்தாவின் இருபுறங்களிலும் தண்ணீரைச் சொட்டிக்கொண்டிருக்கும் பெரும் மரங்கள், புதர்கள், நொய்........... என்ற நீண்ட ஒலியை விட்டு விட்டு எழுப்பிக் கொண்டிருக்கும் அடர்ந்த கானகத்துக்கே உரித்தான வண்டுகளின் சத்தம் எல்லாம் நமக்குச் சற்று அச்சமாகவே இருக்கின்றது. மழைக்காடுகள் (Rain Forest) என்று அழைக்கப்படும் கரிய கானகங்கள் அவையாக இருக்கலாம். அந்த இடங்களில் செங்குத்தான மலை உச்சிகளிலிருந்து விழும் நீர் அருவிகளைப் பார்க்கும் போது அவைகள் வானத்திலிருந்து தண்ணீரைக் கொட்டுவதைப் போலவிருக்கின்றது. அந்த அருவிகளை நீங்களும் காணவேண்டும் என்பதற்காக 2 அருவிகளைப் படம் எடுத்து வந்தேன். அதில் ஒன்றின் படம் தெளிவாக இல்லாததினால் ஒன்றை மட்டும் வெளியிடுகின்றேன்.

சாத்தானின் கிராமம் (சைத்தான் கா பஸ்தி)

அந்தக் கானகங்களை நாங்கள் ஆச்சரியத்தோடும் அதே சமயம் சற்று பயத்தோடும் பார்த்து வருகையில் எங்கள் வாகன ஓட்டுனர் சகோதரன் தாப்பா அவர்கள் ''சாத்தானின் கிராமம் ஒன்று இங்குதான் இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்ற ஆச்சரிய செய்தியை எங்களுக்கு முன்னர் வைத்தார்கள். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. நாங்கள் அவர்களிடம் அது குறித்து விளக்கமாகக் கேட்டபோது ''சாத்தான் வாழ்கின்ற கிராமம் ஒன்று இங்குண்டு. மக்கள் அதைத் திட்டமாகச் சொல்லுகின்றார்கள்'' என்று சொன்னார்கள். அவனுடைய கிராமம் எப்படி இருக்கின்றது என்று நாங்கள் அவர்களைக் கேட்டோம். ''நமது கண்களுக்குத் தெரியும்படியான வீடுகள்

அங்கு இல்லாத போதினும், அவனுடைய கிராமம் அதுவேதான் என்பதை நாம் திட்டமும் தெளிவுமாகக் கண்டு கொள்ள வசதியாக அந்த இடத்தில் ஒரு பெரிய காரியம் காணப்படுவதாக மக்கள் சொல்லுகின்றனர், அதாவது, நதிக் கரை ஓரமாகக் காணப்படும் பிரமாண்டமான மலை போன்ற பாறைகள் நாற்புறமும் கொண்டு வந்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்தப் பாறைகள் கெடு பாதாளத்திலுள்ள நதியிலிருந்து எப்படி அந்த மலை உச்சிக்குக் கொண்டு வரப்பட்டன, எப்படி அவைகள் நாற்புறமும் கோட்டை போல ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை எல்லாம் பார்க்கும்போது மக்கள் அதை சாத்தானின் கிராமம் என்றே திட்டமாகச் சொல்லுகின்றார்கள் என்று சொன்னார்கள். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய தாக்குதலுக்கு எதிராக நாம் நம்மைக் காத்துக் கொள்ள இராப் பகலாக நாம் போராடும்போது, நாம் அவனைத் தாக்கி விடுவோம் என்ற பயத்தில் அவனும் தனது கிராமத்தைச் சுற்றி பெரும் பாறைகளை வைத்து பாதுகாப்பாக இருப்பதை நினைத்து வியப்பில் ஆழ்ந்தோம்.

கெட்ட குமாரனின் சரித்திரம் சொல்லப்பட்ட பள்ளிக்கூடம்

நாங்கள் எங்கள் 33 கில்லோ மீட்டர் பயண தூரத்தில் லுந்தி, ஜூலி, பரம், கான்பைரா, பால்மர், பங்காபானி, மாவானி போன்ற கிராமங்களில் எங்கள் வாகனங்களை நிறுத்தி அநேக மக்களுக்கு தேவனுடைய பிரசுரங்களை விநியோகம் செய்யக் கர்த்தர் உதவி செய்தார். நாங்கள் ஓரிடத்தில் அப்படி ரஸ்தாவில் போய்க் கொண்டிருக்கும் போது சற்று ஆழமான பள்ளத்தில் சற்று தொலைவில் ஒரு பள்ளிக்கூடத்தைக் கண்டோம். உடனே அதில் எங்கள் வாகனத்தை நிறுத்தினோம். பாவியாகிய என்னைத் தவிர மற்ற தேவப் பிள்ளைகள் யாவரும் தங்கள் கரங்களில் நிறைய தேவனுடைய பிரசுரங்களை எடுத்துக் கொண்டு கீழே பள்ளிக்கூடத்திற்கு இறங்கி பிள்ளைகளுக்கு அவற்றைக் கொடுக்கச் சென்றார்கள். அந்தப் பள்ளிக்குச் சென்று அதின் தலைமை ஆசிரியரிடம் அனுமதி கேட்டபோது அந்த அன்புள்ளம் கொண்ட இந்து தலைமை ஆசிரியர் கிறிஸ்தவ மார்க்கம் சத்திய மார்க்கம் என்றும் அந்த சத்தியத்தை தனது பள்ளிப் பிள்ளைகள் எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னதுடன் தனது மாணவ மாணவியர்களுக்கு கிறிஸ்தவ போதனைகளைக் குறித்து ஏதாவது சொல்ல வேண்டும் என்று நம்முடைய ஊழியர்களைக் கேட்டிருக்கின்றார். சந்தர்ப்பத்தை கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக நன்கு பயன்படுத்திக் கொண்டு நம்முடைய தேவ



ஊழியர் பாஸ்டர் என்.சாமுவேல் அவர்கள் பரிசுத்த வேதாகமத்திலுள்ள கெட்ட குமாரன் சரித்திரத்தை அருமையாகக் கூறி அந்த சரித்திரத்தில் வருகின்ற அன்புள்ள தந்தைதான் இயேசு இரட்சகர் என்றும் அவரிடத்தில் வருகின்ற எந்த ஒரு பாவிக்கும் நிச்சயமான மன்னிப்பும், பரலோகமும் உண்டென்று பேசியிருக்கின்றார்கள். அந்தச் செய்தி அந்தப் பள்ளிப் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கின்றது. பின்னர் அனைவருக்கும் சுவிசேஷப் பிரசுரங்களையும், ஆசிரியர்களுக்கு புதிய ஏற்பாடுகளையும் சேர்த்தக் கொடுத்திருக்கின்றனர். கர்த்தர் அந்தப் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுடன் தம்முடைய

வசனங்களின் மூலமாகத் தொடர்ந்து பேச அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். பள்ளத்தாக்கில் இருந்த அந்தப் பள்ளிக்கூடத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். பள்ளிக்கு மேலாக நின்றுகொண்டிருந்த சிலர் எங்களிடமிருந்து சுவிசேஷம் பெற்று வாசிப்பதையும் படத்தில் பார்க்கலாம்.

நாங்கள் பங்காபானி என்ற இடம் வரைப் போய்த் திரும்பினோம். அன்பின் ஆண்டவர் அன்று எங்களுக்கு நல்லதோர் ஊழியம் தந்தார். அநேக நுற்றுக் கணக்கான மக்கள் எங்களுடைய கரங்களிலிருந்து தேவனுடைய பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். வழித்தடத்திலுள்ள கிராமம் ஒன்றில் நிலைக்கடலை சாகுபடி செய்யப்பட்டு கடலைக்காய்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். அன்று பசியோடிருந்த அன்பின் ஆண்டவருடைய சீடர்கள் கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள் என்று வேதத்தில் நாம் பார்க்கின்றோம் (மத் 12 : 1) அதைப் போல நல்ல பசியோடிருந்த நமது தேவ ஊழியர்களும் கடலையைப் பறித்துச் சாப்பிட்டார்கள். ஆனால், அதற்கான விலைக் கிரயத்தைக் கொடுத்துவிட்டார்கள். அந்த மலை நாட்டில் அந்த இடத்தில் நிலைக்கடலை பயிரிடப்பட்டு அறுவடை செய்வதை அந்த ஓரிடத்தில் மட்டும்தான் எங்களால் காண முடிந்தது. அது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மேல் நிலைப் பள்ளிகளில் கொடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பிரதிகள்

''உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது, உமது காலடிகள்தெரியப்படாமற் போயிற்று'' (சங் 77 : 19) என்ற கர்த்தருடைய வார்த்தையின்படி இந்தத் தடவை அன்பின் ஆண்டவர் நிறைய பள்ளி மாணவ மாணவியர்களுக்கே தம்முடை ஜீவனுள்ள வார்த்தைகளைக் கொடுக்க எங்களை வழிநடத்திக் கொண்டு சென்றார். உத்தராஞ்சல் மாநிலத்தில் இத்தனை ஆண்டு காலம் நாங்கள் மேற்கொண்ட தேவ ஊழியங்களிலும் இந்தத் தடவைதான் நாங்கள் என்றுமில்லாத அளவுக்கு ஆரம்ப பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகளில் அதிகமாக தேவ ஊழியம் செய்ய ஆண்டவர் எங்களை விசேஷித்த பிரகாரம் வழிநடத்திச் சென்றிருக்கின்றார். அதுவே அவருடைய உள்ளத்தின் விருப்பமாக இந்தத் தடவை காணப்பட்டதை நாங்கள் உணருகின்றோம். அந்த காரியத்தை நிறைவேற்ற அவர் எங்களை அழைத்துச் சென்ற விதமும், பள்ளிகளில் அவற்றை விநியோகிக்க எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களும் மிகவும் ஆச்சரியமானவைகளாகும்.

பொதுவாக நாங்கள் தேவ ஊழியத்திற்கு காலையிலேயே புறப்பட்டுவிடுவோம். போகும் பாதையில் யாராவது நடந்து சென்று கொண்டிருந்து எங்கள் வாகனத்தை நிறுத்தும்படியாக கை காண்பித்தால் ஒன்று அல்லது இருவரை நாங்கள் கட்டாயம் எங்களுடன் இலவசமாக ஏற்றிச் செல்லுவோம். பல சந்தர்ப்பங்களிலும் அப்படி நாங்கள் ஏற்றிச் சென்ற நபர்கள் ஆசிரியப் பெரு மக்களாகவே இருந்திருக்கின்றனர். அவர்கள் எங்கள் வாகனத்தை விட்டு இறங்கும்போது சுவிசேஷப் பிரசுரங்களை அவர்களுக்குக் கட்டாயம் கொடுத்துவிடுவோம். நாங்கள் என்ன நோக்கத்தோடு சென்று கொண்டிருக்கின்றோம் என்பதை அவர்கள் அறிந்ததும், தங்கள் பள்ளிகளுக்கு வந்து தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை தங்கள் மாணாக்கர்களுக்கு கொடுக்கும்படியாக அவர்களே எங்களை அழைத்துச் சென்ற இடங்கள் பலவுண்டு. சில பள்ளிகளுக்கு நாங்கள் செல்லுவோம், அங்கே பார்த்தால் நாங்கள் எங்கள் வாகனத்தில் கூட்டிச்சென்ற ஒரு மனிதர் அந்தப் பள்ளியின் ஆசிரியராக இருப்பார். உடனே அவர் எங்களை வரவேற்று பள்ளியின் மாணாக்கர்களுக்கு எங்களுடைய பிரசுரங்களை கொடுக்கும்படியாக எங்களை அன்போடு அழைப்பார்.

ஒரு நாள் காலை நாங்கள் ஜெபத்தோடு பித்தோர்கார்ட் பட்டணத்திலிருந்து 48 கில்லோ மீட்டர் தொலைவிலுள்ள பீப்லி என்ற இடத்திற்குச் சென்றோம். இந்த பீப்லி என்ற இடம் கடையாந்திரமான ஒரு இடமாகும். வழியில் மாத்தோலி மற்றும் சட்டான்தேவ் என்ற இரு கிராமங்களைத் தவிர வேறு எந்த கிராமங்களும் கிடையாது. இந்த இரு

கிராமங்களிலும் நாங்கள் எங்கள் வாகனங்களை நிறுத்தி சுவிசேஷப் பிரதிகளை மக்களுக்குக் கொடுத்துவிட்டு நேராக பீப்லி நோக்கிச் சென்றோம். பாதை சுற்றி சுற்றிப் போய் கடைசியாக அடிவாரத்துக்கு சற்று மேலே முடிவுற்றது. கிராமத்துக்கு கொஞ்ச தூரத்தில் டார்ச்சுலாவிலிருந்து வரும் காலி என்ற பெரிய நதி ஓடுவதை நாம் பார்க்க முடியும். இந்த பீப்லி என்ற இடத்துடன் ரஸ்தா முற்றுப் பெறுகின்றது. நாங்கள் எங்கள் வாகனங்களை ஊருக்கு முகப்பிலுள்ள ஒரு சிறிய மைதானத்தில் நிறுத்திவிட்டு தேவனுடைய பிரசுரங்களை நாங்கள் கையில் எடுத்துக்கொண்டு கீழே இறங்கி பள்ளத்தில் இருந்த பீப்லி கிராமத்தில் வீடு வீடாகச் சென்று அவைகளை ஜெபத்தோடு கொடுத்தோம். ஊருக்கு மேலாக நல்ல செங்குத்து மேட்டில் சோலை மரங்களுக்கு மத்தியில் நல்ல நிழலான இடத்தில் பீப்லி கிராமத்தின் மேல் நிலைப் பள்ளி இருக்கின்றது. அது ஒரு பெரிய மேல் நிலைப் பள்ளியாகும். ஏராளமான மாணவ மாணவிகள் அக்கம் பக்கம் இருக்கும் இடங்களிலிருந்து வந்து படிக்கின்றனர். உத்தராஞ்சல் மாநிலத்தில் மேல் நிலைப் பள்ளிகளை இண்டர் காலேஜ் என்று அழைக்கின்றனர். அதில் வேலை பார்க்கும் ஆசிரியர்களை விரிவுரையாளர்கள் என்று சொல்லுகின்றார்கள். பீப்லியிலுள்ள அந்த மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் நாங்கள் அனுமதி கேட்டு நாங்கள் அந்த மேல் நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கெல்லாம் ஒவ்வொரு வகுப்பாகச் சென்று பாடம் நடந்து கொண்டிருக்கும்போதே பல நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு சுவிசேஷப் பிரதிகளை ஜெபத்துடன் கொடுத்தோம். அந்தப் பள்ளியிலுள்ள எல்லா ஆசிரியர்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை எங்களுக்குக் கொடுத்தனர். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக. அந்தப் பள்ளி மாணவ மாணவியர்கள் நாங்கள் கொடுத்த பிரசுரங்களைப் பெற்றுப் படித்த காட்சி கர்த்தருக்குள் எங்களை களிகூரப் பண்ணும் ஆனந்தக் காட்சியாக இருந்தது. நீங்களும் அந்தக் காட்சிகளைக் காண வேண்டுமென்பதற்காக அதைப் புகைப்படம் எடுத்தால் நாம் அந்த இடத்தில் செய்த அருமையான தேவ ஊழியம் வீணும் வியர்த்தமுமாகப் போய்விடும் அல்லவா? கர்த்தர் அந்த அருமைக் குழந்தைகளோடு தம்முடைய வார்த்தைகளின் மூலமாகப் பேசும்படியாக அவருடைய கிருபைக்கு அவர்களை ஒப்புவித்துவிட்டு நாங்கள் அந்த இடத்திலிருந்து கடந்து வந்தோம். நாங்கள் சென்ற பீப்லி என்ற அழகிய கிராமத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். ஊருக்கு அப்பால் சமவெளியில் ஓடுகின்ற காலி நதியைக் கூட நீங்கள் பார்க்கக் கூடும் என்று நினைக்கின்றேன்.

மற்றொரு நாள் காலை நாங்கள் எங்கள் வாகனங்களில் தேவனுடைய பிரசுரங்களை எடுத்துக்கொண்டு மதுமான்லே என்ற கிராமத்திற்குச் சென்றோம். பித்தோர்கார்ட் என்ற இடத்திலிருந்து இந்த மதுமான்லே சரியாக 25 கி.மீ. தொலைவில் உள்ளது. வழியில் சல்மோடா, நைனி, பாதல், லச்சேர்

போன்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம் நாங்கள் எங்கள் வாகனங்களை நிறுத்தி கர்த்தருடைய ஊழியங்களைச் செய்து கொண்டு செல்லும் வழியில் ஒரு மனிதர் தன்னை ஏற்றிக்கொள்ளும்படியாகத் தனது கையைக் காண்பிக்கவே நாங்கள் அவரை ஏற்றிக்கொண்டு மதுமான்லே சென்றடைந்தோம். மதுமான்லே கிராமத்தின் சிறிய கடை வீதியில் சுவிசேஷ பிரசுரங்களை நாங்கள் விநியோகித்துவிட்டு அந்தக் கிராமத்தின் பள்ளத்தில் அமைந்துள்ள மேல் நிலைப் பள்ளியில் பிரசுரங்களைக் கொடுப்பதற்காக அவைகள் போடப்பட்ட அட்டைப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்குச் சென்றோம். பள்ளி இன்னும் ஆரம்பமாகவில்லை. அதற்குள்ளாக தலைமை ஆசிரியரின் அனுமதியைப் பெற்றுவிடலாம் என்று எண்ணிக்கொண்டு நாங்கள் அவரை அணுகினோம். ஆனால், அவர் அனுமதி தர தயக்கம் காண்பித்தார். அந்த வேளை நாங்கள் வழியில் ஏற்றி வந்த மனிதர் அங்கு வந்தார். அவர் அந்தப் பள்ளியின் ஆசிரியர்களில் ஒருவராவார். அவரும் அந்த நேரத்தில் வந்து தன்னுடைய தலைமை ஆசிரியரை எங்களுக்கு அனுமதி கொடுக்கும்படியாக வற்புறுத்தினார். அதற்கும் அவர் இணங்கவில்லை. கடைசியாக, நாங்கள் எல்லாரும் அட்டைப் பெட்டிகளுடன் காத்து

நிற்பதைக் கண்ட அந்தப் பள்ளியின் குமஸ்தா நாங்கள் அங்கு வந்திருப்பதின் காரணத்தை எங்களிடம் கேட்டார். நாங்கள் அவரிடம் விபரத்தைச் சொன்னபோது தேவனுடைய சுவிசேஷப் பிரசுரங்களில் சிலவற்றைத் தன்னிடம் காண்பிக்கும்படியாகக் கேட்டார். நாங்கள் கொண்டு சென்ற பிரதிகளை அவரிடம் காண்பித்தபோது அவைகளை அவர் கவனமாக வாசித்துப் பார்த்துவிட்டு அந்தப் பிரதிகளில் எந்த ஒரு தீங்கான காரியங்களும் எழுதப்படவில்லை என்றும், பிள்ளைகள் எல்லாரும் அவைகளைத் தாராளமாகப் படிக்கலாம் என்றும் சொல்லிவிட்டார். ஒரு சாதாரண குமஸ்தாவுக்கு தலைமை ஆசிரியரைவிட அதிக அதிகாரமா என்று நினைக்கின்றீர்களா? அவர் பள்ளியின் குமஸ்தாவாகவிருந்த போதினும் அந்த மதன்மான்லே கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் அவர்தான் என்பதை நாங்கள் பின்னர்தான் அறிந்தோம். நாங்கள் சென்ற நேரம் பள்ளி மைதானத்தில் ஏதோ ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அது முடிவுற்றதும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கெல்லாம் பிரதிகளைக் கொடுக்க எங்களிடம் கூறிவிட்டார். அந்தப்படியே, அந்த அன்புள்ள மனிதருக்கு நாங்கள் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டு அந்த மைதானத்தில் வைத்தே அனைத்து மாணவ மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் தேவனுடைய பிரசுரங்களை ஜெபத்துடன் விநியோகம் செய்தோம். ஹிந்தி மொழி புதிய ஏற்பாடுகளை ஆசிரிய பெருமக்களுக்கு மற்றப் பிரதிகளுடன் சேர்த்துக் கொடுத்தோம். எல்லாரும் மகிழ்ச்சி பொங்க வாங்கிக் கொண்டனர். தேவன் தமது ஊழியம் அந்த இடத்தில் தடையின்றி நடைபெற ஒரு பள்ளி குமஸ்தாவை ஆயத்தம் செய்து வைத்திருந்தார். கர்த்தருக்கே துதி உண்டாவதாக. மதுமான்லே கிராமத்தை நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.

''கர்த்தாவே எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக, உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக'' (எண் 10 : 35)

சாமாவில் நடைபெற்ற தேவ ஊழியம்

பாகேஷ்வர் என்ற இடத்திலிருந்து சாமா என்ற இடம் 44 கில்லோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக இதே சாமா என்ற இடத்தில் நாங்கள் வந்து தேவ ஊழியம் செய்திருக்கின்றோம். அதைக் குறித்த விபரங்களை நான் தேவ எக்காளத்தில் ஏற்கெனவே எழுதியிருக்கின்றேன். இந்தத் தடவை அந்த சாமா என்ற இடத்திலுள்ள ஒரு

பெரிய மேல் நிலைப் பள்ளியில் எப்படியாவது சுவிசேஷப் பிரசுரங்களைக் கொடுத்துவிடவேண்டுமென்ற ஒரே தாகத்தில் சில பெட்டிகளில் தேவனுடைய பிரசுரங்களை எடுத்துக்கொண்டு அந்தப் பள்ளிக்குச் சென்றோம். இந்த ஒரே ஒரு ஊழியத்தைச் செய்ய மட்டும் நாங்கள் பித்தோர்ட்கார்ட் பட்டணத்திலிருந்து நாங்கள் சாமாவுக்கு வந்ததாக நினைத்துவிடவேண்டாம். வழித்தடத்தில் நாங்கள் நிறைய ஊழியங்களைச் செய்து கொண்டே அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தோம். பள்ளியில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்ததால் நாங்கள் அவர்களுக்கு இடைஞ்சலாக இராதபடிக்கு நண்பகல் இடைவேளைக்காகப் பொறுமையோடு காத்திருந்தோம்.

நாங்கள் ஆண்டவருடைய பிரசுரங்களுடன் வந்திருப்பதை அறிந்து கொண்ட தந்திர சாத்தான் தனது ஏவலாளனான ஒரு மனிதனை எங்களுக்கு முன்பாக அனுப்பினான். அந்த மனிதன் நாங்கள் செல்லவிருந்த பள்ளிக்குச் சென்று அங்குள்ள தலைமை ஆசிரியரிடம் ஏதேதோ பேசிவிட்டு எங்களண்டை வந்து தலைமை ஆசிரியர் வெளியே சென்றுவிட்டார் என்றும், அவருடைய அனுமதியின் பேரில்தான் மாணவர்களுக்கு பிரதிகளைக் கொடுக்க முடியும் என்றும் சொல்லிவிட்டு ஊருக்குள் போய்விட்டான். நாங்கள் அவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கொள்ளாமல் நாங்கள் பள்ளியின் அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கும் அன்பின் தேவன் ஒரு குமஸ்தாவையே எங்களுக்கு உதவியாளனாக ஆயத்தம் செய்து வைத்திருந்தார். மதுமான்லே கிராமத்தில் இருந்த குமஸ்தாவைப் போலவே இந்த மனிதர் சாமா கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்தார். அந்த அன்புள்ள மனிதர் நாங்கள் கொண்டு சென்ற கிறிஸ்தவ பிரசுரங்களைப் படித்துப் பார்த்துவிட்டு அவைகளை தாரளமாக மாணாக்கர்கள் படிக்கலாம் என்றும், அவைகளில் எந்த ஒரு தவறான காரியங்களும் எழுதப்படவில்லை என்றும், தனது உடன் பிறந்த சகோதரன் கூட பித்தோர்கார்ட் பட்டணத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ மேல்நிலைப் பள்ளியில் படித்து நற்பண்புள்ளவனாக வாழ்கின்றான் என்று கூறி பள்ளி இடை வேளையில் நாங்கள் கொண்டு சென்ற பிரசுரங்களைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார். அந்தப்படியே பள்ளியின் மணி அடித்ததும் சில நூற்றுக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் பள்ளியை விட்டு வெளியே வந்தனர். கர்த்தருடைய கிருபையால் எல்லாருக்கும் தேவனுடைய பிரதிகளை ஜெபத்தோடு கொடுத்தோம். பள்ளியின் ஆசிரியர்களும் தங்களுக்கும் பிரதிகள் வேண்டும் என்று கேட்கவே அவர்களுக்கும் கொடுத்து அனுப்பினோம்.

அந்த மாணவர்களில் சாத்தானால் தூண்டிவிடப்பட்ட சில விஷமிகள் எங்கள் மீது சிறுசிறு கற்களைக் கொண்ட மண்ணை வாரிப் போட்டனர். ஒருவன் நாங்கள் கொண்டு சென்ற கைப்பிரதிகளின் அட்டைப் பெட்டியின்

காலி அட்டையை பாஸ்டர் சகோதரன் சாமுவேல் அவர்கள் மேல் வீசி எறிந்தான். இரண்டு மூன்று பையன்கள் அப்படியே என்னை நெருக்கி பள்ளத்தில் தள்ளிவிட முயற்சித்தனர். கர்த்தர் என்னைக் கிருபையாகக் காத்துக் கொண்டார். இந்தக் காரியங்களும் ஒருக்கால் அந்த துஷ்ட மனிதன் வந்து பேசிச் சென்ற காரணத்தாலேயே ஒருக்கால் நடந்திருக்கலாம் என்று நாம் நம்பலாம், மற்றப்படி எல்லா மாணவர்களும், மாணவியர்களும் நல்ல கிரமமாக நாங்கள் கொடுத்தவற்றை மகிழ்ச்சியோடு வாங்கிச் சென்றனர். அந்த இடத்தில் விதைக்கப்பட்ட ஜீவ விதைகள் முப்பது, அறுபது, நூறுமான பலன் தர நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் அந்தப் பள்ளியில் எங்கள் ஊழியத்தை முடித்துவிட்டு சாமா கடை வீதிக்கு வரும்போது ஆரம்பத்தில் சாத்தானால் ஏவிவிடப்பட்ட அந்த மனிதன் நமது தேவ ஊழியர் சகோதரன் ஜெபராஜ் அவர்களிடம் வந்து நீங்கள் அந்தப் பள்ளியில் உங்கள் பிரசுரங்களைக் கொடுத்தீர்களோ என்று கேட்டிருக்கின்றான். அதற்கு நமது சகோதரன் பிரதியுத்தரமாக ஒரு மாணவன் கூட பாக்கியில்லாமல் எல்லாருக்கும் நாங்கள் கொடுத்து முடித்துவிட்டோம் என்று கூறவே அவன் வேறு வார்த்தை பேச இயலாமல் போயிருக்கின்றான். இந்தவிதமாக தேவன் எங்களுக்காக யுத்தம் செய்து தமது நல்ல நாமத்தை மகிமைப்படுத்தினார்.

ஒரு நாள் நாங்கள் பித்தோர்கார்ட் பட்டணத்திலிருந்து பூரான் என்ற ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று அந்தக் கிராமத்தின் முகப்பிலுள்ள ஒரு பெரிய தண்ணீர் டாங்க் அருகில் எங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு கிராமத்தினுள் சென்று அனைத்து வீடுகளுக்கும் சுவிசேஷம் அளித்தோம்.

அந்தக் கிராமத்தில் மிகவும் வசதியான ஒரு மனிதரிடம் நமது தேவ ஊழியர்கள் தேவனுடைய சுவிசேஷ செய்தியைப் பகிர்ந்து கொண்ட போது அந்த மனிதர் மிகவும் தாகத்துடன் அதைக் கேட்டதுடன் தனது கிராமத்தில் தனது வீட்டிலேயே வந்து தங்கியிருந்து இந்த செய்தியை தன் ஊர் மக்களுக்கெல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கும்படியாகச் சொன்ன வார்த்தைகள் எங்கள் அனைவரின் உள்ளத்தையும் பலமாக அசைப்பதாக இருந்தது. அப்பொழுது நமது தேவ ஊழியர் சகோதரன் ஜெபராஜ் அவர்கள் ''நானே இந்த பூரான் கிராமத்திற்கு மிஷனரியாக வந்து தங்கி சுவிசேஷம் அறிவிக்கப் போகின்றேன்'' என்று சொன்னார்கள். கர்த்தருக்குத் துதி உண்டாவதாக. நாம் கண்ணீரோடு விதைக்கும் விதைகள் ஒருக்காலும் வீண் போகாது. உத்தராஞ்சலில் உள்ள மக்களைத் தேவன் சந்தித்து அவர்களைக் கொண்டு பலத்த காரியங்களைச் செய்வார் என்று நாம் விசுவாசிக்கலாம். அந்த உத்தராஞ்சல் மாநிலத்தின் கிராமங்களில் உள்ள வீடுகளில் நான் ஆச்சரியத்துடன் பார்க்கும் ஒரு தாவரம் செண்டுப்பூ செடியாகும். அந்தச் செண்டுச் செடியில் பூக்கும் பூக்களும் எந்த ஒரு இடத்திலும் இல்லாத அளவிற்கு அத்தனை பெரியதாகும். அத்தனை பெரிதான செண்டு பூக்களை பிறப்பிக்கும் அந்த மாநிலத்திலிருந்து தேவன் நமது அற்பமான சிறிய ஊழியங்களிலிருந்து பெரிய தேவ மக்களை

உருவாக்க நாம் ஊக்கமாக ஜெபிப்போம். நாங்கள் சுவிசேஷம் அறிவித்த பூரான் கிராமத்தையும், ஒரு வீட்டின் முன்பு பூக்களுடன் பூத்துக் குலுங்கிய செண்டுப்பூ செடியையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்..

நாங்கள் சென்ற கிராமங்கள், நாங்கள் ஊழியம் செய்த இடங்கள், நாங்கள் சுவிசேஷம் கொடுத்த பள்ளிகள் ஏராளமுண்டு. நாங்கள் சுவிசேஷத்துடன் சந்தித்த மக்கள் பல்லாயிரம் பேர்கள் உண்டு. எல்லாவற்றையும் குறித்து விபரங்களை இங்கு எழுத இயலாது. எல்லாம் கர்த்தரில் மறைவாக இருக்கின்றது. மிகவும் இரத்தினச் சுருக்கமாக தேவப் பிள்ளைகளாகிய உங்களுக்கு எழுதியிருக்கின்றேன். இந்த உண்மையும், உத்தமமுான தேவ ஊழியத்திற்கு கரம் நீட்டி உதவி செய்த அருமையான தேவப் பிள்ளைகள், இந்த ஊழியத்தில் நேரிடையாகவும், மறைமுகமாகவும் பங்குபெற்ற ஆண்டவருடைய மக்கள், இந்த ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தோர், நிந்தை அவமானங்களை சகித்து, பாடுகள் கஷ்டங்களின் ஊடாக ஊழியம் செய்த கர்த்தருடைய தாசர்கள் அனைவரின் பலன்களும் பரலோகில் உண்டு. அந்த மாநிலத்தில் விதைக்கப்பட்ட தேவனுடைய ஜீவ விதைகள் நுறு மடங்கு பலனைத் தர தொடர்ந்து அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் கொடுத்த சுவிசேஷப் பிரதிகளை ஆசை ஆவலோடும், மிகுந்த கருத்தோடும் வாசிக்கும் மக்களின் சில காட்சிகளை நீங்கள் கண்டு கர்த்தரைத் துதிக்கவும், அந்த ஆத்துமாக்களுக்காக நீங்கள் ஜெபிக்கவும் உங்களுக்காக வெளியிட்டிருக்கின்றேன். கர்த்தருக்கே அனைத்து துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஆமென்.

என் அருமை பில்லி (பில்லி கிரஹாம்)

என் ஜீவ காலமெல்லாம், இயேசு கிறிஸ்து, எந்த ஒரு கொடிய பிரச்சினைகளுக்கும் போதுமானவர் என்றே நான் பிரசங்கித்து வந்திருக்கின்றேன். இப்பூமியில் ஒரு சில நாட்கள் மட்டுமே நான் இன்னும் உயிர் வாழக்கூடும். ஆயினும், ஓ ! பில்லி, நிச்சயமாகவே இயேசு, மரண வேளையிலும் கூடப் போதுமானவராகத் தானிருக்கின்றார். இது உண்மை என்று ஒவ்வொரு மக்களிடமும் நீ சொல்லு. தேவன், தம்முடைய பிள்ளைகளின் பிரயாண ஓட்ட முடிவின் ரஸ்தாவில் வெகு அதிசயமான பிரகாரம் அவர்களுக்குச் சமீபமாயிருக்கின்றார் என்று என் வாழ்வின் அனுபவத்திலிருந்து நீ அவர்களுக்குச் சொல்.

Dr. W. E. Sangster.

STOP











DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970



Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press